ஓம்

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

# ஈழகேசரி

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியிடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருவது)

"நன்மை கடைப்பிடி"

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்பு பாராட்டு முலகு"

"நாடொப்பன செய்"

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னுமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—சூ. | யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவஹூ புரட்டாதிமீ சூஉ (22-9-35) ஞாயிற்றுக்கிழமை | பகுதி—கஉ.

## தோத்திரம்

அங்கைகொடு மலர்தூவி யங்கமது புளகிப்ப அன்பினு லுருகி விழிநீர்
ஆருக வாராத முத்தியின தாவேச ஆசைக் கடற்குள் மூழ்கிச்
சங்கர சுயம்புவே சம்புவே யெனவுமொழி தழுதழுத் திட வணங்குஞ்
சன்மார்க்க நெறியிலாத் துன்மார்க்க னேனையுந் தண்ணருள் கொடுத்தாள் வையோ
துங்கமிகு பக்குவச் சனகன்முதல் முனிவோர்கள் தொழு தருகில் வீற்றிருப்பச்
சொல்லரிய நெறியையொரு சொல்லா லுணர்த்தியே சொரூபானு பூதிகாட்டிச்
செங்கமல பீடமேற் கல்லா லடிக்குள்வளர் சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணு மூர்த்தியே சின்மயா னந்த குருவே.

—தாயுமானசுவாமிகள்

# எந்தாய் வாழ்க!

[சுவாமி சுத்தானந்த பாரதி]

(குறவஞ்சி மெட்டு)

வெற்றிமுர சொலித்திடுவோம் வீரர்களே வாரீர்!
விழித்தெழுந்தாள் சத்தியன்னை செழித்ததவச் சுடராய்.
அற்றதிருள் வறுமைதுயர் அச்சமினி யில்லை;
ஆற்றல்மிகத் தந்திடுவாள் கூற்றினையும் உதைப்பாள்.

கள்ளவிழும் பூந்துகளை அள்ளிவரும் தென்றல்
கனிவிருந்துண் டிசையெடுக்கும் கட்டறியாப் புட்கள்
ஒள்ளியநல் லோடைகளின் தெள்ளிய ஓங்காரம்
ஓதிடவே நாதமறை சோதிவரு கின்றாள்.

அருள்பழுத்த பழச்சுவையின் அரியகனி மொழியாள்
அருவியெனக் கவிதருவாள் அன்புமலர் சொரிவாம்!
இருளரக்கர் நடுநடுங்க இடிமுரச மார்த்தாள்
இன்னியர்வாழ் வமுதுகக்கப் புன்னகையை வார்த்தாள்.

சாதிமத பேதமற நீதிபுரி யரசி
சமதர்மக் கொடியுயர்த்தி சத்தியக்கோல் பிடித்தாள்;

ஆதிசிவ சக்தியவள் அறிவணையில் வீற்றாள்;
அருளனலுந் திருவிழியால் கருணைவளம் பொழிவாள்!

கண்ணன்குழல் கேட்டுருகக் கந்தன்மயி லாடக்
காவிரியாழ் மீட்டுகின்றாள் கலைகளெலாம் பணிய;
தண்கடல்பல் லாண்டிசைக்கத் தாங்குகின்றாள் உலகைத்
தளரியற்கைப் பச்சழகி தமிழரசி எந்தாய்!

திருவைகை பருணியொளிர் சிலம்படியி னருகே
திகழுகின்ற திலங்கையன்னந் தவழுகின்ற தின்பம்;
†இருவரைகை லாகுதர இளமணக்கால் வீச
எங்களன்னை விளங்குகுன்றாள் மங்களச்சங்கொலிப்போம்.

வரங்களெல்லாம் வழங்குகின்றாள் கரங்களெல்லாம்
குவிப்போம்!
வாழிபரா சக்தியென்று மந்திரங்கள் ஜபிப்போம்
சிரங்களெல்லாம் ஒற்றுமையாய்ச் சேர்ந்துவழி படுவோம்
திக்கெல்லாம் எதிரொலிக்க ஜயகோஷம் புரிவோம்!

† மேற்குத்தொடர்ச்சி கிழக்குத்தொடர்ச்சி மலைகள்

—"கவிதாமண்டலம்."

"உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்— வீணில், உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்."

# கடிதங்கள்.

## சைவவித்தியாவிருத்திச் சங்கமும் வித்தியாசாலைகளும்

'ஈழகேசரி'ப் பத்திராதிபர் அவர்களுக்கு:

ஐயா பத்திராதிப!

உண்மையை உரைக்குங்கால் எவருக்கும் அஞ்சவேண்டியதில்லையென்ற துணிவினாலும், தங்கள் கேசரி நீதியையும் உண்மையையும் நிலைநாட்டுவான்வேண்டி உழைப்பதாலும் இக்கடிதம் தங்கள் கேசரிவாயிலாக வெளிவரவேண்டுமென்ற பேர் அவாவுடன் எழுதலானேன். தயைகூர்ந்து வெளியிடுவீராக!

தனிப்பட்ட ஒருவரின் முகாமையின் கீழ் உள்ள வித்தியாசாலைகளில்தான் முகாமைக்காரர் தாங்கள் விரும்பியவாறு ஆசிரியர்மாரை விலக்கவும், நியமிக்கவும், மாற்றவும், தாங்கள் விரும்பிய பணத்தை அவர்களுக்குச் சம்பளமாகக் கொடுக்கவும் இயலுமென்றும், சங்கங்கள், சபைகள், போட்டுகள்மூலம் நடாத்தப்படும் வித்தியாசாலைகளில் இவ்வித சம்பவங்கள் நிகழமுடியாதெனவும் நம்பப்பட்டுவந்தன. தற்போது சைவமக்கள் யாவருக்கும் பொதுவாகவுள்ள சைவ வித்தியா விருத்திச்சங்க ஆதீனத்திலுள்ள சில வித்தியாசாலைகளில் காணப்படும் குறைகளையும் ஒழுங்கீனங்களையும் நோக்குங்கால் மிகவும் விசனத்துக்கிடமாக விருக்கின்றன. இச்சங்க வித்தியாசாலையின் முகாமைக்காரர் நடந்துகொள்ளும்முறை மிகவும் கண்டிக்கக்கூடியது. இற்றலி, ஜெர்மனி முதலிய நாடுகளிலுள்ள சர்வாதிகாரிகள்போல இவரும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் சர்வாதிகாரியென மதித்துத் தாம் விரும்பிய போதெல்லாம் போதிய சாவகாசம் கொடாது ஆசிரியர்மாரை மாற்றியும், விரும்பத்தகாத சில ஆசிரியர்மாரைச் சில வித்தியாசாலைகளில் வைத்திருந்தும், இன்னும் பல முறையற்ற செய்கைகளைக் காரிய நிர்வாகசபையின் அங்கீகாரம்பெற முன்னதாகச் செய்தும்வருகிறார் என அறிகிறோம். இவருடைய முறையற்ற செயல்களைக்கண்ட சைவப் பெரியார் பலர் இச்சங்கத்தின் தொடர்பை நீக்கியமை பலரும் நன்கு அறிவர். இச்சங்கத்தைச் சரியான முறையில் நடந்துவரச் செய்யவேண்டியது இச்சங்கத்துக்குப் பொருள் உபகரிப்போரினதும், சைவப்பெரியாரினதும் கடமையாகையால் இதுவிஷயத்தைக் கவனிப்பார்களென நம்புகிறோம். இப்படியாக நடந்துவரவிடுவதாயின் காலகதியில் இந்தஸ்தாபனம் யாவராலும் புறக்கணிக்கக்கூடிய நிலைமையை அடையுமென்பது திண்ணம்.

முகாமைக்காரர் தம்விருப்பத்துக்கு மாறாகநடக்கும் ஆசிரியர்களுக்குச் செய்யும் அநீதியும், தன்சார்பாக நடப்போருக்குக் காட்டும் சலுகையும் இம்மாத்திரமன்று. பொதுவாகக் கூறுமிடத்து, தற்காலம் இச்சங்கத்துக்குப் பெருந்தொகைப் பொருள் உதவுவோர் ஆசிரியர்மார் என்று கூறுதல் மிகையாகாது.

சட்டசபைத் தெரிவுகாலங்களிலும், இன்னும் வேண்டியபோதெல்லாம் இந்த முகாமைக்காரருக்குப் பலவகையிலும்உதவி செய்வோர் ஆசிரியர்மார் என்பதை எவரும் மறுக்கார். இவர் முகாமைசெலுத்தும்வித்தியாசாலைளிற் பல, ஊரவர்களால் பெருந்தொகைப்பணம் செலவிட்டு ஆக்கப்பட்டவை. இவ்வாறு இருந்தும் ஊரவர்களின் விருப்பத்துக்கு மாறாக வித்தியாசாலைகளை நடாத்துவதும், ஆசிரியர்மார் பாதிக்கப்படக்கூடிய செய்கைகளைச் செய்வதும் எவ்வளவு அநீதமானமுறை என்பதை வாசகநேயர்கள் சிந்தித்துணர்வார்களாக.

மயிலிட்டி தெற்குப் பாலர் ஞானோதயசங்க வித்தியாசாலையிலிருந்த ஆசிரியர் திரு. அ. பொன்னையாவின்பொருட்டு இச்சங்க முகாமைக்காரர் நடந்துகொண்ட முறை மிகவும் வெறுக்கத்தக்கது. பலராலும் விரும்பத்தகாத இந்த ஆசிரியரைமாத்திரம் மாற்றி இன்னொருவரை அவருடைய இடத்துக்கு நியமித்துக் காரியங்களைச் செவ்வனே நடாத்துவதற்குப் பதிலாக, அவரையும், அவ்வித்தியாசாலையிலுள்ள மூன்று உதவி ஆசிரியர்மாரையும் ஒருவித நியாயமுமின்றிச் சென்ற ஆவணிமாதம் 5-ந்திகதி 24 மணித்தியால அறிவித்தல்தானுமின்றி வெவ்வேறு இடங்களுக்கு மாற்றிவிட்டனர். இதனால் ஊரிலும், வித்தியாசாலையிலும் குழப்பங்களும் கிளர்ச்சிகளும் ஏற்படலாயின. திரும்பவும் ஆவணி மாதம் நியமித்த தலைமை ஆசிரியரைப் புரட்டாசிமாசம் 1-ந்திகதி மாற்றிவிட்டார். இந்தமாசம் தொடக்கம் இவவித்தியாசாலைக்குத் தலைமைஆசிரியர் இல்லை. சென்ற ஒருவாரமாக வித்தியாசாலை மூடப்பட்டிருக்கிறது. பொதுவாகக் கூறுங்கால் சென்ற ஆனி மாதம் தொடக்கம் இவ்வித்தியாசாலை மிகவும் ஒழுங்கீனமாக நடைபெறுகின்றது. குறித்த பொன்னையாவின்பொருட்டுச்செய்தஉடன் மாற்றங்களால் செவ்வனேநடந்துவந்த குப்பிழான் வித்தியாசாலையிலும் இந்தமாசம் தொடக்கம் குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்வித்தியாசாலையை ஸ்தாபிக்க ஏதுவாயிருந்த தலைமை ஆசிரியர் எவ்வித நியாயமுமின்றி வேலைசெய்யாது தடுக்கப்பட்டிருக்கிறார். மயிலிட்டிதெற்கு வித்தியாசாலையில் தலைமை ஆசிரியரோடு ஒத்துழைக்க முடியாது மாற்றப்பட்ட ஆசிரியர்மாரோடு திரும்பவும் பொன்னையாவை அங்கே தலைமை ஆசிரியராக நியமித்தனர். இவ்வித குழப்பங்களால் இவ்வித்தியாசாலையும் சென்ற ஒருவாரமாக மூடப்பட்டிருக்கின்றது. இந்த முகாமைக்காரன் நடந்துகொண்டமுறையால் மயிலிட்டிதெற்கு வித்தியாசாலை ஆசிரியர்மார் மூவர், குப்பிழான் வித்தியாசாலை ஆசிரியர்மார் மூவர், வடலிஅடைப்புவித்தியாசாலை ஆசிரியர் ஒருவர், பலாலி வித்தியாசாலை ஆசிரியர் ஒருவர் ஆகிய எண்மர் பலவிதத்தாலும் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம். பிள்ளைகளின் படிப்புக் கெட்டுப்போகின்றதெனப் பெற்றார் வருந்துகின்றனர். இவ்வித்தியாசாலைகளைப் பெருந்தொகைப் பணம் செலவிட்டு ஸ்தாபித்துச் சங்கத்துக்குக் கையளித்தோர் செய்வ தின்னதெனத் தெரியாது விளிக்கின்றனர். முகாமைக்காரர் எவரின் நன்மையையும் நோக்காது தாம்கொண்ட எண்ணத்தை நிறைவேற்றத் தீர்மானித்துக்கொண்டனரேயன்றி ஊரவர்கள், பிள்ளைகள், ஆசிரியர்மார் இவர்களின் நன்மையை நாடுவதாய்க்காணோம். ஒருவருக்காக இவ்வளவு பெருந்தொகையானோர் ஏன் பாதிக்கப்படவேண்டுமென்பது எமக்கு ஆச்சரியமாகவிருக்கின்றது.

இவ்வித்தியாசாலைகளில் ஏற்பட்டுள்ள குழப்பங்கள் யாவும் சங்கக் காரிய நிர்வாக சபை அங்கத்தினருக்கும், வட பெரும்பாக வித்தியாதரிசிக்கும் நன்கு தெரியும். ஆதலின் இவர்களும், இச்சங்கத்தின் ஏனைய அங்கத்தவர்களும், சங்க அபிமானிகளும் இதுவிஷயமாக வேண்டியன கூடிய சீக்கிரம் செய்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

க. பொன்னம்பலம்
மயிலிட்டிதெற்கு.
13-9-35.

## B. A. பட்டதாரிகளும் தமிழ்ப் பண்டிதர்களும்.

'ஈழகேசரி'ப் பத்திராதிபர் அவர்களுக்கு:

ஐயா,

நாம் ஆங்கில அரசினரின் கீழிருக்கின்றபடியால் எம் அரசாட்சியாரின் சன்மானம் தமிழ்ப்பாஷையிலும் ஆங்கிலபாஷைக்குக் கூடவிருப்பது ஓரளவுக்கு உண்மைதான். ஆனால் தமிழ்ப்பண்டிதர்களும் அவர்களோடு அனுதாபப்படும் வேறு சிலரும் ஓலமிடுகிற அளவிற்கு அரசாட்சியார் வித்தியாசம் காட்டுகிறார்களென்று நாம் கூறுவது தவறாகும். ஆங்கிலத்தில் B. A. பட்டம்பெற்றவர்களுக்கு எத்தனையோ விஷயங்களைக் கற்றுத் தம் அரிய மனோசக்திகளை விருத்திபண்ணுவதற்கு ஏற்றதருணமிருப்பதுபோலத் தமிழ்ப்பண்டிதர்களுக்கும் இருப்பதாகக் கூறுவதற்கு எவரும் துணியார். தமிழ்ப்பண்டிதர்கள் தமிழ்ப்பாஷையிலுள்ள இலக்கண இலக்கியங்களையேயன்றி வேறு எவ்விஷயத்தையாவது பண்டிதப்பட்டம் பெறுவதற்குக் கற்கவேண்டிய அவசியமுமில்லை; எம் நாட்டிலுள்ள தமிழ்ப்பண்டிதர்கள் வேறு விஷயங்களை ஆர்வத்தோடு கற்பதாக நாம் கேள்விப்படவுமில்லை. இலக்கண இலக்கியங்களை எவ்வளவு அதிகமாகக் கற்றபோதும் ஒரு மனுஷன் தன்னுடைய அறிவை வளர்ப்பதற்கும், மனதை விரிந்த நோக்குடையதாகச் செய்வதற்கும் அது போதியதன்றென்பது எவர்க்கும் தெரிந்த விஷயம். அப்படியிருக்கவும் யோசனையின்றிச் சிலர் பண்டிதர்களுக்காகப் பரிதாபப்படுவதைப்பார்க்கப் பெரும் பரிதாபமாயிருக்கின்றது. தமிழ்ப் பண்டிதர்களுக்குத் தக்க சம்பளமும் சன்மானமும் கொடுபடவேண்டுமென்பதை எவரும் ஒத்துக்கொள்வர். ஆனால் எத்தனையோ பல்வேறு திறப்பட்ட விஷயங்களில் பாண்டித்திய மடைந்த தன்பயனாய் B. A. பட்டம் பெற்றவர்களையும் இலக்கண இலக்கியம் மாத்திரம் கற்ற தமிழ்ப் பண்டிதர்களையும் ஒரேதன்மை யுடையவர்களாகக் கருதி ஒரே சம்பளம் கொடுக்க வேண்டுமென்றுரைப்பது தமிழ்ப்பாஷையில் சிலருக்கிருக்கும் அபிமானத்திற்கு ஓர் அறிகுறியாகுமேயன்றி அது நீதியின்பாற்பட்ட பேச்சன்று. ஆசிரிய கலாசாலையில் கற்றுத்தேறுபவர்கள் 125 ரூபாவரைக்கும் மாதவீதம் சம்பளம்பெறத் தக்கதாயிருக்கவும் இலக்கண இலக்கியத் தமிழ்ப் பண்டிதர்கள் 20 ரூபாமாத்திரம் பெறுவதற்கு அருகதையுடையவர்களாயிருப்பதற்கு நியாயமென்னவென்பது அவர்களுக்கு நன்றாய்த்தெரியும். இலக்கண இலக்கியங்களை அதிகமாகக்கற்ற சில தமிழ்ப் பண்டிதர்கள் வேறுவிஷயங்களைக் கற்பதற்கு வெட்கப்படுகின்றனர். இவர்கள் சில காலத்திற்கு முன் ஆசிரிய கலாசாலையிற் சேர்ந்து பயிற்றப்படுவதற்கும் ஆர்வமற்றவர்களாயிருந்தது அனேகர் நன்கறிந்த விஷயம். ஆனால் இலக்கண இலக்கியம் மாத்திரம்கற்று விட்டதனால் கல்வியின் கரைகண்டதாகக் கருதாது அநேக தமிழ்ப்பண்டிதர்கள் இந்நாட்களில் ஆசிரிய கலாசாலைகளிற்சேர்ந்து பயிற்றப்படுவதற்கு விருப்பமுள்ளவர்களாயிருக்கின்றார்கள். இனிமேலாவது தமிழ்ப்பண்டிதர்கள் ஓலமிடுஞ்சத்தம் குறையுமென்பதற்குச் சந்தேகமில்லை. உலகத்தின் பலபாகங்களிலும் வழங்கும் பல்வேறு வகைப்பட்ட பாஷைகளில் எழுதப்பட்ட சிறந்த நூல்களனைத்தும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதினால் அப்பாஷையைக் கற்றவர்கள் மற்றப்பாஷைகளிலுமுள்ள சிறந்தஇலக்கியங்களையும் அப்பாஷைமூலம் கற்கத்தக்கதாயிருக்கின்றது. மேற்கூறிய நூல்களெல்லாம் தமிழ்ப்பாஷையிலும் மொழிபெயர்க்கப்பட்டிருந்தால் தமிழ்ப்பண்டிதர்கள் கற்கத்தக்கதாயிருக்கும். அப்படிச்செய்ய இயலாமலிருக்கும்வரைக்கும் தமிழ்ப்பண்டிதர்கள் தங்களை ஆங்கிலத்தில் B. A. முதலிய பட்டங்களைப் பெற்றவர்களோடு ஒப்பிட்டுப்பார்த்து ஓலமிடுவதைவிடுத்துச் சித்தசமாதானத்துடன் சிறந்து வாழ்வார்களாக.

பலபாஷாபிமானி,
காங்கேசன்துறை.
9-9-35.

## ஊரெழுக் கலகம்

### மதுவினுல் மண்ணுய்ப்போன பஸ்வண்டி

(விசேட நிருபர்.)

இம்மாதம் 13-ம்வ மாலை 5.30 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து H 1038 இலக்கமுள்ள பஸ்வண்டி 10, 12 ஆட்களுடன் ஊரெழுவுக்கு வந்து அவ்வூரிலுள்ள வயிரவநாதர்—கந்தையாவின் கடைக்குமுன் நிற்பாட்டிக் கலகம்பண்ணி, அவரின் மனைவியார் எண்ணிக் கணக்கிட்டுக்கொண்டிருந்த காசு 24 ரூபாவையும் ஓர் சிறு சருவச்சட்டியுடன் எடுத்துக்கொண்டு கோப்பாயிலுள்ள கள்ளுத்தவறணைக்குச் சென்று மறுபடியும்ஊரெழுவுக்கு வந்தார்களெனவும் ஷை கந்தையாவின் வீட்டில் அவ்வூர்த் தலைமைக்காரர் நடந்த சம்பவங்களை விசாரித்துக்கொண்டு நின்றதாகவும், பஸ்வண்டி அவ்வூர்ப் பிள்ளையார் கோவிலுக்குக் கிட்டச்சென்று பின் யாழ்ப்பாணம் சென்றதாகவும், முன்நடந்த கலகக் கூக்குரலுக்கு வந்துநின்ற சனங்கள் பஸ்வண்டிக்குக் கல்லால் எறிந்ததாகவும், அக்கல்லெறியை நிற்பாட்டும்பொருட்டுத் தலைமைக்காரர் வந்து முயற்சிசெய்தும் இயலாமையால் பொலிஸ் உதவிவேண்டித் தந்திகொடுக்கச் சென்றார்களெனவும், பஸ்வண்டி உடனே திரும்பி யாழ்ப்பாணம் சென்றதாகவும், ஊரெழுவுக்குப் பொலிசார் வந்தபோது கலகம் நின்றுவிட்டதென்றும், குறித்த பஸ்வண்டி சாவகச்சேரிப்பாதையில் ஓடும் வழக்கமுடையதெனவும் இத்தெருவுக்குக் குறித்த கலகத்திற்காகவே வந்ததெனவும் அறிகின்றோம். என்னே காலத்தின் கோலம்!


எல்லோரும்
நட்க்ஷேத்திர
(ஸ்ட்டார்) அடையாளமுள்ள
உருக்கினுற் தயாரிக்கப்பெற்ற





(ரிஜிஸ்டர் செய்யப்பட்டது)

பாத்திரங்களையே
வாங்குகிறார்கள்.

இதனை வாங்குவது:
இதன் பெயருக்கும் மதிப்புக்குமன்று. ஆனால்,
இதன் நெடுங்காலப் பாவிப்புக்கும்
உயர்தரமான வேலைப்பாட்டிற்குமே!!
இலங்கையில் எவ்விடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லா விதமான இரும்பு, பித்தளைச்சாமான்களும் ஜர்மன் உள்ளூர் கைவாளிகளும், கேத்தல், தோசைக்கல் முதலிய மற்றும் இதர சாமான்களும் கிடைக்கும். விலை சகாயம்.

இறக்குமதி தனி ஆட்களும் வியாபாரிகளும்:
அ. மு. சி. சீனிமுகம்மது தம்பி அன் பிறதர்ஸ்,
122, மூன்றாம் குறுக்குத்தெரு,
கொழும்பு.

**பத்திரக்கிரயம்**
இலங்கை, இந்தியா, பர்மா ரூபா 4.
மலாய்நாட்டுக்கு வெள்ளி 4.
சீவியசந்தா ரூபா 40.
தனிப்பிரதி சதம் 5.
இந்தியாவுக்கு „ அணா 1.
மலாய்நாட்டுக்கு „ காசு 5.

# ஈழகேசரி

**விளம்பரவிகிதம்**
முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 7-00
„ அரைக்கலம் „ 4-00
„ கால்கலம் „ 2-50
அரசியல்சம்பந்தமான விளம்பரங்களுக்குச் சலார் வேறு.

தொகுதி—சு. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவவருஷ புரட்டாதிமீ' உஉ (22-9-35) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—கஉ.

## நாகர்.

[“விவேகானந்தசபை” இயற்றமிழாசிரியர் சிவங். கருணாலயபாண்டியப் புலவர் அவர்கள்.]

(பதிப்புரிமை ஆக்கியோர்க்கேயுரித்து.)

கி. பி. யாண்டு 133-க்கும் 135-க்கும் இடைப்பொழுதைக்கட்பட்டதெனத் தேறப்படும “மணிமேகலை துறவு” எனும் பௌத்தப் பெருஞ் செய்யுளானும் “பாட்டும்” “தொகையுமாய” மேற்கணக்கு கீழ்க்கணக்கு என்றிவற்றிடை ஓரோவழிப் பெறப்படும் குறிப்புரையானும் இங்ஙனம் தமிழ்மொழியினேயன்றி கீழைப்பொழில் (தீபம்) மொழிக்கண் வரலாற்றுச் செய்யுளானும இவ்விரு வேறிடத்துக். கேள்வி மரபானும (கர்ணபரம்பரை) பெயர்வழக்கானும் பிறவற்றானும் இற்றைக்குச் சிறிது ஏறக் குறைய ஆயிரத்தைந்நூற்றியாண்டை முன்னை இமிழ்திரை ஞாலத்துத் தமிழகத்திடத்தும் கமழ புகழ் கீழைப் பொழிலகத்திடத்தும கல்விப் புலமையும் செல்வத் தலைமையுமாய சிறப்பியல் (நாகரிகம்) முதலிய பல்லாற்றானும் வல்லாங்கு வாழ்ந்து போந்தாராகக் கேட்கப்படுகின்ற நாகர் எனப்படும் ஒருசார் மக்கள் மரபின் றிறம் இன்று வழக்காறொழிந்தமையிற் றெற்றெனப் புலனாகாதாயிற்றாக அன்னதனைப் பொழுதிடையிட்ட சேய்மையவற்றையும் புலமிடையிட்ட சேய்மையவற்றையுமஆராய்தற்கண்விளையும் ஓரின்பம் நுகர்வான் செல்லும் வேணவாவானே, புலன்சென்றமட்டும், வாய்க்குந் துணைகொண்டு ஆராய்தலை நுதலிமேற்கொள்ளப்பட்டது இவ்வுரைச்செய்யுள்.

இனி, நாகர் எனப்படும் சொல்லை யாராய்வுழி அச்சொற்றான் ஒருசார் மாந்தரையேயன்றி புத்தேளிர்குழாம்பதினெட்டனுள்ளும கீழ் ஞாலமு (பாதாளம்) றையும பாம்பர் எனப்படும் பிறப்பினரையும் அப்பதினெண்மருளாளும் தலைவராய வேந்தன் (இந்திரன) முதலிய முப்பத்துமூவர் தொகுதியையும் குறிக்கும் பலபொருளொருசொல்லாய் இவ்விரு கடவுளரையும் உணர்த்துங்கால் முறையே வடவியற்சொல்லும் வடதிரிசொல்லுமாமெனக் கொள்க. இது,

> “நாகநீணகரொடு நாகநாடதனொடு
> போகநீள்புகழ் மன்னுபுகார்நகர்”

என்னும் சிலப்பதிகார மங்கலவாழ்த்துப் பாடற்பகுதி உவமங்காட்டிய வாற்றான் விளங்கும். இவ்விருகூற்றினரும் புத்தேளிர்குழாத்துட்பட்டாரென்பதனைச் சிலப்பதிகாரத்து இந்திரவிழவூரெடுத்த காதையிலே அடியார்க்கு நல்லார் எடுத்துக் காட்டிய,

> “கின்னரர் கிம்புருடர் விச்சா தரர்கருடர்
> பொன்னமர் பூதர் புகழியக்கர்—மன்னு
> முரகர் சுரர்சா ரணர்முனிவர் மேலாம்
> பாகதியோர் சித்தர் பலர்.”

> “காந்தருவர் தாரகைகள் காணுப் பசாசகணம், வந்துபுகழ் மேய விராக்கதரோ—டாய்ந்ததிறற், போகா வியல்புடைய போகபூமி யோருடனே, யாகாச வாசிகளா வார்”

என வரூஉம் மேற்கோள் வெண்பாக்களினும் இவற்று வழி ஆகாசர் நாகர் என்று தொடங்கிச் செல்லும் உரைநடையினும், திருமுருகாற்றுப்படை நச்சினார்க்கினியர் உரையினும் புறநானூற்றுக் கடவுள்வாழ்த்துச் செய்யுளுரையினும் பிங்கல முதலிய நிகண்டுகளினும் புராணச்செய்யுளினும் ஆரிய மந்திரங்களினும் கண்டுகொள்க. இவர்கள் இவ்வுலகத்தினரல்லர் எனப ஆதலின் இவரின் வேறுவர் மாந்தராகிய நாகர். இந்நாகர் தமிழ்நாடு தொட்டுத் தென்பெருங் கடற்கட் டென்பால தென்கீழ்பாற் பொழில்களாய சிங்களம், ஈழம், முதலிய பன்னாட்டினும உறைந்திருந்தார் எனக் கருதப்படினும இவர்கள் மிக்குச் செறிந்து சிறந்து வாழ்ந்திருந்த பொழில்வள நாட்டினை அம்முதனிலை (காரணம்) யான் “நாகநாடு” என வழங்கினர். இஃதிப் பெயரிற்றென்பதூஉம் இலங்கைத் தீவத்துக்குக் கீழ்க்கண்டதென்பதூஉம்,

> “கீழ்நில மருங்கி னாகநா டாளு
> மிருவர் மன்னவர் ஒருவழித் தோன்றி”

எனவும்,

> “வேனல் வெந்திற னாகநாட் டரசர்”

எனவும்,

> “நாக னாடு நடுக்கின் றாள்பவன்
> வாகை வேலோன் வளைவணன் றேவி”

எனவும்,

> “நாகநன் னாட்டு நானூறு யோசனை”

எனவும் வரூஉம் மணிமேகலை துறவடிகளான இனிதுணரலாகும்.

இனி, இந்நாடுதான் கலத்திற் சேறற்பாற்றென்பதூஉம அதனுலே நாகர் எனப்படுவார் மாந்தர் என்பதூஉம் ஒருங்கு, அற்றைஞான்று இந்நாட்டு வேந்தன் பூமி சந்திரன் மகன் புண்ணியராசன என்பானொருவன் அடிகள் மணிமேகலையாரால் செவியறிவுறுத்தப்பட்டு நினைவுற்று மரக்கலமேறிச் சென்று மணிபல்லவப் பொழிற்கண் வந்துற்றனன் எனும் வரலாற்றுக்குறிப்புணர்த்தும்,

> “கலஞ்செய் கம்மியர் வருகெனக் கூஉ
> யிலங்குநீர்ப் புணரி யெறிகரை யெய்தி
> வங்க மேறினன் மணிபல் லவத்திடைத்
> தங்கா தக்கலம் சென்றுசார்ந் திறுத்தலும்
> புரைதீர் காட்சிப் பூங்கொடி பொருந்தி
> யரைசன் கலமென றகமகிழ் வெய்தி
> காவலன் றன்னொடுங் கடற்றிரை யுலாவுந்
> தேமலர்ச் சோலைத் தீவகம் வலஞ்செய்து”

என வரூஉம் இருபத்தைந்தாம் காதை யடிகளாற் றுணியப்படுமாறு காண்க. இதனானும் “கீழ்நில மருங்கினாக நாடாளும்” என்னுழிக் கீழ்நிலம் கீழுலகமன்மை தெளிக்தனம். *

இனி அந்நாளிலே இலங்கைத் தீவத்தது தலையூர் இலங்காபுரமெனப் பெயர் வழங்கப்பட்டிருந்தமைபோலவே இந்த நாகத்தீவத்தது தலையூர் நாகபுரமெனப் பெயர் வழங்கப்பட்டிருந்தமை,

> “நாகபுரமிது நன்னகரான்வோன்
> பூமிசந்திரன்மகன் புண்ணியராசன்”

எனு மடிகள் உணர்த்துகிற்கும்.

இனி, இந்நாடு நாகரைப் பௌத்தத் துறவிகள் புக்குச் சாவகராக்கியதன் பின்னர்ச் சாவகநாடெனவும் ஆவுக்குப் புத்திரனாகப்பிறந்த சிறப்புடை மன்னனால் ஆளப்பட்டமையின் ஆபுத்திர நாடெனவும் பெயர்த்தாய்த்து.

சாவகராவார் பௌத்தரில் இல்லறத்தார். சாவகர் என்னுஞ்சொல் கேட்பவர் என்னும் பொருட்டு சிராவகர் என்னும் வடமொழிச் சிதைவு. எனவே பௌத்தத் துறவிகளது செவியறிவுறூஉவினைக் கேட்பவர் என்றவாறு. சாவகம் என்பது காரண விடுகுறிப்பெயர். நாகநாடு சாவகம் எனப்படுதலை நாகபுரத்திற் பிறந்த புண்ணிய ராசனை,

> “மணிபல்லவத்திடை மன்னுயிர்நீத்தோன்
> தணியாவுயிருயச் சாவகத்துதித்தனன்”

என்றலான் உணர்க. ஆபுத்திரநாடென்னும் பெயருண்மை,

> “ஆபுத்திரநா டடைந்ததற்பின்னன்
> மாசின்மணிபல்லவந் தொழுதேத்தி”

என்றற் றொடக்கத்து மேற்கோள்களானுணர்ந்துகொள்க.

இனி, இச்சாவகம் மொழிபெயர் புலம் என்பதூஉம் தமிழ்சூழ் நாடு பதினெட்டனுள் ஒன்றென்பதூஉம்,

> “சிங்களம் சோனகம் சாவகஞ் சீனந்
> துளுக்குடகம், கொங்கணம் கன்னடங் கொல்லந் தெலிங்கம் கலிங்கம் வங்கம், கங்க மகதம் கடாரங் கௌடங் கடுங்குசலந், தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்புவி தாமிவையே”

என்னுங் கட்டளைக் கலித்துறையாற் புலனாகும். எனினும் இச் சாவக மொழி தமிழினின் வேறன்று, மலையாளமபோன்ற தமிழின் றிரிவேயாம் என்பதனைப் பின்னர் நாகர் என்ற சொற்பொருட் காரணம் ஆராய்வுழித் திரிபின்றி விளக்குதும.

இனி, இலங்கைப் பொழிலகத்து யாழ்ப்பாணம் எனும் பொழிலெச்சம் (தீபகல்பம்) நாகத்தீவம் என வழங்கப்படுதலும் அதனுட் சாவகச்சேரியென ஒரு மூதூர் வழங்கப்படுதலும் இந் நாகநாட்டாராய சாவகரது குடியேற்ற வாழ்க்கைக் காரணத்தானேயாம். அல்லதூஉம் இலங்கைய திருகூற்றினுள் வடக்கட்கூற்றினை நாகத்தீவம் என்பாருமுளர். இனி, சாவகச்சேரி எனும பெயர் தமிழ்ப் பௌத்தச் சாவகர் சேரவிருந்தமையிற் பெற்ற பெயரெனினுமாம். இனி, தமிழ்நாட்டுள்ளும் நாகபட்டினம் என்பதூஉம் இந்நாகராற் பெற்ற பெயரேயாம். இதனான் நாகர் இனமிகுதியான் தந்நாடுபோதாது ஏனைமேலைநாடுகளின்கண்ணும் அரசியலும் கொண்டு விளிறலைத்துறையும் முதலிய பலவுந் தலைக்கிடாக குடிபுக்குறைந்துள்ளாரென்பது பெறுதலோடே மரக்கலவியக்கத்தே மாட்சிமைப்படப் பயின்றிருந்தாரென்பதூஉம் அறியப் பெறுதும்.

இனி, இந் நாகர்தாம் தமிழ்நாட்டு மன்னர் நட்புரிமைபெறுதற் பொருட்டும் தமிழகத்துப் போக்குவரவியக்கம் உடையராயினமை ஆபுத்திரனுடைய கஞ்சுகன் மணிமேகலையைப்பற்றி வினாயின மன்னனுக்கு அவள்திறம் உரைக்குங்கால்,

> “நாவலந் தீவின் நங்கையை யொப்பார்
> யாவரு மில்லை யிவடிற மெல்லாங்
> கிள்ளி வளவனொடு கெழுதகை வேண்டிக்
> கள்ளவிழ் தாரோய் கலத்தொடும் போகிக்
> காவிரிப் படப்பை நன்னகர் புக்கேன்
> மாதவ னறவண னிவள்பிறப் புணர்த்தாங்
> கோதின னென்றியா னன்றே யுரைத்தே
> னங்கவ ளிவளவ் வகநகர் நீங்கி
> யீங்கு வந்தனள்”

எனச் செப்புமாற்றாற் பெறப்படும். அக்காலை ஆபுத்திரனொடு நட்டசோழன் கிள்ளிவளவன் எனப்படுவான். எனவே தமிழகத்து மக்கள் மேலையாராய கடம்பர், யவனர் என்றிவரோடும் வடமராய ஆரியர், பல்லவர், சளுக்கர், கங்கர், வாணர், இரட்டர், கௌடர், துருக்கர், மாராட்டிரர், தெலுங்கர், கன்னடர் என்றிவர்களோடும் தொடர்புடையராய்ப் பயின்றிருந்தது தெளியப்படுதல்போலவே கீழையராய நாகரோடும் தொடர்புடையராய்ப் பயின்றிருந்தமை தெளியப்படும். இனித் தமிழ்நாட்டிற்குச் செந்தெற்கு பிற்பொழுது நிலமில்லா தொழிந்தமையின் தமிழ்நாடே தென்னாடாய் தமிழரே தென்னவரெனப்படுவாராதலின், தென்னவர் பிறரிலராயினர். இனி, இச்சாவகம் எனும் சொற் சிதைந்து ஜாவா என வழங்குவதுண்மையின் இக்கால ஜவா என வழங்கப்படுவதே நாகநாடென்பது தெளிக. (தொடரும்)

* கீழ்நிலம் கீழ்த்திசையிலுள்ள இடம், நாகர் என்னும் ஒருவகை மனிதர்வாழும் நாடு நாகநாடென்பா என்னும் மணிமேகலைக் குறிப்புரை யாசிரியர் குறிப்பும் ஈண்டு குறித்துக்கொள்ளற்பாறது.

## ஆசிரிய தராதர பத்திர வகுப்பு
### (Teachers' Certificate Class)

மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் 18-9-35 தொடக்கம் ஷை வகுப்பு வைத்து நடத்தப்படும். ஷை வகுப்பிலும் சி. பா. த. வகுப்பிலும (S. S. C. Class) சேரவிரும்புவோர் 30-9-35 க்குமுன் தங்கள் விண்ணப்பப் பத்திரங்களைத் தலைமை ஆசிரியருக்கு அனுப்பவேண்டும். விடுதி வசதியும் உண்டு.

க. பா. த. பரீட்சையில் சித்தியடைந்து சி. பா. த. பரீக்ஷை எடுக்கக் காலம்போதா திருப்பவர்களுக்காக, யா. ஆ. தி. பா. சங்கப் பிரவேசவகுப்பும் வைத்து நடத்தப்படுகிறது. அவ்வகுப்பில் 1-10-35 க்குமுன சேர்பவர்கள் 36-ம் ஆண்டுப் பிரவேசப் பரீக்ஷைக்குத் தோற்றலாம்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம்,
தலைமை ஆசிரியர்.
சை. பி. வித்தியாசாலை
மூளாய்—சுளிபுரம்.
(30) 15-9-35—2.

அன்போடு பொருந்தியவுடலே யுயிருள்ளவுடலாகும். அவ்வன்பில்லாவுடலேயுயிரற்றவுடலாகும்.

## "ஆகாயவசனி" (15-9-35)

கொழும்பு

—குல. சபாநாதன், வெள்ளவத்தை.

# சின்னத்தம்பிப் புலவர்

"பெற்றதாயும் பிறந்தபொன்னாடும் நற்றவ வானினும் நனிசிறந்தனவே" யென்றார் பாரதியார். எம்மைப் பெற்ற தாயைப் போற்றவேண்டும். யாம் பிறந்த தாய்நாட்டைப் போற்றவேண்டும். தாய்நாட்டு மொழியைப் போற்றவேண்டும். தாய்நாட்டு மொழிவல்ல புலவர்களைப் போற்றவேண்டும். எனவே தமிழராய யாம் தமிழ்ப் புலவர்களைப் போற்றவில் குறைபடுதல் கூடாதென்பது நன்கு தெரிகின்றது. மேனாட்டில் விளங்கிய புலவர்களாய ஷேக்ஸ்பியர், மில்(ற்)றன், உவோட்ஸ்வோத் முதலியோரை அந்நாட்டவர் எவ்வளவு சிறப்பாகப் போற்றி அவர்களின் புகழைத் தம்மொழியிலன்றிப் பிறமொழியிலும் நிறுவி நீடித்து நிற்கச்செய்து வருகின்றார்கள். தமிழர்களோவெனின் தமதுநாட்டிற்பிறந்த புலவர்களின் பெயரைத்தானும் அறியாதிருக்கின்றார்களென வெட்கத்தோடு தெரிவிக்கவேண்டியவனாயிருக்கிறேன். இக்காலத்திலே தேசியக்கிளர்ச்சி தேசியக்கிளர்ச்சி எனப் பலர் சத்தமிடுகின்றனர். அதாவது உள்நாட்டு விளைபொருளைப பாவித்தல், உள்நாட்டுத் துணிகளை உபயோகித்தல், உள்நாட்டவர்க்கு உத்தியோகப் பதவியளித்தல் முதலிய எண்ணங்கள் நடமாடும் இக்காலத்தில் உள்நாட்டுமொழியைப் பேணும் கிளர்ச்சியும் அம்மொழியில் வல்ல புலவர்களைப்போற்றும் கிளர்ச்சியும் சேர்ந்தாலன்றோ ஒருநாடு சிறக்கும். இதனை யாம் இனனும் உணராதிருததல் வெட்கம்! வெட்கம்!! பிறதேயப் புலவர்களைப்பற்றி யறியத்தொடங்குமுன் உங்கள்நாட்டுப் புலவர்களைப்பறறி யறிதல் அவசியம். ஷேக்ஸ்பியர், மில்(ற்)றன் முதலியோரை அறியததொடஙகுமுன வள்ளுவர், கம்பன், மணிவாசகர் முதலிய புலவர்களைப்பற்றி அறிதறகாவது தெண்டியுங்கள். ஒவ்வொரு நாட்டவனும் தன தன் ஊரிலுள்ள புலவர்களைப்பற்றிப் பெருமைகொண்டு அவர்களைப்பற்றிய புகழைத் தந்நாட்டில் மட்டுமன்றி எந்நாட்டிலும் பரவச்செய்தல்வேண்டும்.

தமிழ்ச்சங்க காலந்தொட்டே இலங்கையிலும் தமிழ்ப்புலவர்கள் இருந்திருக்கின்றார்களென்பதற்கு அவர்கள்பாடியபாட்டுக்களேசான்றாகும். முரஞ்சியூர்முடிநாகராயர், ஈழத்துப் பூதன்றேவனார்போலப் பல புலவர்கள் இருந்திருக்கவேண்டும். இவ்வளவு சிறந்த நாட்டில் இற்றைக்கு ஏறக்குறைய இருநூற்றாண்டுகட்கு முன்பினாக நல்லூரில் இருந்தவரே சின்னத்தம்பிப் புலவர் என்பவர். ஊர்கட்குள் நல்லூர் ஒரு நல்ல ஊர் என்றே சொல்லவேண்டும். இவ்வூரில் தமிழரசர்கள் மாளிகைகட்டி அரசுபுரிந்திருக்கிறார்கள். இவ்வூரிலேதான் நாவலர் ஐயா அவர்களும அவதரித்தார்கள். எனவே வசனமும் செய்யுளும் ஈழத்தில் சிறந்தது இந் நல்லூரிற்பிறந்த அறிஞர்களாலென்பது தெரிகின்றது.

சின்னத்தம்பிப் புலவருடைய தகப்பன்பெயர் வில்லவராயமுதலியார். கி. பி. 1707-இல் தேசவழமையினைத் திருத்துமாறு நிறுவிய சபையின் தலைவராகவிருந்தவில்லவராய முதலியாரே இப்புலவரின் தகப்பன் என்பர் ஒரு சிலர். அவருக்குப்பின் 18-ம் நூற்றாண்டின்பிற்பகுதியிலிருந்த வேறொரு வில்லவராயமுதலியாரே இப்புலவரின் தகப்பனாவரென இன்னொருசாரார் சொல்லுகின்றனர். அங்ஙனஞ் சொல்வோருள் தலைசிறந்தவர் முதலியார் இராசநாயகம் அவர்கள். இவ்வாராய்ச்சி இன்னும் முற்றுப்பெற்றிலது. பாருங்கள்! இதிலும் தமிழர்களுடைய ஊக்கமின்மை தெரிகிறது. எவ்வளவோ ஆண்டுகட்குமுன்னிருந்த புலவர்களின் பிறப்பு இறப்புத் திகதிகளைக்கூட ஆராய்ந்து மேனாட்டார் கூறிவிடுகின்றார். தமிழர்களோவெனின், கேவலம், ஐந்நூறு அல்லது ஆயிரம் ஆண்டுசென்ற காலத்தைப் பற்றியதன்று; இருநூறாண்டுகட்கு மேற்படாத ஒருபுலவரின் காலத்தைச் சந்தேகமின்றி நிச்சயிக்க முடியாது திண்டாடுகிறார்கள். இலங்கைத் தமிழர் செய்நன்றிமறந்த கொடும் பாதகர்களென்றேகூறவேண்டும்.

இப்புலவர் பெயராற் சின்னத்தம்பியெனினும் அறிவாற் பெரியதம்பியாய் விளங்கினர். இளமைதொட்டே கலைமகளருளாற் கவிபாடுந் திறன் வாய்க்கப்பெற்றவர். இதனைக்குறித்துப் பல சரித்திரங்களுள. அவற்றுள் இரண்டொன்றைமட்டும் உங்கட்கு இப்பொழுது சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

இந்தியாவிலுள்ள புலவரொருவர் வில்லவராய முதலியார் மீது ஓர் பிரபந்தத்தினைப் பாடி அதனை அவர் முன்னர் அரங்கேற்றிச் சன்மானம் பெற்றுச்செல்வதற்காக நல்லூருக்கு வந்தார். வந்த புலவர் முதலியாருடைய வீட்டுக்கு முன்னொருமுறையேனும் சென்றிலராதலின, அவ்வீட்டுக்குச் செல்லும் வழியினை யாரிடமாவது கேட்டறியலாமென்ற நோக்குடன் அங்குமிங்கும் நோக்கினார். அப்போது பாக்குக்கட்டி விளையாடிக் கொண்டிருந்த சிறு பையன்களைக் கண்ணுற்று அவர்கட்கருகே சென்று, "பிள்ளைகாள்! வில்லவராய முதலியார் வீடு இந்தத் தெருவீதியிலிருக்கிறதாம். அந்த வீடு எதுவென்பதை உங்களுள் ஒருவர் காட்டிவிட முடியுமா?" எனக் கேட்டார். பிள்ளைகள் யாவரும் தங்கள் விளையாட்டை நிறுத்தி குறித்தவோர் பையனையே நோக்கி நின்றார்கள். கலைமகளருள் பெற்ற இச்சிறுபயலும் சும்மாவிருந்திலன். முதலியார் வீட்டினைக் காட்டற்குப் புலவரைக் கூட்டியும் சென்றிலன். பொடியன் வாய்திறந்ததும் பாட்டுத்தான் கிளம்பிற்று. அதனைப் பாடிமுடிக்கவேண்டியவனாயினன். அதுவும் எத்தகைய பாவெனின், புலவர் புலியென அஞ்சும் வெண்பா. இப்பாவே இக்கவியாகிய கற்பகதருவின் முதற்கிளையாகும். அதனை இப்பொழுது படித்துக்காட்டுகின்றேன்.

"பொன்பூச் சொரியும் பொலிந்த செழுந் தாதிறைக்கும், நன்பூ தலத்தோர்க்கு நன்னிழலாம்—மின்பிரபை, வீசுபுகழ் நல்லூரான் வில்லவரா யன்கனக, வாசலிடைக் கொன்றை மரம்."

தெருவில் பாக்குக்கட்டி விளையாடிக்கொண்டிருந்த மூடச் சிறுபயல் தட்டுத்தடக்கின்றி சொற்பூச் சொரிந்த திறனைக்கேட்டு வியப்பும் திகைப்பும ஒருங்கெய்தியவராய் அச்சிறுவனைக் கட்டித்தழுவி முத்தமிட்டார். புலவர் "இப்பிள்ளை யாருடைய புதல்வன்" என வினவியறிந்தபின், "தம்பி! நீர் பேர்பெற்ற வரகவியாகவரும் அருளுண்டு. அங்ஙனமே சிறந்து விளங்குமாறு கருணையங்கடலாய கடவுள் அருள்புரிவாராக. உன்னைப்பெற்ற முதலியாரின் பாக்கியமே பாக்கியம். உனது பேரினால் குலமுழுதும் சிறப்படையப்போகின்றது.

"நன்றிதரும் பிள்ளையொன்று பெற்றாலும் குலமுழுதும் நன்மை யுண்டாம், அன்றியறி வில்லாத பிள்ளையொரு நூறு பெற்றும் ஆவ துண்டோ, மன்றில்நடம் புரிவாரே தண்டலையா ரேசொன்னேன் வருடந்தோறும், பன்றிபல ஈன்றுமென்ன குஞ்சரமொன் றீன்றதனால் பயனுண்டாமே"

எனக்கூறிச் சென்றார் இவ் வடதேயப்புலவர். இதன்பின்னர் இவர் வரகவியென அழைக்கப்பட்டார்.

சின்னத்தம்பி இளமையில் கல்விகற்றலில் வெறுப்புற்று மாடுமேய்க்கும் பிள்ளைகளோடு ஆள்வாரிலி மாடுபோல விளையாடித் திரிவதில் அதிக விருப்புற்று, பள்ளிக்குக் கள்ளம் பண்ணித் திரிந்தாரென்றும் கூறுப. இஃதியற்கைப் புலவர்களது இயல்பு போலும். வில்லவராய முதலியார் தமது கல்வியறிவிற்கும் தகைமைக்கும் ஏற்ப, தம்முடைய பிள்ளையும் கல்வியறிவுடையனாதல் வேண்டுமென்னும் பெருவிருப்புடையராய் மகனைப் பள்ளிக்கூடத்திற் கனுப்புவது வழக்கம். என்னை! தந்தைமகற்காற்று நன்றியவையத்து முந்தியிருப்பச் செய்வதாதலின். அன்றியும் தன்னைச் சிறுவயதில் படிப்பிக்காது விட்ட குற்றம் தந்தையினதேயென்னப் பின்னர் பிள்ளை வருந்தவுங் கூடும்.

"அள்ளிக்கொடுக்கின்ற செம்பொனும் ஆடையு மாதரவாய்க், கொள்ளிக்கும் பட்ட கடனுக்கும் என்னைக் குறித்ததல்லால், துள்ளித் திரிகின்ற காலத்தி லேஎன் துடுக்கடக்கிப், பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய பாதகனே"

என்னும் குற்றத்திற் காட்படாமலிருக்க விரும்பி பலவகையாலும் பள்ளிக்கனுப்பவே தெண்டித்தார். கல்வி கற்றலைப்பார்க்கிலும் விளையாட்டில் கண்ணுங்கருத்துமா யிருந்ததன் மகனைக் காணுந்தொறும் முதலியாரவர்கட்கு மனவருத்தம் அதிகரித்துக்கொண்டே சென்றது. பன்முறை தண்டித்தும் பிள்ளை திருந்தும் அறிகுறி சிறிதளவேனும் தோன்றவில்லை. என்செய்வார் பாவம்! "யான் அடையக்கூடிய சிறந்த செல்வங்களுள் மக்கட் செல்வம் சிறந்ததுதான். இதனாலன்றோ, திருவள்ளுவர், "பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த மக்கட்பே றல்லபிற" எனக் கூறியிருக்கின்றார். எனினும் பெற்றோரெல்லாம் பிள்ளைகளல்லர் என்பதுண்மைதான். என்னுடைய பிள்ளையெனப் பெருமகிழ்வுடன் யாவரும் அழைத்தற்குரிய தவத்தைச்செய்யாத பாவியானேன்.

"அச்சமுள் ளடக்கி யறிவகத் தில்லாக், கொச்சை மக்களைப் பெறுதலி னக்குடி, எச்சமற் றேமாந் திருக்கை நன்றே" (நறுந்தொகை)

அறிவும் ஆண்மையுமில்லாத மக்களைப் பெறுவதைப் பார்க்கிலும், பிள்ளையின்றிக் களித்திருப்பது நன்றெனவே எனக்குத் தெரிகின்றது. இவன் வீட்டிலிருப்பதினும் இல்லாதிருப்பது உத்தமம். என தில்லம்நாடி வருகின்ற அறிஞர்கட்கும் புலவர்கட்கும் இம்மூடனை எனதுமகன் என அறிமுகப்படுத்தி வைக்க என் மனமானது தயங்குகின்றதே. கல்லாவொருவனை நாய் எனக் கருதுவான்றோ?

"கல்லாது நீண்ட வொருவ னுலகத்து
நல்லறி வாள ரிடைப்புக்கு—மெல்ல
விருப்பினு நாயிருந் தற்றே யிராஅ
துரைப்பினு நாய்குரைத் தற்று" (நாலடி)

"யான்செய்த தீவினை இங்ஙனம் வந்து சூழ்ந்ததுபோலும்" எனப் பன்முறை சிந்தித்து மனமுடைந்தார் முதலியார். பிள்ளையின் செயல்கள் சிறிது சிறிதாக வெறுப்பையுண்டாக்கியதால் ஒருநாள் முதலியார் மகனை வீட்டினின்றும் துரத்திவிட்டார். மகற்குற்றதைப் பெற்ற தாய் அறிந்து ஈன்ற மனம் பொறாது அவனை ஆதரிக்க முயன்றாள். முதலியார் இல்லாத சமயத்தில் வந்து சாப்பிடுவதும் வேறிடத்தில் தங்குவதுமாகச் சில காலங் கழித்தான். இங்ஙனம் மறைவாக வந்து திரியும் நாட்களிலொரு நாள், முதலியார் கல்வளைப்பகுதியிலுள்ள விநாயகர்மீது ஓர் செய்யுளியற்றத்தொடங்கி முதலிரண்டடியினையும் எழுதிவிட்டு ஏனையவிரண்டடியும் அத்தருணம் மனதிற்படாமையால் அவ்வோலைச்சுருளை அறையினொருபகுதியிற் சொருகிவைத்துவிட்டுக் கந்தோருக்குச் சென்றார். சென்றபின் வழக்கம்போல வீட்டுக்கு வந்த பையன் சின்னத்தம்பி, அவ்வோலைச்சுருளைக் கண்ணுற்றான். மூலைமுடக்குகளிலுள்ள சாமான்களைப்பார்க்கும் இவனுக்கு இவ்வோலை தென்பட்டது ஒரு வியப்பன்று. அவ்வோலைச்சுருளையெடுத்து விரித்துப்பார்த்தான். பார்த்தபின் ஏனைய இரண்டடிகளையும் இலகுவில் நிரப்பி யிருந்தவிடத்திற்றானே வைத்துவிட்டுப் போய்விட்டான். பின்னர் அந்திப்பொழுதில் கச்சேரி வேலைமுடிந்து வீட்டுக்குத் திரும்பிவந்த முதலியார், தான் முன்னர் எழுதிய செய்யுளில் ஏனையவிரண்டடிகளையும் எழுதுவதற்காக ஓலையினை விரித்துப்பார்த்தபொழுது செய்யுள் பூர்த்தியாக்கப்பட்டிருததலைக்கண்டு வியப்புற்று தனது மனைவியிடம்சென்று, "யான் இல்லாத நேரத்தில் இன்றைக்கு யாராவது வந்ததுண்டா?" என வினவினர். தனது மகன் என்ன குறும்பு விளைத்தானோ எனப் பயந்த தாயானவள, "வேறொருவரும்வர.... வில்லை" என இழுத்திழுத்து விடையளித்தாள். முதலியார் மீட்டும் வற்புறுத்திக் கேட்டபொழுது, "அவன் தம்பிதான் இன்றைக்குக் கொஞ்சநேரம் வந்துநின்றான். வேறெவரேனும் யானறிய வரவில்லை" எனப் பயத்தோடு பதிலளித்தாள். இதைக்கேட்ட முதலியார் முகமலர்ச்சியுடையராய் புன்முறுவல்தோன்ற நின்றார். தனது மகன் வரகவியெனப் பிறர்கூறிய துண்மையென உணர்ந்தார். நடந்தேறிய செய்தியைத் தமதுமனைவிக்கும் கூறி மகிழ்ந்து மகனை மீட்டும் வீட்டுக்குவரும்படி உத்தரவிட்டார்.

சின்னத்தம்பிப் புலவர் கம்பராமாயணத்தில் மிக்க பயிற்சியும் நுணுகிய ஆராய்ச்சியும் உடையவரென்பதற்கு ஒரு சரித்திரமுண்டு. தமிழறிஞரும் கொடைவள்ளலுமெனப் புகழப்பட்டு வண்ணார்பண்ணையில் புலவர்காலத்தே வாழ்ந்த அந்தணகுலதிலகம் கணேசையர் என்பவர் பல புலவர்களை யழைத்து அவர்களுடன் நூல்கள் ஆராய்வதிலும் அவர்கள் அளவளாவலைக் கேட்டு மகிழ்வதிலும் காலங்கழித்து அருங்கலைவிநோதராக விருந்தாரென்றும், ஒருநாள் கம்பராமாயணச் செய்யுளொன்றுக்குத் தெளிவாக உரைகூற முடியாது அங்குள்ள புலவர்கள் மயங்கினார்களென்றும், அவ்வமையம் அங்கு உற்றுக் கேட்டுக் கொண்டிருந்த இளம் புலவன் சின்னத்தம்பி அச்செய்யுட்கு அழகியதோர் விரிவுரை அங்கிருந்தார் யாவரும் வியக்குமாறு கூறி அனைவரையும் மகிழ்வித்தானென்றும், இந்நிகழ்ச்சியைக் கண்டின்புற்ற ஐயர் அவர்கள் "பண்டாரக்குளம்" எனும் பெயருடைய நெல்வயலை இப்புலவருக்கு சன்மானமாகக் கொடுத்தார்களென்றும், கர்ணபரம்பரைக்கதை யொன்றுளது. இன்னும் இவர் காவெட்டியிலுள்ள வேலாயுத முதலியார் மீது ஒரு கோவைப்பிரபந்தம்பாடி ஒவ்வொரு செய்யுட்கும் ஒவ்வொரு பொற்றேங்காய் பரிசிலாக வழங்கப்பெற்றவரென்ப. (தொடரும்)

இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி, வேளாண்மை செய்தற் பொருட்டு.

## மாயமாய் மறைந்த மேரிப்பிள்ளை

### மணியகாரனல் மட்டுவிலில் பிடிக்கப்பட்டாள்

மல்லாகம்—18, புதன்

சென்ற 4-ம்உ புதன்கிழமை மாலை 3.30 மணியளவில் அச்சுவேலியைச்சேர்ந்த பத்தைமேனிவாசியாகிய சூ. சவரிமுத்து அவர்களின் மகள் மேரிப்பிள்ளை என்னும் இளமங்கை தனது இளைய சகோதரியுடன் அவ்வூர்க் கத்தோலிக்க ஆலயத்துக்குச் சென்ற பொழுது, அவ்வூர்வாசிகளாகிய குரிசுமுத்து, சிங்காரசா, தம்பு, தோமஸ்பிள்ளை ஆகியவர்களும், கிட்டிணன் என்னும் ஒருவரும் Q 708 இலக்கமுடைய மோட்டாரிரதத்துடன் அவ்வாலயத்துக்கு அணித்தாகக் காத்திருந்து குறித்த மேரிப்பிள்ளையைப் பலவந்தமாகத் தூக்கி அம்மோட்டாரிரதத்திலேற்றிக்கொண்டு புலோலிப் பக்கமாகச் சென்றனராம். அவ்வூர்த் தலைமைக்காரரும் பொலிசாரும் 13 நாட்களாக இவர்களைத் தேடிப்பிடிக்கப் பல எத்தனங்கள் செய்தும் பயனடையவில்லை. பின்பு வலிகாகம்வடக்குக்கிழக்கு மணியகாரன் (முதலியார் திரு. நா. வேலுப்பிள்ளை) அவர்கள் குரிசுமுத்துவையும் மேரிப்பிள்ளையையும் தவிர மற்றவர்களைப்பிடித்து மறியலிலிடுவித்தார். மற்ற எதிரியையும் பெண்ணையும் பலவிடங்களிலும் தேடி ஈற்றில் கடந்த 17-9-35 செவ்வாய்க்கிழமை இரவு 12 மணியளவில் மட்டுவில் வடகிலிருப்பதாக அறிந்து மணியகாரனும், அச்சுவேலி, பத்தைமேனி, வயாவிளான ஆகியவிடங்களின் விதானைமாரும், அவரின் பிரதம எழுத்தாளனும, சேவுகனும் இன்னும் மூவருமாக அவ்விடம் சென்று தெருவிலிருந்து ½ மைலுக்கப்பால் மேற்கூறிய குரிசுமுத்துவையும் பெண்ணையும் பிடித்தார்கள். உடனே அவர்களின் வாய்ப்பிறப்பு பதிவுசெய்யப்பெற்றுப் புன்னாலைக்கட்டுவனிலுள்ள மணியகாரன் கந்தோருக்கு இரவு 2 மணியளவில் கொண்டுவரப்பட்டனர். மறுநாட் காலை மல்லாகம் பொலிஸ்கோட்டு நீதிபதிமுன் அவ்விருவரின் இனபந்துக்கள் கூடியிருக்க ஒப்புவிக்கப்பட்டு பிணையில் விடப்பட்டனர்.

சென்ற 15 நாட்களாகப் புத்திரியைப் பிரிந்திருந்த தந்தை தாயர் மல்லாகம் கோட்டில் பட்ட அல்லோல கல்லோலத்துக்கு அளவேயில்லை. இம்மனக்கலக்கத்தைத் தீர்த்துவைத்த மணியகாரனின் செயலகள் மெச்சப்படத்தக்கன. ஷெ மணியகாரனவர்கள் இதில் எடுத்துக்கொண்ட சிரத்தையைப்போல மற்றும் பிரதமதலைமைக்காரரும் இதுபோன்ற அடாத செயல்களி லூக்கமெடுப்பார்களானல் வடமாகாணத்தில் தீயசெயல்கள் சூரியனைக்கண்ட பனிபோல அதிசீக்கிரத்தில் அற்றுப்போய்விடுமென்று தீர்க்கமாகக் கூறலாம். குற்றம் அதிகரித்துவரும் இவ்வலிகாமம் வடக்குக் கிழக்குப் பகுதியில் துஷ்டபரிபாலனம செய்ய எல்லாம்வல்ல இறைவன் இம்மணியகாரனுக்குத் திருவருள் புரிவாராக. —விசேட நிருபர்.

### கோழிக்கள்வனுக்குச் சிறைவாசம்

சென்ற 12-ந் திகதி கொம்பனித்தெருவைச்சேர்ந்த உணுப்பிட்டியிலுள்ள திரு. கே. ஜே. எம். பர்ணுந்து என்பவருக்குச் சொந்தமான ஒரு ரூபா பெறுமதியுள்ள கோழியைத் திருடினனெனக் குற்றஞ்சாட்டப்பட்ட பக்கூஸ் என்பவனுக்கு 6 மாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதாம்.

# அபிசீனிய தூதரின் - - - - லண்டன் பிரசங்கம்.

## அடிமைகளாகச் சீவிப்பதிலும் உயிர்விடுவதே நன்று.

## இத்தாலியர் கூறும் ஆதாரமற்ற அபவாதங்கள்.

### சர்வதேசசங்கத்தின் பெருமை பாதுகாக்கப்படும்.

இத்தாலியர் அபிசீனியாவின் மீது படையெடுப்பதற்குச் சில காரணங்கள் கூறப்படுகின்றன. எம்மீதும் சில குற்றங்கள் சுமத்தப்படுகின்றன. முதலாவது அவர்கள் எடுத்துக்காட்டுவது வால் உவால் (Wal Wal) என்னும் இடத்தில் நடந்த சம்பவமே. அபிசீனியாப் பிரதேசத்துள் படையெடுத்துச்சென்று அந்நாட்டைக் கைப்பற்றிக்கொள்வதற்கு இத்தாலிய வால் உவால் சம்பவத்தை போலியாக எடுத்துக்காட்டுகின்றனர். இரண்டாவதாக இத்தாலியில் குடிசனம் அதிகப்பட்டு விட்டதென்றும் ஆகையால் இத்தாலிய சாம்பிராச்சியம் விஸ்திரணமடைவ தவசியமாம். அதன்பொருட்டு அபிசீனியாவைக் கைப்பற்றி தமது நாட்டவர் விருத்திக் குபயோகிக்க வேண்டுமாம். ஒரு பெரிய கிறிஸ்த வல்லரசு இன்னொரு கிறிஸ்தவ சிற்றரசினை நசித்துவிட்டு அந்நாட்டைக் கைப்பற்ற எண்ணுவது நீதியா? இங்கிலாந்தில் ஒவ்வொரு சதுர மைலுக்கும் 500 பேர்கள் வசிக்கின்றனர். ஜெர்மனியில் ஒரு சதுர மைலுக்கு 360 பேர் வசிக்கின்றனர். இததாலியிலோ ஒரு சதுர மைல் பிரதேசத்தில் 341 பேரே வசிக்கின்றனர். இப்படியிருந்தும் இடமில்லையென்பது எப்படி நம்பப்படலாம். அப்படிததானும் வசிக்க இடமின்றி இத்தாலியர் கஷ்டமடையின் அபிசீனியாவில் வந்து குடியேறிச் சமாதானமாக வாழலாமே. இத்தாலியர் அப்படியே வேறுநாடுகளில் குடியேறவில்லையா? மேலும் புதிய ஒரு குடியேற்றநாடு (Colony) வேண்டுமாயின் அநேகம் குடியேற்ற நாடுகளை வைத்திருக்கும் பிரிட்டிஷார், பிரான்சியர் முதலிய வல்லரசினரிடமிருந்து தைரியத்துடன் சென்று பெற்றுலென்னவோ? வலிமைகுறைந்த நாடாகும் அபிசீனியாவினை நாடி நிற்பது வெட்கத்துக்கிடமாகாதா? எப்படியாயினும் ஒருபோது அபிசீனியர் தமது நாட்டில் ஓர் அங்குலமாவது கைவிடப்போவதில்லை.

### எல்லைப்புறத்திலுள்ள முரட்டுச் சாதியினர்

அபிசீனியா மீது இத்தாலியர் படையெடுக்கப்போவதற்குக் கூறும் மூன்ருவது நியாயம் ஒன்றுளது. அபிசீனியர் காட்டுமிராண்டிகளென்றும் அவர் அரசியலைத் தற்கால முறைபபடி நடத்த வியலாதிருக்கின்றனர் என்பதுமே. இது முழுவதும் உண்மையன்று. இப்போது ஒருவர் அபிசீனியாவுக்குச் சென்று விஷயங்களை நேரே அவதானித்தால் அபிசீனியர் காட்டுமிராண்டிகளா? அபிசீனிய அரசினர் இத்தாலியஅரசினரிலும் பார்க்க சனங்களை அநியாயமாக நடத்துகின்றனரா? என்பன நன்கு விளங்கும். இத்தாலியருக்குச் சொந்தமான பிரதேசத்துக்கும அபிசீனியாவிற்கு மிடையிலுள்ள எல்லைப்புறங்களில சீர்திருத்தமடையாத காட்டுமிராண்டிகள் சிலர் வசிக்கின்றனரென்பது உண்மையே. அவர்கள் இன்று அரசினரின் பரிபாலனத்தில் முற்ருகக் கொண்டுவரப்படவில்லை. இது அபிசீனியாவில் மாத்திரம் காணப்படும் விஷயமன்று. ஆபிரிக்காவின் பலபாகங்களிலும், ஆசியாவின் சிலபாகங்களிலும் இவ்வித அடக்கமில்லாத வகுப்பினர் இப்போதும் இருந்துவருகின்றனரே. இத்தாலியர் கூறுவது உண்மையென்போம். அந்நியாயத்தைக் காரணமாகக்கொண்டு எம் நாட்டினையும் சாதியினரையும் பரிநாசமாக்க இத்தாலியர் கங்கணங் கட்டி முன்வருவது நீதியாகுமா?

நாலாவதாக இத்தாலியர் கூறும் நியாயம் அபிசீனியாவில் இன்னும் அடிமைமுறை (Slavery) நின்றுநிலைபெறுவதென்பதே. ஆனல் இதுவரையும் இவ்விஷயத்தைக் குறிதது இத்தாலியர் ஒன்றும் பேசாதிருந்தது பெரும் ஆச்சரியமாகின்றது. என்னுடைய அபிப்பிராயம் யாதெனில், அபிசீனியாவில் வீடுகளிலுள்ள அடிமைகளிலும் இத்தாலியரே தாழ்ந்த நிலையிலிருந்து மேனிலைக்குக் கொண்டுவரப்பட வேண்டியவராயிருக்கின்றனர். அபிசீனியாவில் அடிமைகளெனக் கூறப்படுவோர் தம்மை இம்சைசெய்தோர்க்கெதிராக நீதிமனறத்தில் முறைப்பாடுசெய்யும் உரிமையையுடையர்.

---

கேயிசர்:— உலக அபிப்பிராயத்தை உதறித்தள்ளுமுன இருமுறையாவதுசிந்தி. நானுமஉனனைப்போலேதான் தலைப்பாரமடைந்து பாழடைந்தேன்.

முசோலினி:— நான் நீயல்லவே. உனது பழங்கதைகள் வேண்டாம்.

---

### வியாபார விஷயம்

ஐந்தாவதாக இத்தாலியர் காட்டும் நயாயமும் ஆதாரமற்றது. அபிசீனியர் இததாலியர்க்குச் சொந்தமான சொலிலந்து, இறிற்றிரியா என்னுமிடங்களில் வசிககும இத்தாலிய பிரஜைகளைத் தாக்குவதற்கு ஆயுதங்களுடன் வேண்டிய ஆயததஞ்செய்கின்றனரென்கின்றனர். இந்தக குற்றச்சாட்டை உறுதிப்படுததச் சிறிதும் ஆதாரமில்லையாகும். ஆனல் இததாலியரே அபிசீனியாவுககுள புகுந்து பெருங் கெடுதிகளை விளக்கினறனர். அபிசீனியாவில் மற்றைய எல்லைப்புற அரசினராகும் பிறிட்டிஷாரும் பிரானஸியரும் அபிசீனியாவின சுயாதீனததிறகு மாறுக எப்போதாவது செனறாரில்லை.

ஆறுவதும் ஆதாரமற்றதுமாகிய குற்றசசாட்டு யாதெனில், அபிசீனியாவில இத்தாலியர்க்கு வியாபாரஞ் செய்தறகும், உததியோகம் வகிதததற்கும், மற்றுந் தொழில்களை நடத்துதற்கும் இடங்கொடுக்கப்படவில்லை என்பதே. இத்தாலியிலிருந்து அபிசீனியாவிற்குள் இறக்கப்படும் பொருட்களுக்கு உயாந்த தீர்வை கிடையாது. எந்நாட்டவராவது அபிசீனியாவிற்குள் சென்று வியாபாரம் நடத்தலாம. வியாபாரப் பொருட்கள் வாங்குதலும் விற்றலும் அவ்விதத் தொழிலில் ஈடுபட்டோரைப் பொறுத்த விஷயங்கள். வியாபாரத்தில் நட்டமடைவதும் நயமடைவதும் தொழில்செய்வோரின் தகுதியைப் பொறுத்தது. இவ்விஷயங்களில் அபிசீனியாவினை எவராவது குறைகூறக் காரணமின்று.

### படையெடுப்பால் ஏற்படக்கூடியன

விஷயமிவ்வாறுக இத்தாலிய யுத்தம் ஆரம்பித்து இரத்தம் ஓடச் செய்வதற்கு போதிய நியாயம் ஏதாவது கிடையாது. மேலும் இத்தாலியர் உடன்பிடிக்கைகளையும், பொருத்தனைகளையும், சமாதான நிபந்தனைகளையும் தமது காலுக்குள் போட்டு மிதிக்கப்பார்க்கின்றனர். இவ்வாறு உலக சமாதானத்தைப் பங்கமடையச் செய்வது நாகரீக முன்னேற்றத்துக்கும் கிறீஸ்து சமய கொள்கைக்கும் முற்றும் முரணுகும். தற்சமயத்தில் ஆசிய ஆபிரிக்கா வாசிகளும் உலகின்மற்றைய பாகத்தவரும், ஆபிரிக்காவின் சிறு நாடாகும் அபிஸீனியாவுக்கும் ஐரோப்பிய வல்லரசுகளிலொன்ருகும் இத்தாலிக்கு மிடையிலேற்பட்ட தகராற்றை எவ்வாறு சர்வதேசசங்கம் முடிவு செய்யப்போகின்றதென ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். இவ்விருநாடும் சர்வதேசசங்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ளன. இத்தாலியரின் படையெடுப்புத் தடுக்கப்படாவிடின் பெருங் கெடுதிகள் வந்தெய்துமென்பது நிச்சயம். அபிசீனியர் பூரணமானவரல்லர். குறைகளையவர்கள் இல்லாதிருக்கவில்லை. ஆனல் மிகத்திறமைவாய்ந்த அபிசீனிய அரசரின் பரிபாலனத்தால் பலதுறைகளில் முன்னேற்றங்கள் மிக விரைவாக நடைபெற்றுச் செல்கின்றன. இப்போது அபிசீனியாவிஷயத்தில் எவராவது தலையிடாது அவர்களைச் சமாதானமாக வாழவிட்டு மேலும் 2 கோடி ரூபா அவர்களுக்குக் கடன் கொடுக்கப்படின், அபிசீனியர் இருபது வருடத்துள் மற்றைய எந்தநாட்டவர்களும் அடைந்துள்ள நிலைமையை அடையக்கூடியவராவர். புதிதாக வித்தியாசாலைகளை ஸ்தாபிக்க நாங்கள் வயதிபெறவேண்டும். அபிசீனியா பெருங் கெடுதியை அடைந்தால் அவர்கள் இத்தாலியரின் கீழ் இருப்பதிலும் பிறிட்டிஷார் கீழ் இருப்பது மிகவும் நல்லது. எங்கள் நாட்டினை நீதியீனமாகக் கைப்பற்றிச் சுயாதீனத்தைக் கெடுக்க வருவோரை வெற்றிகொள்ள முடியாவிடின் நாம் சீவித்தும் என்னபயன்? அடிமைகளாக இருக்க அபிசீனியர் ஒருபோதும் விரும்பார்.

---

### கத்திப்பிடியால் அடித்தவருக்கு அபராதம்

நாயன்மார்கட்டு வாசியாகிய குமரேசர்—சின்னையா, சின்னையா—காசிப்பிள்ளை, சின்னையா—அம்பலவாணர் என்னும் மூவரும், அவ்வூர்வாசியாகிய ஆறுமுகம்—வைத்தியலிங்கம் என்பவரைக் கத்திப்பிடியால் அடித்தும் ஏசியும் தொந்தரவுசெய்தார்களெனக் குற்றஞ்சாட்டப்பட்டனர். 3ஆம் எதிரியாகிய அம்பலவாணர் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் 10 ரூபா அபராதம விதிக்கப்பெற்றார். ஏனைய இருவரும் விடுதலைசெய்யப்பட்டனர்.

### வள்ளத்திற் பிரயாணம் செய்யும் ஜேர்மனியர்

ஒரு சிறிய வள்ளத்துடன் உலக யாத்திரை செய்வதற்கென மூன்று வருடங்களின்முன் புறப்பட்ட ஜேர்மனி வாசியாகிய ஹேர ஒஸ்கார்ஸ்பக் என்பவர் சென்ற 14.ந் திகதி சனிக்கிழமை வல்லுவெட்டித்துறைக்கு வந்து சேர்ந்தனர். அங்கு அவர் தனது பிரயாணத்தைப்பற்றி ஓர் சொறபொழிவு நிகழ்த்திவிட்டுக் காங்கேசனதுறை மார்க்கமாக இந்தியாவுககுப் புறப்பட்டுச்சென்றார்.

இல்வாழ்க்கையில் வாழ்வதெல்லாம் விருந்தினரைக் காப்பாற்றும் பொருட்டு.

# தற்கால வாழ்க்கையும் சாந்தியின்மையும்.

(சுவாமி பரமாநந்தர்.)

தற்கால வாழ்க்கைக்கும் சாந்திக்கும் எவ்வளவு தூரம் உள்ளது! நமது நாட்டு முற்கால மாந்தர் தம்மிடத்துச் சாந்தியை நிலைநாட்ட முயன்றதுமன்றித் தம்மைச் சார்ந்தார்க்கெல்லாம் அதனை ஊட்டவும் முயன்றனர். ஒருபோது மட்டுமல்ல, எப்போதும் எவவிடத்தும் எந்நிலையிலும், மனிதன் கண்ணுக்குப் புலப்படும் பொருள்களோடும் புலப்படாதவற்ரோடும் சமாதானமாக வாழ்தல் வேண்டும் என்பதை அவனுக்கு நினைவுறுத்திவந்தனர். அத்தகைய சாந்தநிலையைக் காணுதல் இந்நாளில் எவ்வளவு அரிதாகிவிட்டது! சாந்தியை இக்காலத்தில் மக்கள் விரும்புவதில்லையென்பது கருத்தன்று. அதனை அடையும் நெறியினை மக்கள் இப்போது அறியாதவராகின்றனர் என்பதே உண்மை. அரசியல் வாழ்க்கையிலும் தேசீய வாழ்க்கையிலும் தனி வாழ்க்கையிலும் மக்கள் சாந்தியைப் பற்றி நினைத்து வருந்துகின்றனர். அந்நினைவு அவசியம் எழுந்தே தீரும்; என்னெனின், ஒரு மனிதனது உள்ளத்துச் சாந்தி இல்லையேல், அவனது உடமைகள் அனைத்தும் பயனற்றனவாம்,

கீதையில், "சாந்தியில் எல்லாத் துன்பங்கட்கும் நாசம் உண்டாகின்றது. சாந்திமயத்திய உள்ளம் விரைவில் ஞாலத்தில் வேரூன்றி நிலைத்துவிடுகினறது. நிலை அற்றவர்க்கு ஞானமில்லை, நிலை அற்றவர்க்குத் தியானமுமில்லை, தியானமற்றவர்க்குச் சாந்தி இல்லை, சாந்தியற்றவர்க்குச் சுகம் ஏது?" என்று பரமாசாரியர் போதிக்கின்றார். சாந்தியற்ற உலகிற்குச் சுகம் எவ்வாறு உண்டாகும்? அதன்மீது சுகத்தை உம்மால் பலவந்தமாகச் சுமத்துதல் இயலாது. ஏன்? சுகவாழ்க்கையைப் பெற அதற்கு இன்னும் உரிமை உண்டாகவில்லை; சமூகத்தைப்பற்றிய இவ்வுண்மை தனி மனிதனுக்கும் பொருத்தமாகும். நமது உடல் நிலையற்றதாகி ஓட்டசாட்டங்கட்கு உறைவிடமாகுமபோது, உடல் வலிகளும் நரம்புச் சோர்வு முதலான எல்லாவிதப் பிணிகளும் நம்மை வந்தடைகின்றன; இன்னும் இத்துடன் மனதும் சஞ்சலப்படுமாகில, துன்பங்கள் முன்னிலும் பெருகும்; நம்மிடத்திலுள்ள சூக்குமமான தெய்வீகப்பகுதிகளுக்கும் கேடு விளையும்; அம்மட்டோ! நாம் வருந்துவதுமன்றிப் பிறரையும் வருந்தச்செய்பவ ராகிறோம். மன அமைதியற்றவராயும் படபடப்புள்ளவராயும் ஓயாது துக்கப்பட்டுக்கொண்டும் பிறரைப்பற்றிக் குறைகூறிக்கொண்டும் இருப்பவராயும மக்கள் வாழுகின்றனர். நீர் அவர்க்கு எது செய்யினும் அதைத் துண்டுதுண்டாகக் கிழித்தெறிவதில் எப்போதும் வல்லமை உடையவராயும் உள்ள அம்மனிதரோடு வாழ்தல் எத்தன்மைத்து என்பதை நாம் அனைவரும் அறிவோம். அத்தகைய மக்கட்கு நாம் எவ்வாறு சாந்தியை அளிக்கப்போகிறோம்? நமக்கே நாம் எவ்வாறு சாந்தியை உண்டுபண்ணிக் கொள்ளப்போகிறோம்? நாம் அதை எங்குக் காணப்போகிறோம்?

"சாந்தியைப்பற்றி நாம் கற்கக் கற்க, அதற்கு ஒரேவழி உண்டென்றும், அது ஞானநெறியே என்றும் நமக்கு உறுதி வலுத்துவரும்." அந்த ஞான நெறியாவது யாது? அந்நெறி யாது? என்பதை மனிதன் எப்போதும் அறிந்திருத்தல் வேண்டும். எல்லா உலகச் சச்சரவுகளினின்றும் விலகுவதற்குரிய வழியைக் காட்டுவது அதுவே. அகந்தையினால் நமக்குச் சண்டையுண்டாகுமாயின், அதைத் துறந்துவிடுவோமாக; பண ஆசை அமைதியின்மையை விளைக்குமாயின், அதை நாம் விட்டுவிடுவோமாக; அன்றி ஒருவாறுவது அதை அடக்கிக்கொள்வோமாக; பேராசையினால் மனிதனது நெஞ்சத்துக் குழப்பமும் துயரமும் எரிந்துகொண் டிருக்குமாகில், அவைகளை நமது நெஞ்சிற் குறைத்தற்குரிய வழியைக் கற்றுக்கொள்வோமாக. நாம் அதனை முற்றும் ஒழித்தற்குரிய வழியை அறிந்துகொள்வோம் என்று கூற என் நா எழுந்தது; ஆனால் அது முடியாத காரியம் என்று உங்கட்குத் தோன்றலாம். மிக நன்று. பின்னர் அதனைக் குறையுங்கள்—அதாவது, உங்கட்குச் சாந்தி என்பது வேண்டுமாயின். ஏனெனில், நீங்கள் இதை நினைவுறுத்திக்கொள்ளுங்கள். சாந்தி என்பது நீங்கள் சந்தைக்குப்போய் விலைக்கு வாங்கிவரக்கூடிய ஒரு பொருளல்ல. திரள் திரளாகப் பொருள்களை உண்டாக்கிக் குவிக்கும் இந்நாளில் வாழ்ந்து வருதலின் பயனாய், எதனையும் யந்திர மூலமாகச் செய்து குவித்துவிடலாம் என்னும் நினைவு உங்கட்குத் தோன்றுவது இயல்புதான்; ஆனால் அது நலந்தரக்கூடிய ஒரு கருத்தல்ல.

அழியாது நிலைத்துநிற்கும் பொருள்களையும், நமது புத்தியினால் விசாரித்தறியுங்கால் கழியாது நிலைநிற்கும் பொருள்களையும் காணுங் காலம் வந்துள்ளது. சாந்த நெறியை நாம் நாடிக் காணவேண்டும். ஸ்ரீ சுவாமி விவேகாநந்தர் இந்நாட்டில இருந்த காலத்துப் பின்வரும் கவியொன்றை எழுதியருளினார்:— "பாரீர் இதனை, பலத்தில் ஒளிர்வது; சத்தியாகச் சத்தி இதுவே; இருளிலும் உறையும் எழிலொளி இதுவே. கூசு பேரொளியிலும் குளிர் நிழல் இதுவே. இன்பமு மன்று அது, துன்பமுமன்று; அவ்விரண்டிற்கும் இடையே அமர்வது; அது பகலன்று, இரவுமன்று, இரவையும் பகலையும் இணைப்பதே அஃது."

இக்கருத்தை வேறு மொழிகளில் உங்கட்கு விளங்கக் கூறலாம். நம்மிடத்துப் பெரும் மாறுதல்களை உண்டுபண்ணக் கூடிய நிலைமைகளிலும் எதனோடும் ஒட்டாது சாந்தமுள்ள நெஞ்சு விலகியிருக்கும்; 'மெய்த்திரு வந்துற்றாலும் வெந்துயர் வந்துற்றாலும்' இரண்டையும் ஒப்ப நினைக்கும் அவ்வுள்ளம் நடுநிலையில் நிற்கும்; சாக்ஷியாய் நிற்கும்; அவை தாக்குங்கால் வேறுபடாதிருக்கும். "இன்னிசை நடுவே இனிய அமைதியாம்; தூய கலைத்தொழில் மத்தியில் ஓய்வாம்; தொடுத்துவரும் இரண்டுஆசை வெறிகளின் நடுவே இலகும் நல்ல சாந்தியாம்"

சில வேளைகளில் வேலையாளி யொருவன் பலவித முட்டுப்பாடுகளில் அகப்பட்டு ஆடியோடிக் களைத்துப் போம்போது, "ஒரு கணம் எனது நெஞ்சம் அமைதியுற்றிருப்பின் எவ்வளவு நன்றாயிருக்கும்!" என்று சொல்லுகிறான்; அவன் மக்களையும் சூழ்ந்துள்ள பொருள்களையும் அவைகளின் நிலைமைகளையும் குறைகூறுகின்றான்; இவன் தொந்தரவளிக்கின்றான்; குழந்தைகள் கூச்சலிட்டுக் கொண்டிருக்கின்றன; யந்திரங்கள் பேரிரைச்சலிடுகின்றன' என்று சொல்லுகிறான். உண்மை யாதெனில், அவனது உள்ளத்தே அமைதி இருக்குமாகில் புறத்துள்ள ஒன்றையும் அவன் பொருட்படுத்தான். உலகத்தில் எல்லாவித அமைதியின்மையும் சூழ்ந்திருப்பினும், நாம் அதை உணராதிருக்கும்வரை அது நமக்குத் தென்படுவதில்லை. "உன்னையே முதலில் அமைதியாக வைத்துக்கொள்க. அதன்பின் பிறரை அமைதியாக்கும் திறல் உனக்கு உண்டாகும்."

தற்கால மனிதன் சஞ்சலமும் மோசமும் போராடும் இயல்பும் நிறைந்தவனாயிருக்கின்றான்; ஆயினும் அவன் உலகமெங்கும் சாந்ததை உண்டுபண்ணும் இயக்கங்களை ஏற்படுத்த முயன்று வருகிறான். இது என்ன விந்தை! இது இயலுமா? எவ்வளவு போதனை யிருப்பினும் என்னும், அதற்கியைந்த ஒழுக்கம் இல்லா விடில்? சமாதானத்தைப்பற்றி மக்கள் பேசி வருவதை நாம் கேட்டுளோம். ஆனால் அவ்வாறு பேசும்போதே போர்முறைவழியிலேயே அவர்களது நினைவெல்லாம் ஓடிக்கொண்டிருக்கிறது. அத்தகையபிரசங்கமாரிகளை "ரேடியோ" கருவி வாயிலாக நான் கேட்டிருப்பதுண்டு. உதாரணமாக, சொற்ப காலத்துக்கு முன்பு ஒருவர் படைக் கருவிகளின் துணையினால் சமாதானத்தை நிலை நாட்டும் அவசியத்தைப் பற்றிப் பேசினார். நாம் அனைவரும் உண்மையாகவே போர்க் கருவிகளோடு நன்கு பொலிவோமாயின், நாம் ஜப்பானை மெல்லப்புடைத்தும் அந்நாடு நம்மொடு சமாதானத்திற்கு வந்துவிடும் என்று அவர் கூறினார். அதுதான் அவருடைய கருத்து. நீர் யாரேனும் ஒருவரை மெல்லப் புடைத்துவிட்டு, "எனது பலம் எத்துணையது என்பதைப் பார்த்தீரா! நீர் எனக்கு விரோதத்தை மனதிலும் நினைக்கக் கூடாது!" என்று பயமுறுத்துகிறீர்—இதுதான் சமாதானத்தைப் பெறுதற்குரிய வழி போலும்?

இன்று மக்கள் அகந்தையோடு எதையும் நினைக்கலாம். இன்று அவர்கள் தாம் நினைப்பதை வற்புறுத்தி நடத்தும் திறமையோடும் இருக்கலாம்; ஆனால் நாளைக்கு எல்லாம் நிலை மாறிவிடலாம். வாழ்க்கைநிலை எப்பொழுதும் மாறிக்கொண்டே யிருக்கும். உலகம் இப்படித்தான் முன்னேறி வருகிறது. நிகழ்ச்சிகள் மாறிவருதலையே நாம் முன்னேற்றமெனக் கருதுகிறோம். அது முன்னேற்றமாகுமா? ஐரோப்பியப் பெரும் போர் என நீங்கள் கூறும் அப்போர்க்கு முன்பு (நான் அப்போரில் யாதொரு பெருமையையும் காணவில்லை) நான் ஐரோப்பா வழியாக அடிக்கடி பிரயாணஞ்செய்ததுண்டு. பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து, இத்தாலி முதலிய நாடுகளை நான் ஆண்டுதோறும் பார்த்துவருவதுண்டு. அக்காலத்தில் ஏராளமான தன்னிச்சயமும், அகந்தையும், (சாதாரண மக்களது அறிவிற்கு எட்டும்வரை) பெருந் தன்மையும் எங்குங் குடிகொண்டிருந்தன; எல்லாம் கடிகாரப் பொறியைப்போன்று முறையாக இயங்கி வந்தன. இன்று பாரிஸ் நகரில் ஒரு ரயிலில் ஏறினால் தவறாது ஒரு குறிப்பிட்ட நாளில் உரோம் நகரிலோ பெர்லின் நகரிலோ நேபில்ஸ்நகரிலோ போய்ச் சேர்வோம் என்னும் உறுதி உமக்கு இருந்தது. ஆயினும், அப்பொறியில் ஒரு பகுதியில் ஒரு கோளாறு நேர்ந்ததும் அது எவ்வளவு விரைவாக முறைபிறழ்ந்து செல்வதாயிற்று என்பதை நோக்குங்கள். நான் அதைப் பார்த்திருக்கின்ற காரணத்தால் அதைப்பற்றிப் பேசக்கூடும். ஒரு மனிதன் ஆழ்ந்த குணங்கள் சிலவற்றை (ஆன்மகுணங்கள் சிலவற்றை)ப் பெறாது போவானாகில், நாகரீக வாழ்க்கைக்கும் பயிற்சிக்கும் சிகரமாகக் கருதும் ஒன்றினை அடக்குதல் அவனுக்கு எவ்வளவு கடினமாகிறது என்பதை அது நமக்குக் காட்டுகிறது. இதனாலேயே 'சாந்தம்' என்னும் பொருளைப்பற்றிப் பேசும்போது, ஏதோ ஒரு நுண்ணிய குணத்தைப்பற்றிப் பேசுகிறேன் என்பதில்லை; மனித வாழ்க்கையில் மிக வலிமையுள்ள ஒன்றையேபற்றிப் பேசுகிறேன்; அப்பொருளை நாம் பெருக்கவேண்டினும் மன்னுயிர்க்குப் பரப்பவேண்டினும் நாம் அதை உடைமையாக்கிக் கொள்ளவேண்டும் என்பதை நினைவுறுத்தல் வேண்டும்.

"எனது சாந்தம் (அல்லது சமாதானம்) குலைந்துவிட்டது!" என்று நீர் கூறுகிறீர்; இன்னும், உனது மனத்துயரத்திற்கும் மனவெறிக்கும் கோபத்திற்கும் பகைமைக்கும் மிகப் பொருத்தமான நியாயமான காரணங்களையும் நீர் எடுத்துரைக்கிறீர். ஆனால் அத்தகைய காரணங்களை எடுத்துரைக்கக் கூடியவர் இலக்ஷக்கணக்கான மனிதர் உள்ளனர். உம்முடைய காரணங்களை நீர் மற்ற மனிதர்கட்கு விளக்க முயலுதல் வீணன்றோ? உலகத்தார் அவைகளை அறிந்துகொள்ளுவார்களா? அதையெல்லாம் பார்க்க, உமது முன்னிலையில் நீரே நின்றுகொள்ளும்; உமக்கு முன்பு நீரே "எனது நெஞ்சில் அமைதியும் அன்பும் குடிகொண்டுள்ளன. பகைமை நினைவுகட்கு நான் ஒருபோதும் இடங்கொடுத்ததில்லை. ஆயினும என் நிலை எவ்வளவு கேவலமாயுள்ளது! என் மனம் எவ்வளவு கலங்கியுள்ளது!" என்று சொல்லக்கூடுமாகில், அப்போதன்றோ உமது மனநிலைக்குக் காரணங்களாகச் சொல்லுபவையெல்லாம் நியாயமாகும். ஆனால் அப்படிச் சொல்லக்கூடிய நிலைமை ஒரு நாளும் வரவொண்ணாது; ஏனெனில் அது பொருந்தாக் கூற்றாகும். பொய்ச்சாக்குகளைத் தேடுவதற்குப் பதிலாக, நீர் உமது மனநிலையைச் சற்றே பரிசோதித்துப் பார்த்து, பின்னர் சமாதானத்தை விளைப்பதற்கு ஏதுவான நினைவுகளை நினைத்தும் வாழ்க்கை வாழ்ந்தும் வருவீராயின், நீர் சமாதானத்தை அடைவீர். இன்னும் பிரதிகூலமான காரியங்கள் எத்தனை நேரினும், அனைத்தையும் எதிர்த்து நிற்கும் துணிந்த நெஞ்சுடையாருள் ஒருவராயும் இருப்பீர்.

—"ஸ்ரீ ராமக்கிருஷ்ண விஜயம்"

## தாசிகளைக் கொன்றவனுக்கு மரணதண்டனை

ஹைதராபாத் என்னுமிடத்தில் பல தாசிகளின் வீடுகளுக்குச்சென்று மதுபானங்கொடுத்து மயக்கி வெளியே கூட்டிச்சென்று கொலைசெய்து அவர்கள் அணிந்திருந்த நகைகளை அபகரித்துச்சென்றானெனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள துல்ஜாராம் என்பவருக்கு மரணதண்டனையும், உதவியாயிருந்த ஜடுஷா என்பவருக்கு ஆயுள்காலச் சிறைவாசமும் விதிக்கப்பெற்றதாம்.

## வரி அறவிடுபவருக்கு வழக்கு

ஹற்றன் நகரசபையின் வரிப்பணம் அறவிடுபவரான திரு. எச். எஸ். ஜெயசிங்கா என்பவர், தான் அறவிட்ட பணத்தில் 2245 ரூபா 16 சதத்தைத் தனது சொந்தத்துக்கு உபயோகித்தாரென இரகசியப் பொலிசாரால் ஓர் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. நீதிபதி எதிரியை 1000 ரூபா பிணையில்விட்டு வழக்கை வருகிற அக்டோபர் மாதம் 7-ந் திகதிக்கெனத் தவணையிட்டார்.

# இந்தியச் செய்திகள்.

### சட்டமாயது

இப்போது இந்திய அரசினரால் இந்திய சட்டசபையில் கொண்டுவரப்பட்ட அடக்குமுறைச்சட்டம் இந்தியப்பிரதிநிதிகளால் ஒதுக்கப்பட்டது. 71பேர் இந்தச்சட்டத்துக்கு மாறாகவும் 61 பேர் உடன்தையாகவும் சம்மதம் கொடுத்தனர். அரசினர் தாம் நினைத்ததை முடியாது விடுவாரா? இராசப்பிரதிநிதி இச்சட்டம் அவசரமெனக்கூறி மறுபடியும் இந்தியச் சட்டசபையினரை இச்சட்டத்தை ஏற்கும்படி அனுப்பினர். அவர்கள் ஏற்றாரில்லை. இராசப்பிரதிநிதியின் சிபார்சின்படி இது சட்டமாயிற்று. சனப்பிரதிநிதிகள் யாதுசெய்வர்? விசேட அதிகாரம் இராசப்பிரதிநிதி கையில் இருக்கும்வரையும் எல்லாம் அலங்கோலந்தான்.

### காங்கிரஸ் தலைவர்கள் கூட்டம்

வார்டா நகரில் சென்ற புதன் வியாழன் வாரங்களில் காங்கிரஸ் தலைவர்கள் ஒருங்குகூடி அநேக பிரதானமான விஷயங்களை ஆலோசித்தனர். ஸ்ரீமான்கள் வல்லபாய் படேல், ஜீ. டீ. பேர்ளா, இராசகோபாலாச்சாரியர் என்போர் அங்கு கூடியவருட் சிலராவர். பேர்ளா அவர்கள் சமீபத்தில் லண்டனிலிருந்து பம்பாய் வந்து சேர்ந்தவராவர். மகாத்மாவின் அபிப்பிராயமும் கூட்டத்தாரால் உசாவப்பட்டதாம். மறுபடியும் காங்கிரஸ் வேலையைக் கையேற்கும்படி ஸ்ரீமான் இராசகோபாலாச்சாரியர் கேட்கப்பட்டதாகஅறிகின்றேம். அவர் அதற்கிணங்கின் அடுத்த காங்கிரஸ்தலைவர்பதவிக்கு அவர்நாமமே காங்கிரஸ் காரிய நிர்வாகசபையாரால் சிபார்சுசெய்யப்படும். காங்கிரஸ் தலைவர் பதவிக்கு இவரிலும் சிறந்த ஒருவர் கிடையாதென்பதே பலர் கருத்து அதிக தியாகத்தைத் தேசத்தின் பொருட்டுச் செய்த இராசகோபாலாச்சாரியர் இந்த அரியசந்தர்ப்பத்தில் காங்கிரஸ் தலைமைவகிக்க இணங்குவாரென்பதே எமது அபிப்பிராயம்.

### பாபு இராசேந்திரப்பிரசாத்

அலகபாத் நகரில் சிறிது சுகவீனம் காரணமாகத் தங்கியிருந்த ஸ்ரீமான். இராஜேந்திரப் பிரசாத அவர்கள் இப்போது பழையபடி ஆரோக்கியத்தை அடைந்துள்ளாராகக் கூறப்படுகிறது. இப்போது காங்கிரஸ் மகாசபையின் பொன்விழாவினைக் குறித்து வேண்டிய ஆயத்தங்கள் செய்கின்றனர். பட்டாபி சீதாராமையா அவர்களால் எழுதப்பட்ட காங்கிரஸ் சரித்திரத்தை இப்போது நோக்கி வேண்டிய திருத்தங்கள் செய்கின்றனர். அது விரைவில் அச்சிடப்படும். இவர் 25-ந் திகதி பரிட்ணாகர் செலவாரென்றும் பின் அங்கிருந்து அக்டோபர் மாதம் 9-ந் தேதி புறப்பட்டு வார்டாமார்க்கமாகச் சென்னை, வந்து சேருவரெனவும் கூறப்படுகின்றது.

### எல்லைப்புறக்காந்தி

எல்லைப்புறக்காந்தி யெனப்படும அப்துல் கபர்கான் என்பவர் இப்போது ரூய்பெறலி என்னுமிடத்தில் சிறைவாசம் நடாத்துகின்றனர். சேத் ஜமுனாலால் பாஜாஜ் அவர்கள் இவரைச் சிறையில்கண்டு பேசினர். இவர் ஆரோக்கியம் அதிகம் பங்கமடைந்திருப்பதாகவும் நிறையில் அதிகம் குறைந்துளதாகவும் சொல்லப்படுகின்றது. எல்லைப்புறப் பிரதேசத்திலுள்ள ஒரு சிறைச்சாலைக்கு மாற்றப்படின் இவர் ஆரோக்கியமடையக்கூடுமெனச் சொல்லப்படுகின்றது.

### லாகூரில் பரபரப்பு

சீக்கியரது ஆலயக் கட்டிடத்திற்குள்ளிருந்த மகமதிய பள்ளிவாசல் தமது வசம் ஒப்புவிக்கப்படவேண்டுமென மகமதியர் ஆரம்பித்த கலகம் இன்னும் முடிவடையவில்லை. 80 வயதுள்ள ஒரு மகமதிய கனவானே இப்போது மேற்படி கிளர்ச்சிக்குத் தலைவராக்கப்பட்டிருக்கிறார். இந்திய சட்டசபையில் அங்கத்துவம் வகிக்கும் மூவர் இப்போது லாகூர் சென்றுள்ளார். அவர் என்னசெய்யவேண்டுமென விரைவில் ஓர் அறிக்கை வெளியிடுவார். சட்டமறுப்பியக்கம் அனுட்டிக்குமுன் மற்றைய வழிவகைகள் முன்னதாக அனுட்டிக்கப்படவேண்டுமென்பது யாவருடைய விருப்பமுமாகும்.

### "பாரதிதினம்"

தமிழ்நாட்டில் மிகக் கியாதிவாய்ந்து விளங்கிய கவிவிற்பன்னராகும் ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதி அவர்களின் திருநாள் சென்றவாரம் 11-ந் திகதி தமிழ்நாடெங்கணும் மிக ஆரவாரத்துடன் கொண்டாடப்பட்டது. பொதுவாக எல்லாவிடங்களிலும் தொண்டர்கள் ஊர்வலங்களைக் கொண்டுசென்று பகிரங்க கூட்டங்கள் நடத்தினர். பாரதியாருடைய பெருமையைக்குறித்துக் கூட்டங்களில் பேசப்பட்டது. அவருடைய அரிய பாடல்களைத் திறமையாகப் படித்துக்காட்டினோர்க்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. தென்னிந்தியாவில் சுதந்தர உணர்ச்சி வேரூன்றுதற்கும், தமிழ்க்கவி பெருமையடைதற்கும் காரணராயிருந்த பாரதியாரின் ஞாபகம் என்றும நிலைபெறுவதாக.

### திறந்துவைக்கப்பட்டது

காங்கிரஸ் மகாசபை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில அதன் உயிர் நாடியாக நின்று அதன் விருத்தியை நாடியுழைத்த ஆங்கிலக் கனவான்கள் சிலருளர். அவருள் சேர் வில்லியம் வெட்டர்பான என்பவருமொருவர். இவர் இந்தியாவில் பல உயர்தர உத்தியோகம வகித்து இளைப்பாறியபின்னர் காங்கிரஸ்வாதிகளுடன் சேர்ந்து இந்தியமாதாவின் முன்னேற்றத்துக்காக உழைத்தவர். இருமுறை காங்கிரஸ் தலைவராகவும் தெரியப்பட்டு அந்த உயர்ந்த பதவியை வகித்தவர். இபபெரியாரின உருநாடு சென்றவாரம சென்னையிலுள்ள கோகலே மண்டபத்தில ஸ்ரீமான் ஸ்ரீநிவாச சாஸ்திரியாரால் திறந்துவைக்கப்பட்டது. ஸ்ரீநிவாச சாஸ்திரியார ஸ்ரீமான கோகலேயவாகட்டும் சேர் வில்லியம் வெடர்பான் அவர்களுக்கு மிடையில இருந்த பெரிய நட்பினைக் குறித்து மிக விஸ்தாரமாகக் கூறினர்.

### கிராமவாசிகளைத் தாக்கிய போர்வீரர்

பத்தொன்பது போர்வீரர் கிராமவாசிகளைத் தாக்கியதற்காக கீழ்தர நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டனர். அதன் பயனாக 11 பேர்மீது குற்றச்சாட்டுகள் ஏற்பட்டமையால் உயர்தர நீதிமன்றத்தில் விசாரணைக்கு விடப்பட்டனர். 8 பேர் மீது குற்றங்கள் ஏற்படாமையால் விடுதலை யடைந்தனர். இவர்கள் சென்ற ஆகஸ்ற்மாதம் 20-ந் திகதி பெண்டா எனனும் கிராமத்திற் சென்று பலரை யடித்ததுமன்றிச் சில பெண்களை அவமானப் படுத்தியுள்ளார். கிராமவாசிகளின் வீடுகட்குத் தீயிட்டதுமுண்டு. இவர்கள் தீர்கக விசாரணையின்பின் ஏற்ற தண்டனை அடைவாரென்பதே எமது கருத்து

## வரவு—செலவுத்திட்டம் நிறைவேறியது

### சர்வகலாசாலைச் சரித்திராசிரியர் நியமன மாறாட்டம்

### விதவை நிதியில் வட்டி விகிதம்

### பூதல்வரியின் அரங்கேற்றம்

[நமது கொழும்பு நிருபர்]

கொழும்பு, செப்டம்பர் 20.

இலங்கை அரசாங்கத்தின் அடுத்த வருடச் செலவுத்திட்டம் அரசாங்க சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டது. தேசாதிபதியின் அங்கீகாரம் கிடைத்ததும் இது சட்டமாகிவிடும். தாம் விரும்பும் சில செலவினங்கள் இதில் அடங்கியிராதிருப்பதை உத்தேசித்து அவர் இதை நிராகரித்து விடுவார் என்று நாம் நினைக்கவில்லை. அப்படிச்செய்ய வேண்டிய அவசியமும் அவருக்கு இல்லை. செலவுதிட்டத்தை நிராகரிக்காமலே தமது காரியத்தைச் சாதித்துக்கொள்ள அவர் டொனமூர் அரசியலின்கீழ் அதிகாரம் பெற்றிருக்கிறார். முதலில் செலவுதிட்டத்துக்கு அங்கீகாரம் அளித்துவிட்டுப் பின்னர் சந்தர்ப்பம் ஏற்படும்பொழுது அதில் இடம்பெறாத செலவினங்களைத் தமது விசேஷ அதிகாரத்தைக்கொண்டு அவர் நிறைவேற்றி வைக்கலாம். இந்த நடைமுறையே கடந்த வருடங்களில் கையாளப்பட்டு வந்தது. இவ்வருடமும் இதுவே கையாளப்படுமென நாம் நம்பியிருக்கலாம்.

வரவுசெலவு விஷயமாக முந்திய வருடங்களைக்காட்டிலும் இவ்வருடம் அதிக பிணக்குகள் அரசாங்கசபைக்கும் தேசாதிபதிக்குமிடையில் ஏற்பட்டிருக்கின்றன. சிவில் சேவிஸ் உத்தியோகத்தர் நியமனவிஷயமாகவும் பிரயாணப் படிச்செலவு விஷயமாகவும் ஏற்பட்டுள்ள பிணக்குகளை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். பொலிஸ் பகுதி, சர்வகலாசாலைக் கல்லூரி முதலியவை சம்பந்தமாகவும் இப்பொழுது சில பிணக்குகள் ஏற்பட்டிருக்கின்றன. கொழும்புக்கோட்டைப் பொலிஸ்படையை இலங்கையர் மயமாக்க வேண்டுமென அரசாங்க சபை சில வருடங்களுக்கு முன் தீர்மானம்செய்தது. ஆனல் அதிகாரிகள் இது விஷயத்தில் இதுவரை எவ்வித சிரத்தையும் காட்டவில்லை. அவர்களுடைய போக்கில் தனக்குள்ள அதிருப்தியைக் காட்டுவதற்காக அரசாங்கசபை பொலிஸ்பகுதிக்காகக் கேட்கப்பட்ட பணத்தில் 9000 ரூபாயைக் குறைத்திருக்கிறது.

சர்வகலாசாலைக் கல்லூரி விஷயமாக நடந்தேறிய ஒரு சம்பவம் அரசாங்க சபைக்கு இன்னும் அதிக அதிருப்தியை விளைத்திருக்கிறது.

பீ. ஏ. பரீட்சையில் சரித்திர பாடத்தில் முதல் வகுப்பில் சித்தியடைந்த ஒரு ஆசிரியர் சர்வகலாசாலைக் கல்லூரிக்குத் தேவைப்படுவதாக அதிகாரிகள் விளம்பரம் செய்திருந்தார்கள். முதல் வகுப்பில் சித்தியடைந்த ஒருவரும் இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்த ஒருவரும் இப்பதவிக்கு விண்ணப்பம் செய்தார்கள். இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்தவரை நியமிக்கவேண்டுமெனக் கல்லூரி அதிகாரசபையினரும், முதல்வகுப்பில் சித்தியடைந்தவரை நியமிக்கவேண்டுமெனக் கல்வி நிர்வாகசபையினரும் சிபார்சுசெய்தனர். இந்த இரு சிபார்சுகளையும் பின்னர் பிரதம உத்தியோகஸ்தர்களடங்கிய அரசாங்க ஊழியக் கமிஷன் ஆலோசித்தது. முடிவில் தேசாதிபதி, இக்கமிஷனின் யோசனையின்பேரில் இரண்டாம்வகுப்பில் சித்தியடைந்தவரைக் குறித்த பதவிக்கு நியமனஞ்செய்தார். அரசாங்கசபை இந்நியமனத்தை ஆட்சேபித்துக் குறித்த ஆசிரியரின் சம்பளத்தை அனுமதிக்கமறுத்திருக்கிறது.

வரவுதிட்ட சம்பந்தமாகவும் சில பிணக்குகள் ஏற்பட்டிருக்கின்றன.

அரசாங்க உத்தியோகஸ்தரின் விதவைகளுக்கும் பிள்ளைகளுக்கும் உபகாரவேதனம் அளிப்பதற்காக இருந்துவரும் நிதியில் தற்பொழுது 1 கோடியே 30 லட்சம் ரூபாய்இருக்கிறது. இந்நிதியைத் தற்காலீகமாக வேறு தேவைகளுக்கு உபயோகிப்பதற்கு அரசினர் அதிகாரம்பெற்றிருக்கிறார்கள். இந்த உபயோகத்திற்காக அவர்கள் தற்பொழுது இந்நிதிக்கு 8 வீத வட்டி செலுத்திவருகிறார்கள். இந்நிதியை அரசினர் சென்றகாலத்தில் இலங்கையின் தேவைகளுக்கு உபயோகிக்காமல் வெளிநாடுகளுக்குக் கடனாகக் கொடுத்துவந்திருக்கிறார்கள். இக்கடனுக்காக இலங்கை அரசினருக்கு 1 அல்லது 2 வீத வட்டியே கிடைக்கிறது. அதாவது 8 வீத வட்டிகொடுத்துப் பெற்ற பணத்தை அவர்கள் 1 அல்லது 2 வீத வட்டிக்கு வெளிநாடுகளுக்குக் கொடுத்துவருகிறார்கள். இந்த அநீதத்தையும் வேறு சில காரணங்களையும் உத்தேசித்து அரசினர் கொடுக்கும் வட்டி விகிதத்தை 8-லிருந்து 6-ஆகக் குறைக்கவேண்டுமென மந்திரிசபையினர் தீர்மானஞ்செய்தார்கள். இவ்வாறு வட்டி விகிதத்தைக் குறைப்பதால் அரசினருக்கு ஒவ்வொருவருடமும் ஏறக்குறைய 269,000 ரூபாய் மிச்சம் ஏற்படும். வட்டி விகிதத்தைக் குறைக்கும் மசோதா இவ்வாரம் அரசாங்கசபையின் ஆலோசனைக்கு வந்தபொழுது பதில் அற்றோணி ஜெனரல் எழுந்து இம்மசோதாவைக் கொண்டுவருவதற்குத் தேசாதிபதியின் அனுமதியை, மந்திரிசபையினர் முதலில் பெற்றிருக்கவேண்டுமென வாதித்தார். அரசாங்க உத்தியோகஸ்தர்களின் உரிமைகளைப் பாதிக்கும் மசோதாக்கள் அரசாங்கசபையின் ஆலோசனைக்கு வருமுன் கவர்னரின் அனுமதியைப் பெறவேண்டுமென அரசியல் சட்டத்திலுள்ள ஒரு விதி கூறுகிறதென்றும அவ்விதியைக் கவனிக்க மந்திரி சபையினா தவறிவிட்டனர் என்றும் பதில் அற்றோணி ஜெனறல் கூறினர்.

ஆனல் இவருடையஆட்சேபத்தைச்சபைத்தலைவர் ஏற்றுக்கொள்ளமறுத்துவிட்டார்.

சபைத்தலைவரின் தீர்ப்பைத் தேசாதிபதி ஏற்றுக்கொள்ளுவாரா அல்லவா என்பது இனிமேற்றான் தெரியவரும். இதற்கிடையில் மசோதா முதல்முறையாக அரசாங்கசபையில் நிறைவேறிவிட்டது.

வரவுதிட்டங்களின முக்கிய அம்சங்களிலொன்றான பூதல்வரி நீக்க மசோதா மூன்றும்முறையாக அரசாங்கசபையில் நிறைவேறிவிட்டது. இம்மசோதாவை ஆட்சேபித்துப் பேசியவர்களுள் பதில பொக்கிஷக் காரியதரிசியும் ஒருவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மசோதாவுக்குச் சாதகமாக 30-பேரும் பாதகமாக 16-பேரும் வாக்குக்கொடுத்தனர். வடமாகாணப் பிரதிநிதிகளுள் திரு. மகா தேவாவும் திரு. ஆனந்தமும சாதகமாகவும் மற்ற மூவரும பாதகமாகவும் வாக்குக்கொடுத்தனர்.

### பறிமுதலாயிற்று

லாகூர் நகரில் வெளியாகும் "ஜெமிந்தார" என்னும் பத்திரிகை ஆசிரியரால் பிணையாக அரசினரிடம் கட்டப்பட்டிருந்து 3000 ரூபாவும் பறிமுதலாயிற்று. இப்பத்திரிகை லாகூர் பள்ளிவாசல் மகமதியரிடம் திருப்பிக்கொடுக்கப்பட வேண்டும் என்பதாக எழுதிய இரு விஷயங்கள் இராசவிரோதமாக விருந்தமையால் பிணைப்பணம் பறிமுதலாயிற்றும். இன்னொரு மகமதிய பத்திரிகையிலிருந்து சென்ற மாதம் 1000 ருபா பறிமுதலாயிற்றும்.

### காங்கிரஸ்சபை அங்கத்தவர்.

சென்ற சில மாதங்களாகப் பற்பல மாகாணங்களில் காங்கிரஸ்சபையங்கத்தவராகப் பலர் சேர்க்கப்பட்டனர். எல்லாமாகாணங்களிலும் இதுவரையும் சேர்க்கப்பட்டோர் தொகை 478445. காங்கிரஸ் தீர்மானப்படி சேர்க்கப்படவேண்டியவர் தொகை 10 லட்சம் பேராவர்.

**வந்த விருந்தினரைப் புறம் வைத்துத் தேவாமிர்தமாகினும் உண்ணப்படாது.**

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும், தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண், டுனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

—அப்பர்சுவாமிகள்.

யாழ்ப்பாணம், சுன்னுகம்:
யுவவரு புரட்டாதிமீ சூஅ

## அரசாங்கசபையினரின் நியாயமானதீர்ப்பு.

சென்ற இருபதுவருடங்களாக இலங்கைவாசிகட்குப் பெருநஷ்டத்தையும் கஷ்டத்தையும் விளைத்துவந்ததும், நியாயவீனமான வரியெனப் பொதுவாக எவராலும் மதிக்கப்பட்டதுமாகிய தத்துவவரி இனி அறவிடப்படாதென அரசாங்க சபையினர் சென்ற வியாழக்கிழமை முடிவுசெய்துவிட்டனர். இவ்வரியினுல் ஏற்பட்ட ஊழல்களைப் பன்முறையும் பலர் எடுத்துக்காட்டினுராயினும், இதனைத் திருத்தவாவது அல்லது முற்றுக நிற்பாட்டவாவது எவராவது முன்வந்தாரில்லை. வரும்படியை அதிகம்கொடாத ஆதனங்களின்பேரால் வரி அறவிடப்படுவதை எவர்தான் அங்கீகரிப்பர்? பொதுவாக யாழ்ப்பாணத்தவர்க்கு இவ்வரியின் நீக்கம் பெருநன்மையை விளைக்குமென்பதே எமது அபிப்பிராயம். இயற்கைவளம் மிகவுங்குன்றிய யாழ்ப்பாணத்தில் நிலங்களால் அடையும் வருமானம் மிகக் குறைவேயாகும். ஒருவர் இறந்துவிடின் அவர்பேரிலுள்ள ஆதனத்துக்குப் பெருந்தொகைப் பணம் வரியாகக் கொடுக்கவேண்டிவரின், அவரின் நிலங்களில் ஒருபாகம்விலைக்குவிற்றே வரியை இறுக்கவேண்டியதாகும்.

இவ்விதமான மிகக் கொடிய இந்தவரி நீக்கப்படாதென வாதாடினேரும் சிலருளர். அவர்கள் அடுத்து வரவிருக்கும் அரசாங்கசபைத் தெரிவினைநினைத்தாரேயன்றித்தேசத்தவரின் பெருநன்மையைக் கருதினரல்லர். தனவந்தரிடமிருந்து வரியறவிடப்பட வேண்டுமெனவும் ஏழைகள் சும்மாவிடப்படவேண்டுமென்பதும் உண்மையேயாயினும், நீதி நியாயமின்றி அளவுக்குமிஞ்சித் தனவந்தர் கஷ்டமடையின் பெருநட்டமேற்படாதா? அதிகம்வருவாயையுடையோரிடமிருந்து வரியறவிடப்படுதலை எவராவது எதிர்த்தாரில்லை. வருவாயதிகமில்லாத நிலங்களின் விலையிலிருந்து வரி கணக்கிடப்பட்டு அறவிடப்படுவது எவ்வளவு நீதியீனமான காரியம். அரசாங்கசபையினர் இவ்விஷயத்தில் மிக அக்கறைகொண்டு இக்கொடிய வரியை நீக்க முற்பட்டதற்குப் பொதுவாக இலங்கைவாசிகளும் பிரதானமாக யாழ்ப்பாணத்தவரும் பெருங் கடமைப்பட்டுள்ளார்கள். இவ்வரிநீக்கம் தனவந்தருக்கே பெருநன்மையை உடன் விளைப்பதாயினும் ஈற்றில் ஏழைகட்கும் நன்மையைக் கூட்டிவைக்கும் என்பதில் ஐயமின்று. தனவந்தரிடமிருந்தே ஏழைகளும் சீவியத்துக்குப் பொருள் ஈட்டிக்கொள்ளுகின்றுராகத் தனவந்தர் எவ்வளவுக்குக் கஷ்டமடைகின்றுரோ அவ்வளவுக்கு ஏழைகளும் இன்னலடைய வேண்டியதேயாகும். இதை நன்குணராமல் சில அரசாங்கசபையங்கத்தவர் ஏழைகட்கு நன்மை செய்வதாக நினைத்துத் தனவந்தர் மீது வரிகளைச் சுமத்தப்பார்ப்பது விந்தையாகிறது.

மேலும், இப்போது புதிதாக வருமானவரியும் விதிக்கப்படுகின்றது. வருமானத்தில் வரியிறுக்கப்படுங்கால், பின் நிலங்களின் விலையிலும் வரியிறுக்கப்படவேண்டுமெனக் கூறுவது எப்படிப் பொருந்தும்? தத்துவவரி ஒருபக்கமும், வருமானவரி இன்னெருபக்கமுமாக நின்று வருத்தப் பொதுசனங்கள் பெருங் கஷ்டத்துக்குள்ளாகவேண்டியவராகின்றுர். 400 ரூபாவுக்குமேல் சம்பளம் அல்லது வருமானமுடையோர் வருமானவரி கொடுக்கவேண்டுமெனச் சென்ற வருடம் விதியேற்பட்டிருந்தது. இவ்வருடம் 200 ரூபாவுக்குமேல் சம்பளம் அல்லது வருமானமுடையோர் வருமானவரி கொடுக்கவேண்டுமென அரசகட்டளை பிறந்தது. அடுத்த வருடம் என்னவாகுமோ யாரறிவார்? விஷயமிவ்வாறுக, தத்துவவரி நீக்கப்படவேண்டுமென மந்திரிசபையினர் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரிப்பதன்றே முறை. சில அங்கத்தவர் ஏழைச் சனங்களின் உதவியைப் பெற்றுல்தான் மறுபடியும் தாம் அரசாங்கசபை அங்கத்துவத்தை அடுத்த தெரிவில் பெறலாமெனக் கருதி, அவர்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று எண்ணி, இவ்வரிநீக்கத்தை எதிர்த்தனர். இவ்வரியை நீக்காது ஏழைச் சனங்கள் உபயோகிக்கும் பொருள்களில் விதிக்கப்படும் தீர்வை வரியைக் குறைக்கும்படி சில அங்கத்தவர் கேட்டனர். அப்படிக் கேட்பதை எவராவது ஆட்சேபித்தாரில்லை. அதற்காகச் சென்ற இருபதாண்டுகளாகப் பெருங் கெடுதியை விளைத்துவரும் இவ்வரியை நீக்காது விடும்படி கேட்பது எப்படி நியாயமாகும்?

இவ்விஷயத்தையொட்டி இன்னெரு பிரதானமான காரியம் நாம் சொல்லாதுவிடமுடியாது. யாழ்ப்பாணப் பிரதிநிதிகளாகச்சென்றேரில் திரு. அ. மகாதேவா அவர்கள் தவிர்ந்த ஏனையோர் இவ்வரிநீக்கப்படாதென எதிர்த்துநின்றனர். இவர்கள் இவ்வாறு நின்றமைக்குப் போதிய நியாயங்காட்டவேண்டாமா? யாழ்ப்பாணத்தின்நிலையை இவர்கள் நன்கறிந்தவராக, அதேநன்மைக்குமாருகச்சம்மதங்கொடுத்தமை பெரிதும் ஆட்சேபத்துக்கிடமாகின்றது. யாழ்ப்பாணத்தில் விஸ்தீரணமான நிலங்களையுடையார் அதனைக்கொண்டு பெரிய வருவாய் பண்ணுகின்றுரென்பது இவர்கள் அபிப்பிராயமா? இது எவ்வளவிற்கு உண்மையாகும்? குழந்தைப்பிள்ளைகள்போல் நமது பிரதிநிதிகள் நடப்பதைக் கேட்பாரில்லைப்போலும்.

எப்படியாயினும் இவ்விஷயத்தில் நிதானமும் உறுதியானவுமான அபிப்பிராயமுடைய அங்கத்தவர் பலரிருந்தமையால் இக்கொடிய வரி நீக்கப்படலாயிற்று. அரசாங்க சபையில் இதன்நீக்கத்திற்கு உழைத்த மந்திரிசபையினர்க்கும மற்றைய அங்கத்தவர்க்கும் தேசமக்களின் துதியுடையதாகுக.

## அங்கத்தவர்க்குப் பாதுகாப்புவேண்டுமாம்

அரசாங்கசபை யங்கத்தவரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கென ஒரு சட்டம் விரைவில் சமைக்கப்படவிருக்கின்றது. அது அனுட்டானத்துக்கு வரின் பெருங்கெடுதிகள் உண்டாகுமென்பதே எமது அபிப்பிராயம். அரசாங்கசபை யங்கத்தவர் குறைகளை உடையராயின் அவைகளை எடுத்துக்காட்டு முரிமை பொதுசனங்கட்கு இருக்கவேண்டிய தவசியமல்லவா? இந்த உரிமையை எடுத்துவிடப் பார்ப்பது நீதியாகுமா? பொதுசனங்களின் பிரதிநிதிகளாகவுள்ளோர் தவறுகள் உடையராயின் அவைகளை எடுத்துக்காட்டவும் அதற்கேற்ற பரிகாரங்களைச் செய்யவும் பொதுசனங்கட்கு அதிகாரமிருக்க வேண்டாமா? இப்போது பிரேரிக்கப்படவிருக்கும் திட்டம் நிறைவேற்றப்படுமாயின் அரசாங்கசபை யங்கத்தவரைக்குறைகூறினேர் மேற்படி சபையோரால் தண்டிக்கப்படக் கூடியவராவர். மேலும் புதிதாகக் கிளம்பும் சட்டப்படி நீதிமன்றங்களும் இவர்களை நினைத்தபடி தண்டிக்கவியலாதாய் விடும். கடன்காரராகவிருக்கும் அரசாங்கசபை யங்கத்தவரை நினைத்தபடியழைத்து நீதிவழங்கவும் நீதிமன்றங்கட்கு அதிகாரமில்லாதாய் விடும். அரசாங்கசபை யங்கத்தவரின் கௌரவம் பாதுகாக்கப்படத்தான் வேண்டும். அதற்காக அளவுக்கு மிகுதியாக எவ்வளவோ உரிமைகளை இவர்கட்குக் கொடுப்பதல்ல. மற்றையோர்க்குப்போல் நீதிபரிபாலனம் யாவர்க்கும் ஒப்பானதாயிருப்ப தவசியம். இவர்கள் தங்கள் கடமைகளை ஆற்றுதற்குப் போதிய வயதிகள் அளிக்கப்பட வேண்டுமேயன்றிப் பொது நீதிக்கு மாருக நடக்குங்கால் தப்பிக்கொள்வதற்கும் வயதி ஏற்படுத்துவது அடாது. பொதுசன நன்மையை நாடி அங்கத்துவம் வகிக்கும் அரசாங்க சபை யங்கத்தவர் தமது பதவி நிரந்தரமானதென எண்ணக்கூடாது. அடுத்த தெரிவில் இவர்கள் சித்தியடையாதிருக்கலாம். அப்போது அங்கத்தவர் குறைகளைக் கண்டிக்க இவர்க்கும் உரிமைவேண்டாமா? இச்சட்டமேற்படின் பொதுசன ஊழியமும்கஷ்டமாய்விடும். அங்கத்தவரைக்குறைகூறுவதும் நின்றுவிடும். ஆகையால் அங்கத்தவர் பொதுசன நன்மையைநாடி இச்சட்டத்தை நிறைவேற்றுது கைவிடுவாராக.

## இரண்டிலுங் கால்வைப்பதா?

வித்தியாமந்திரியாரின் நிர்வாகசபையினரால் சர்வகலாசாலை விஷயமாக வெளிப்படுத்திய பிரச்சினைகள் ஏற்கக்கூடியதாகக் காணும். இப்போது கண்டியை அடுத்த டம்புருவில் சர்வகலாசாலையை ஏற்படுத்தப் பெருந்தொகைப்பணம் வேண்டுமெனவும், பணம் கிடைக்கும் வரையும் கொழும்புநகரில் சர்வகலாசாலையை ஆரம்பித்துநடத்தவேண்டுமெனவும்முடிவுசெய்து ஒரு அறிக்கையை வெளிப்படுத்தவிருக்கின்றனர். சர்வகலாசாலை ஈற்றில் கண்டியில் தன் அமைப்பதெனவும் முடிவாகக் கூறப்படுகின்றது. அப்படியாயின் கொழும்பில் எதற்காக இப்போது ஆரம்பிப்பது? இரு இடங்களிலும் செலவு செய்வது வீணுக முடியாதா? சர்வகலாசாலை கொழும்புநகரில் நிரந்தரமாக ஏற்படின் பெருநன்மையும், வயதிகளும், செலவுச் சுருக்கமும் ஏற்படுமெனப் பன்முறையும் நாம் எடுத்துக்காட்டியுள்ளோம். ஆனல் அரசாங்கசபைச் சிங்களப் பிரதிநிதிகள் சிலர் வகுப்புவாதத்தால் உந்தப்பெற்று தேசத்தவர் யாவர்க்கும் பொதுவாகப் பயனளிப்பதைக் கருதாது கண்டியில் அமைக்க வேண்டுமென்கின்றனர். மேலும் இப்போது கண்டியில் சர்வகலாசாலைக்கு வேண்டிய நிலம் வேண்டப்பட வேண்டுமெனவும், கொழும்பில் சமயோசிதமாகச் சர்வகலாசாலை ஆரம்பிக்கப்படவேண்டுமெனவும் முடிவு செய்யப்படுகின்றதை நாம் ஏற்க முடியாது. தற்போது சர்வகலாசாலைக்கென அரசினர் 80 லட்சம் ரூபாவை ஒதுக்கி வைத்துள்ளார். கொழும்பில் சர்வகலாசாலை ஏற்படின் இத்தொகை கட்டிடத்தை யமைத்தற்கும் மற்றைய அங்கங்களை வகுத்தற்கும் ஓரளவுக்காயினும் போதியதாகும். கண்டியில் அமைப்பதாயின் நிலம் வாங்குதற்கும் கட்டிடம் சில அமைத்தற்குமே போதியதாகும். அரசாங்க சபை அங்கத்தவர் குறுகிய நோக்கைவிட்டு, பொதுநன்மையை நாடி நிற்பின் எல்லாம் நன்மையாகவே முடியவிடமுண்டு. எத்தனையோ கல்லூரிகளும் மற்றும் வயதிகளுமுடைய கொழும்பில் சர்வகலாசாலை அமைப்பதை அங்கீகரிப்பின் யாவரும் உவகை எய்துவர்.

## மலாய்நாட்டுத் தமிழன்பர்களுக்கு!

நமது "ஈழகேசரி"க்குச் சந்தாப்பணம் அறவிடுவதற்கும், புதிய சந்தாதாரகளைச் சேர்ப்பதற்கும், திரு. தை. நாகலிங்கமவர்கள் மலாய்நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் வரவிருப்பதால், அன்பர்கள் தங்களால் வரவேண்டிய சந்தாத்தோகையைக் கொடுத்து உதவிசெய்வதுடன், தங்கள் நண்பர்களையும் புதிய சந்தாதரர்களாகச் சேரும்படி தூண்டி ஆதரவளிக்குமாறும் வேண்டிக்கொள்ளுகின்றேம்.

சுன்னுகம் 22-9-35 } அதிபர், ஈழகேசரி.

### திருநெல்வேலி சைவ அநாதசாலை

### ஒருசீமாட்டியாரின்சிரார்த்ததினத்தில் ஓர் பிரபுவின் ஔதாரியம்

பிரபல நகைவியாபாரம் செய்பவர்களான பெரியகடை திரு. முத்துக்குமாரு கனகரத்தினம்பிள்ளை அவர்கள், சிவபதமெய்திய தமது அருமைச் சோதரியாரின் சிரார்த்த தினத்தில் (நிகழும் செப்டம்பர் மாதம் 11-ம்உ) திருநெல்வேலியிலுள்ள சைவ அநாதசாலையிலிருக்கும் 70 அநாத பிள்ளைகளுக்கு ஒவ்வொருவருக்கும் தனித்தனி அவர்களுக்கு அளவான வேட்டியும், பெனியனும் உதவி, சிற்றுண்டியும் வழங்கினுர்கள். ஒருவர் தூண்டாமலே, "வறியார்க் கொன்றீவதே யீகை", "அற்றுரழிபசி தீர்த்த லஃதொருவன், பெற்றுன் பொருள் வைப்புழி" என்னும் தெய்வப் புலமைத் திருவள்ளுவரின் திருவாக்குகளை உணர்ந்து—மற்றவர்களின் முகமனை விரும்பாமல்—மனேஜர் முதலியோர் அறியாமல்—அந்தரங்கமாக—வலிந்து தேடிவந்து—ஏனைச் சைவப்பிரபுக்களுக்கெல்லாம் முன்மாதிரியாகப் பேருபகாரஞ்செய்த பிரபு அவர்களின் செயலைச் சைவவித்தியாவிருத்திச்சங்கம் பெரிதும் பாராட்டுகின்றது. பிரபு அவர்களின் அருமைச் சகோதரியாரின் ஆத்மா, பரம ஏழைகளாகிய—திக்கற்ற—இளங்குழந்தைகளின் பூரிப்போடுகூடிய உவகையினுல்—மென்மேலும் சாந்தியெய்துவதாக.

சி. சுவாமிநாதன், கௌரவகாரியதரிசி சை. வி. வி. சங்கம்.

சை. ஆ. கலாசாலை 20-9-35

(இத்தாலிய கப்பல்கள் சூயெஸ் கால்வாய் மார்க்கமாக இடைவிடாது செல்வதால் அப்பிரதேசங்களிலுள்ள மகமதிய வியாபாரிகளின் வியாபாரம் விருத்தியடைகிறது.)

அப்துல் :- இத்தாலியரையும் முசோலினியையும் அல்லா ஆசீர்வதிப்பாராக.

ஹமித் :- அபிசீனிய அரசகுடும்பம் தழைத்தோங்குவதாக.

மாணம் :—யாழ்ப்பாணத்து மயிலிட்டிதெற்கு வாசரும் மலாய்நாட்டில் புகைரதப்பகுதியில் உத்தியோகமாயிருந்து இளைப்பாறியவருமான திரு. கா. அரியகுட்டி என்பவர் சென்ற 17-9-35 புதன்கிழமை நீண்டகாலமாகப் பீடித்திருந்த நோய்காரணமாகத் தேகவியோகமாயினர்.

* * *

தெல்லிப்பழை—வீமன்காமம் ஸ்ரீமான் தங்கராசபிள்ளையின் கனிஷ்டபுத்திரனும் வைத்தியமாணவர் த. இ. நிற்சிங்கமவர்களின் சகோதரனுமான திரு. இராசசூரியர் என்பவர் சென்ற 7-9-35 சனிக்கிழமை சடுதியாக உண்டான மாரடைப்பினுல் உயிர்துறந்தார்.

# சர்வதேசசங்கத்தின் கௌரவத்தைப் பாதுகாப்பது அவசியம்

## பிரான்சியமந்திரியின் உறுதி மொழிகள் | எப்போதாவது யுத்தம் நிகழும்

## முஸோலினியின் யுத்த வெறி

பிரிட்டிஷ் பிரதிநிதியாகும் சேர். சாமுவேல்ஹோர் கூறியபிரகாரமே பிரான்சிய தேச அந்நியநாட்டு மந்தியாரும் சர்வதேசசங்கத்தின் கௌரவத்தைக் காக்க முன்வந்துள்ளார். "சர்வதேசசங்கத்தின் மரியாதையைக் காப்பது எல்லா வல்லரசினரதும் கடனாகும். நான் பிரான்சிய தேசத்தவர் சார்பாக அப்பொறுப்பினை ஏற்கிறேன். சர்வதேச சங்கத்தின் முடிபுகளில் எனக்குப் பெரிதும் அபிமானம் உண்டு. எங்கள் கடமைகளைச் செய்தே தீரவேண்டும்" என லவால் திடமாகநின்று இத்தாலியர் போக்கினைக் கண்டித்தார். சர்வதேச சங்கம் பழுதடையில் எல்லாநாட்டினர்க்கும் கெடுதி ஏற்படுமென்பது இவர் கருத்து. பிரிட்டிஷாருடன் பிரான்சியர் ஒத்துழைப்பது பெருஞ் சந்தோஷத்தை விளைப்பதாகவுங் கூறினர். சர்வதேச சங்கத்தின் கௌரவத்தைக் காப்பாற்றுவதில் இத்தாலியின் நண்பரென்ற முறையில் தாம் உழைப்பதாகவும் பிரான்சிய முதன்மந்திரியாராகும் லவால் கூறினார். * *

"பிரான்சிய பிரதிநிதியாகும் லவாலின் பேச்சு எங்கட்குப்பாதகமாகவுமில்லைச் சாதகமாகவுமில்லை" என இத்தாலியர் கூறுகின்றார். எப்படியாயினும் இத்தாலியர் தமது எண்ணத்தை முடித்துச் செல்வாராம். லவால் பேச்சு இத்தாலியர்க்குச்சார்பாகவிருக்குமெனப்பலரெண்ணி மோசம்போயினர். இவ்விதமாக உலக அபிப்பிராயம் இத்தாலியர்க்குமாறாக இருப்பதைக் கண்டு, இத்தாலியர் சிறிது தடுமாற்றமடைகின்றனர். அபிஸீனியாவைத் தாம் எதிர்க்குங்கால் தம்மை எவரும் எதிர்க்காரென எண்ணி மோசம்போயினர். இப்போது இத்தாலியர் மாட்டிக்கொண்டனர். இனி, கௌரவத்துடன் எப்படி வெளியேறப் போகின்றனரோ தெரியவில்லை. *

இத்தாலியர் தமது யுத்தக் கப்பல்களில் சிலவற்றை இந்துசமுத்திரத்தில் நிற்கும்படி யனுப்புகின்றனர். மத்தியதரைக் கடலிலும் பிரிட்டிஷார் தமது யுத்தக்கப்பல்களைக் கொணர்ந்து பலப்படுத்துகின்றனர். சமீபத்தில் மூன்று நான்கு கப்பல்கள் புதிதாக அனுப்பப்பட்டிருக்கின்றன. ஓர் தரைச் சேனையும் இங்கிலாந்திலிருந்து மோல்டா என்னுந் தீவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. யுத்தாயத்தம் மோல்டாவில் ஏற்படுகின்றனவாம். சண்டை ஆரம்பமாகின் முதலாவதாக ஆகாயக்கப்பல்களால் அபிஸீனியாவின தலைநகராகும் அடிஸ் அபாபாவினை இத்தாலியர் தாக்குவாராம். * *

அபிஸீனிய இத்தாலிய விஷயமாக நிபந்தனைகளைத் தயாரித்து வெளியிடும்படி சர்வதேசசங்கத்தினர் ஐந்துபேரடங்கிய ஒரு சிறு நிர்வாக சபையை ஏற்படுத்தியுள்ளார். அந்நிர்வாகசபையினரது அறிக்கை வெளியானவுடன் இத்தாலியர் தமது எண்ணத்தை நேற்று (21–9–35) சனிக்கிழமை வெளியிடப்போவதாக புதினங்கள் கூறியுள்ளன. நிர்வாகசபையாரின் திட்டத்தால் ஒரு நன்மையுமேற்படாதென்பதே இத்தாலிய அரசாங்கத்தினரின் திடமான அபிப்பிராயம். இத்தாலியர் சர்வதேசசங்கத்தினர் முடிபுகளை முற்றாகப் புறக்கணித்து விடுவாரெனவும் இனிமேல் சமாதானப்பேச்சில் ஈடுபடாரெனவும் கூறப்படுகிறது. எப்போது இத்தாலியர் சர்வதேச சங்கத்தைவிட்டு விலகுவாரென முற்றாகச் சொல்ல வியலாதாகின்றது. யுத்தம் ஆரம்பமாகும் தினமுங்குறிக்கப்படாதிருக்கின்றது.

* * *

எல்லாம் முறுகுபதத்தில் வந்துவிட்டன. தீயிட்டவுடன் நெருப்புப் பற்றி வேகமாக எரியுமென்பது நிச்சயம். ஒரு சிறு சாட்டினைக் காரணமாகக்கொண்டு பெரும் யுத்தம் ஏற்படவேண்டியதே. எந்த நிமிடம் யுத்தம் ஆரம்பிக்குமெனச் சொல்ல வியலாது. சர்வதேசசங்கத்தின் தீர்மானங்களைத் தாம்ஏற்கவியலாதென்றும் அவை இத்தாலியரைப் பகிடிபண்ணுவதற்கேற்பட்டனவென்றும் முஸோலினி கூறுகின்றார். இத்தாலியர் தமக்குப் புதிய நாடுகள் வேண்டுமெனக் கேட்க, சர்வதேச சங்கத்தினர் இரு வனாந்தரப்பிரதேசத்தைக் காட்டியுள்ளார்: அதிலொன்று கற்பாறைகள் நிறைந்த வனாந்தரம். மற்றையது உப்புவனாந்தரம். 'சர்வதேச சங்கத்தினர் என்னை வனாந்தரப் பிரதேச அதிபரெனக் கருதுகின்றார்போலும்' என முஸோலினி சினந்தெழும்புகின்றார்.

* * *

அபிசீனியாவில் தற்போது வசிக்கும் இத்தாலிய தூதர்கள் வெளியேறுவதற்கு உத்தரவளிக்கப்பட்டுள்ளது. அவர்கள துவீடுகளைப் பாதுகாக்க இனித் தம்மால் முடியாதென அபிசீனிய அரசினர் கூறிவிட்டனர். பெல்ஜிய அரசினர் சேனையில் உத்தியோகம் வகித்த சிலர் அபிசீனியா சென்று தம்மைச் சேனையில் சேர்க்கும்படி கேட்கின்றனர். தாம் இனி பெல்ஜியத்துக்கு ஒருபோதும் போவதில்லையெனவும் கூறுகின்றனர். இத்தாலிய அரசினர் இத்தாலிய வாசிகள் இரும்பு உருக்கு என்பவைகளை ஒன்றிற்கும்உபயோகிக்கப்படாதெனக் கட்டளையிட்டுள்ளார். மேலும் அரசினர் வரிகளையும் கூட்டியுள்ளார். *

"எங்களை இச்சமயத்தில் நிற்பாட்டும்படி கேட்பது முறையல்ல. நாங்கள் யுத்தத்தை ஆரம்பிக்கப்போகின்றோம்" என்பது முஸோலினியின் கூற்றாகும். பிரிட்டிஷாருடன் தாங்கள் நெடுநாளாக நட்புப் பூண்டிருந்ததாகவும் இனி அபிப்பிராயபேதமடைந்து வேற்றுமையடைவது பெருந்துக்கமான காரியமெனவும் முஸோலினி கூறினர். "இதுவரையும் ஆபிரிக்காவில் யுத்தாரம்பஞ் செய்வதில் ஆயிரக்கணக்கான பவுண்கள் செலவு செய்து விட்டோம். இவ்வாறு பெருஞ்செலவு செய்தது பகிடிக்கா? அன்று. நாம் சேனையைச் செலுத்திச் செல்வோம். நிற்பாட்டும்படி சொல்வது இப்போவன்று" என்பதும் முஸோலினியின் தலைப்பாரமாகும். சிறுதேசங்களாகும் போத்துக்கல், ஹொல்லந்து, பெல்ஜியம் முதலிய நாடுகளுக்குக் குடியேற்ற நாடுகள் போதியளவுளதாக இற்றாலிக்கில்லாதிருப்பது பெருங்குறையென்பதும் முஸோலினியின் கருத்து. *

சர்வதேசசங்க நிர்வாகசபையினர் தமது திட்டத்தைத் தயாரித்துவிட்டனர். அது விரைவில்இத்தாலியர்க்குச்சமர்ப்பிக்கப்படும். அதன்சாரம் வருமாறு: (1) அடிமைகளைவைத்திருக்குமுறையை அபிசீனியர்முற்றாக நீக்கவேண்டும். ஆயுதங்களைக் களவாக விற்றலும் நிற்பாட்டப்படவேண்டும். அந்நிய வியாபாரிகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

(2) அந்நிய நாட்டினர் அபிசீனியாவின் பொருளாதார நிலையைச் சீர்திருத்தும் உரிமையைப் பெறவேண்டும். சுரங்கங்களைப் பொருத்தமாக வாங்கி வேலைசெய்யும் உரிமை அந்நியநாட்டினர்க்குளதாகவேண்டும், அந்நிய அரசினரின உதவியைக் கொண்டு வியாபாரம், கைத்தொழில், தபால்பகுதி புகைரதம் என்பன திருத்தியமைக்கப்படலாம்.

(3) அபிசீனியாவின்பண நிர்வாக முறைமாற்றியமைக்கப்படவேண்டும்.

(4) இத்தாலிக்கும் அபிசீனியாவிற்கு மிடையிலுள்ள எல்லை குறிக்கப்படவேண்டும். இதற்கு வேண்டியதாயின் அபிசீனியாவுக்கு பிறிட்டிஷாரும் பிரான்சியரும் நிலம்விட்டுக் கொடுப்பார். அபிசீனியா கடலுடன் சம்பந்தமடைதற்கும் வசதிகள் அளிக்கப்படும். அபிசீனியர் மீது சாட்டப்பட்ட குற்றம் 700 பக்கங்களில் எழுதி இத்தாலிய பிரதிநிதியால் வாசிக்கப்பட்டதாம். அபிசீனியர் இக்குற்றச் சாட்டுகளை முற்றாக ஒதுக்கி விடுகின்றனர். வேண்டுமாயின் வல்லரசுகள் இவ்விஷயத்தை நன்கு விசாரணை செய்யும்படி அபிசீனிய அரசினர் கேட்கின்றனர். இத்தாலியருக்கும் தமக்குமுள்ள தகராற்றைத் தீர்ப்பதற்கு வேறுநாடுகள் தலையிடுவதைத் தாம ஒருபோதும் எதிர்க்கவில்லையென்றும் அபிசீனியவரசினர் கூறுகின்றனர்.

## கடிதம்

### "தினவர்த்தமானி"யின் நீலிக்கண்ணீர்

'ஈழகேசரி'ப் பத்திராதிபர் அவர்கட்கு :

ஐயா! இந்தமாசம் 12உ தொடக்கம் யாழ்ப்பாணத்தில் தினவர்த்தமானி என்னும் ஓர் பத்திரிகை வெளிவருவதைக் கண்டேன். இப்பத்திரிகையின் நோக்கம் என்ன என்பது நமக்குப் புலப்படவில்லை. முதலாவதாக வெளிப்பட்ட பத்திரிகையிலும் அடுத்த பத்திரிகைகளிலும் மலையாளப் புகையிலை வியாபார ஐக்கிய சங்கத்தைப்பற்றியும், அதனுல் யாழ்ப்பாணக் கமக்காரருக்குப்பெருங்கேடுவரப்போகின்றனவென்றும் நீலிக்கண்ணீர் வடிக்கின்றது. இது மலையாளப் புகையிலை வியாபார ஐக்கியசங்கத்தைக் கண்டனம் செய்வதற்காக வெளிவந்த பத்திரிகையோவென நாம் அறிய ஆவலாயிருக்கின்றேம். தினவர்த்தமானி கூறுவதுபோல் சென்ற 80 வருடக் காலங்களாக மலையாளத்தில் நடைபெற்றுவந்த இந்தப் புகையிலை வியாபாரத்தைப்பற்றி எடுத்துக் கூறுவதற்கு இலங்கையிலும் இந்தியாவிலும் எப்பத்திரிகையும்இருந்ததாகநாம்இதுவரையும் அறியவுமில்லை, கேள்விப்படவுமில்லை.

இற்றைக்கு இரண்டு வருடங்களின் முன் யாழ்ப்பாணததில் தொடங்கப்பட்ட மலையாளப் புகையிலை வியாபார ஐக்கியசங்கத்தின்பின், இங்குள்ள சில வியாபாரிமார்களுக்கிடையில பரபரப்பு ஏற்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இவை காரணமாக யாழ்ப்பாணத்திலுள்ள சில பத்திரிகைகள் பொதுநன்மையைவிரும்பிக் காலந்தோறும் இச்சங்கத்தைப்பற்றி எழுதிவந்ததைக் கண்ணுற்றேம். ஆனுலிப்பொழுது வெளிவந்திருக்கும் தினவர்த்தமானி மேற்கூறிய வியாபாரிமார்களின் சூழ்ச்சியால் இச்சங்கத்துக்கு விரோதமாக வெளிவந்த பத்திரிகையோவென நாமனைவரும் ஐயுறவேண்டியதாயிருக்கிறது. சென்றவருடத்தில இச்சங்கம் (800) எண்ணூறு கண்டி புகையிலை வாங்கி யதிலோர்பகுதியை மலையாளத்திற்கனுப்பி அங்கே வியாபாரம் நடைபெற்றுவருகின்றது. இவ்வருடமும் இதுவரையி லிச்சங்கம் ஏறக்குறைய (800) எண்ணூறு கண்டி புகையிலை வாங்கியிருக்கிறது. இவை இங்ஙனமாக, இந்த மாதம் 12-ந் திகதியில் வெளிவந்த தினவர்த்தமானியில் வருஷம் மாசம் இன்றியும் சங்க மனேச்சருடைய அனுமதியின்றியும் திகதி குறிப்பிடாமலும அவருடைய ஒப்பத்தோடு இந்தமாதம் 28-ந் திகதி தொடக்கமாக இச்சங்கம் புகையிலை கொள்ளப் போவதாக ஓறிவித்தல் வெளியிடப்பட்டிருக்கின்றது. இவ்வித செய்கைகளின் நோக்கமென்னவென்பதை அதன் பத்திராசிரியர் வெளியிடின் மிகவும் நன்றாகும். தினவர்த்தமானியில் வெளிவந்த ஒவ்வோர் விஷயத்தைக் குறித்தும் எழுதுவதாயின் கேசரி இடங்கொடாதென அஞ்சி இவ்விதழில் தினவர்த்தமானி கூறியவாறு மாயமாய் மறைந்த 48 கண்டி புகையிலையைப் பற்றிஎழுதி, மிகுதியை அடுத்த இதழில் வெளிவரக்கூடியவாறு எழுத உத்தேசிக்கின்றேன். இச்சங்கந்தொடங்க முன்னதாய் யாழ்ப்பாணத்திலுள்ள மலையாளப் புகையிலைசெய்யும் கமக்காரரின் நிலை மிகவும் பரிதாபமாகவிருந்தது. அவர்கள் புகையிலையைச்செய்து உலர்த்தி வீட்டில் பாடம் போட்டு வைத்திருப்பார்கள். செட்டிப்பிள்ளைகளும் வியாபாரிகளும் தாங்கள் விரும்பிய நேரத்தில் தங்களுக்குக் கீழுள்ள வியாபாரிமார்களைப் புகையிலைகொள்ளும்படி முற்பணம் கொடுத்து விலையும் குறித்துவிடுவார்கள் இச் சில்லறை வியாபாரிமாரும் அவர்களின் தரகர்மாரும் மன உத்தேசத்துக்கு இரண்டுகண்டி நிறையுள்ளதை ஒன்றரைக்கண்டி என்றும், ஒரு கண்டி நிறையுள்ளதை முக்கால்கண்டி யென்றும் கூறி, தாம் விரும்பிய விலையைக்கொடுத்து வாங்கிக்கொண்டு போவார்கள், கமக்காரரும் நெடுகவைத்திருந் தென்னசுகமென மனஞ்சலித்துக் கொடுத்துவிடுவார்கள். இதுவும் புகையிலையுலர்த்திக் குறைந்தது ஆறு அல்லது ஏழுமாசங்களின்பின் தான் நடைபெறும். இச்சங்கம் தொடங்கியபின் கமக்காரர் தங்கள் புகையிலையை உலர்த்தி இறப்பால் அவிழ்த்தவுடன் பாடம்போடாது சங்கத்துக்குக் கொண்டுபோனலங்கே யவர்கள் அதை யாபேருடைய முகதாவிலும் தெரிந்து பின் நிறுத்து (600) அறுநூறிறுத்தல் ஒருகண்டியாகக் கணக்குப்பார்த்து எங்களுக்குப் பணம் கொடுக்கிறார்கள். இப்படிச்செய்வதினுல் சங்கம் கமக்காரருக்கு ஒருகண்டி புகையிலைக்கெனக் கொடுக்கும் பணம் உண்மையாக ஒருகண்டிக்கல்ல. அவர்கள் ஒருகண்டியிலும் குறைவான நிறையுள்ள புகையிலைக்கே பணம் கொடுக்கிறார்கள். ஏனெனில் இறப்பாலவிழ்த்தவுடன் சங்கத்துக்குக் கொடுக்கும் புகையிலையில் நாள் செல்லச் செல்ல வற்றல் ஏற்படுவது இயல்பு. இனி இச்சங்கம் கொள்வனவுசெய்யும் புகையிலையால் வரும் ஆதாயம் இச்சங்கத்தில் சேர்ந்தவர்களுக்கேயன்றி வேறொருவருக்குமல்ல. வியாபாரிமாரும் செட்டிப்பிள்ளைகளும் புகையிலையை நிறுத்தெடுக்கும்போது (672) அறுநூற்றெழுபத்திரண்டு றாத்தலை ஒரு கண்டியாகக் கணக்கிட்டு எடுக்கிறார்கள். இதுவும் புகையிலை ஈரப்பசுமையின்றி நல்லாக வற்றியபின் நடைபெறுகிறது. இப்படிச் செய்வதினுல் எழுபத்திரண்டிறாத்தல் புகையிலையைக் காசில்லாமல் செட்டிப்பிள்ளைகளும் வியாபாரிமாரும் எடுத்துக் கொள்ளுவார்கள். இதனுலிவர்கள் கொள்வனவுசெய்யும் புகையிலையில் வற்றல் குறைவு ஏற்படாமலிருக்கின்றன போலும். இனி இவர்களுக்கு வரும் ஆதாயமும் அவர்களுக்கேயன்றிக் கமக்காரருக்குச் சேராதே. மேற்கூறிய விதமாகச் சங்கம் ஒருபுறமாகவும் வியாபாரிமார்களும் செட்டிப்பிள்ளைகளும் மறுபுறமாகவும் புகையிலை கொள்வதால், இதில்யாவருக்கு கமக்காரர் புகையிலைகொடுத்தால் ஆதாயம் என்பதை நன்கு அறிவர். வியாபாரிமார் கொள்வனவு செய்வதுபோலச் சங்கமும் ஒரு கண்டிக்கு 72 எழுபத்திரண்டிறாத்தல் வீதம் கூட்டிப் புகையிலைக்கொள்வனவு செய்திருந்தால் சென்ற வருஷம் வாங்கிய எண்ணூறு கண்டி புகையிலைக்கும் பதிலாக எண்ணூற்றுத் தொண்ணூற்றாறு கண்டி புகையிலை காணப்படும். அப்படியாயின் தினவர்த்தமானி கூறுவதுபோல் நாற்பத்தெட்டுக்கண்டி புகையிலை மாயமாக மறைந்திராது. இதற்குப் பதிலாக இன்னும் நாற்பத்தெட்டுக் கண்டி புகையிலை கூடவிருக்கும். மாயமாய் மறைந்த நாற்பத்தெட்டுக்கண்டி புகையிலைக்கும் காரணம் என்ன என்பதைத் தினவர்த்தமானி இனியாவது அறிந்துகொள்ளட்டும். இச்சங்கத்தால் வரும் நட்ட லாபமும் இச்சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கேயன்றி மற்றவர்களுக்கன்று. ஆதலின் தினவர்த்தமானி இப்படியான போலிநியாயங்களை எழுதி வெளிப்படுத்துவதை விட்டு நல்ல வழியிற் செல்லுமென்று நம்புகின்றேன்.

இச்சங்கத்தால் வரும் நயத்தை அனுபவிக்கவும் நட்டத்தை ஏற்கவும் சங்கத்தில் சேர்ந்த நாங்கள் தயாராயிருக்கின்றேம். இச்சங்கம் பங்கப்படாது நடைபெறவேண்டுமென்பதே எமது விருப்பம். அப்படியானுல்தான் கமக்காரராகிய நாங்கள் கஷ்டமின்றிச் சீவிக்கமுடியும். இச்சங்கத்தில் சேர்ந்து ஏறக்குறைய 60 கண்டி புகையிலையை நானும் என்னைச் சேர்ந்தவர்களும் இவ்வருடமும் சென்ற வருடமும் கொடுத்திருக்கின்றேம். இதுபற்றியே இக்கடிதத்தை இப்போது எழுதலானேன்.

வறுத்தலைவிளான் 20-9-35 } அ. கந்தையா, கமக்காரன்

வந்த விருந்தினரைக் காப்பாற்றுபவன் வாழ்க்கைக்குக் கெடுதலில்லை.

# சொல்லுகிறேன் கேளுங்கள்

பிரான்சுதேசப் பிரதமமந்திரியார்: புத்துயிரளிக்கும் வைத்தியர்: கொள்ளைக் கூட்டத்தாருக்குக் கொடுந்தண்டனை: தேசாதிபதியும மந்திரிமாரும: ஆயாவாக மாறிய ஐயர்: நீதிபதி பதவிக்குபபோட்டி: ஆரோக்கிய மற்றவர்கள்: ஆனைக்கு நானூறு: பூனைக்குப் பதினேழு

"ராகவன்"

லவால் என்பவருடையபெயர் தற்போது பத்திரிகை உலகத்தில் உலாவி வருகின்றது. இவர் பிரான்சுதேச பிரதம மந்திரியாவார். இத்தாலிய அபிசீனிய விஷயத்தையிட்டு இவர் சாவதேசசங்கத்தில் நிகழ்த்திய பேருரை யாவராலும் போற்றப்பட்டது. பிரித்தானிய பிரதம மந்திரியாராகவிருந்து இளைப்பாறிய திரு. ராம்சே மைக்டொனல்ட் முதலியவர்களைப்போல இவரும் மிக ஏழ்மை நிலையிலிருந்தே இப்பதவியை யடைந்தார். இவரது தநதையர் ஓர் கோப்பி வியாபாரி. இளமையில் இவர் ஓர் இறைச்சிக்கடையில் வேலைபழகிவந்தார். பின்னர் புகைரதஸ்தானத்துக்குக் குதிரைவண்டி ஓட்டிவந்தார். அந்தக்குதிரைக்குத் தனதுகடமை நன்குதெரியும். ஆகையால் லவால் குதிரையிற் கவனஞ்செலுத்தாது நூல்களை வாசித்துக்கொண்டிருப்பார். "முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும்" என்பதற்கிணங்க லவால் சிறிதுகாலத்தில் தமது 18-வது வயதில் ஓர் கிராம வித்தியாசாலையில் ஆசிரியரானார். இதிலிருந்தே தற்போது தமது தேசத்துப பிரதம மந்திரியானார். சென்ற கிழமை ஒருவிதமான வேடிக்கைகளுமிலலாது தமது ஒரேயொரு புதல்வியாரை ஓர் நியாயவாதிக்கு மணஞ்செய்துவைத்தார்.

## புத்துயிரளிக்கும் வைத்தியர்

டக்டர் ரூல்வ் எஸ். வில்லாட் என்பவர் வைத்திய உலகத்தை அதிர்ச்சிகொள்ளச் செய்திருக்கிறார். இவர் இறந்த குரங்கொன்றுக்குப புத்துயிரளித்திருக்கிறார். இவர் நோயாளிகளைப் பனிக்கட்டியால்மூடிக் குளிரினால் இறக்கச்செய்வார். இறக்கச்செய்தவுடன உடம்பிலிருக்கும்கிருமிகள் இறந்துவிடும. பின்னர் ஊசிமூலமாக உடம்பில் மருந்துகளைச்செலுத்தி புத்துயிரளிப்பாராம். இவ்விதமாக எந்தநோயையும் குணமடையச் செய்யலாமெனவும அவவைத்தியர் கூறுகின்றார். சில நாட்களின்முன அநேக பத்திரிகை நிருபர்களமுன் ஓர் குரங்குக்குப் புத்துயிரளித்தாராம. பனிக்கட்டி நிறைநத பெட்டியொன்றுள் க்ஷயநோயால் பீடிக்கப்பட்டிருந்த குரங்கை அடைத்து வைத்து இறக்கச்செய்து இருநாட்களின்பின அதை வெளியேயெடுத்துப் பாரத்தபோது இரும்புபோல் விறைத்திருந்ததாம். வைத்தியா முதலாம் இரண்டாம்முறை ஊசியில் மருந்தேற்றியவுடன் இறந்த குரங்கு கால் கைகளை அசைத்து வாயைத் திறந்ததாம். மூன்றாம்முறை ஊசியேற்றியவுடன் அது இருமிக்கொண்டு எழுந்திருக்கத் தெண்டித்ததாம். கடைசியாக ஊசியேற்றியவுடன் தனது கூட்டுக்குள்சென்று அங்கு வந்திருந்த சனங்களைப் பரிகாசஞ்செய்யத் தொடங்கினதாம்.

## கொள்ளைக் கூட்டத்தாருக்குக் கொடுந்தண்டனை

கனடாதேசத்தில் கொள்ளைக்கூட்டத்தார் என்னுஞ் சொல்லே கிடையாதாம். இதற்கு நியாயம் குவெபெக் உயர்தர நீதியரசர் ஒருவர் கூறியிருக்கிறார். ஒருமுறை தெருவீதியில் துப்பாக்கிப்பிரயோகம் நடந்தது. வங்கியில் வேலையாயிருந்த இருவரும் ஒரு கொள்ளைக்கூட்டத்தைச்சேர்ந்தவனும இறந்தார்கள். மற்றவர்கள் இறந்தவனின் மடியிலிருநத பணத்தையும் உடையையும் பற்றிக்கொண்டு பிரேததததை ஓர் கிடங்கில் எறிந்துவிட்டு தமது மோட்டாரில் சென்றுவிட்டார்கள். பொலிசார் பிரேதத்தைத்தேடியெடுத்துப் பார்த்தபோது உள்ச்சட்டையில் ஓர் சிறு கடதாசித்துண்டு காணப்படடது. இதைக் கொள்ளைக் கூட்டத்தைச்சேர்நத மற்றவர்கள் கவனியாது சென்றுவிட்டனர். அந்தத் துண்டில் ஓர் 'டெலிபோன்' இலக்கம் எழுதப்பெற்றிருந்தது. பொலிசார் அந்த இலக்கமுடைய வீட்டைக் கண்டுபிடித்துக் கள்வரைக் கையும் மெய்யுமாகஅகப்படுத்தினார்கள். நீதிமன்றத்தில் இவர்களில் ஐவருக்குத் தூக்குத்தண்டனை விதிக்கபபடடது. இச்செய்தி கொள்ளைக் கூட்டத்தாரை மிகவும் பயமுறுத்திவிட்டது. இந்தப் பாடம் யாவரதும் ஞாபகத்தில் இன்றுமிருக்கின்றதாம். இதுமாத்திரமல்லாது குற்றஞ்சாட்டபபட்டவனெவனாவது துப்பாக்கி முதலிய ஆயுதங்கள் கொண்டுசென்றால் உடனே சவுக்கடி விதிக்கப்படுமாம். இவர்கள் சவுக்கடி பெறுவதற்கு மிகவும் வெட்கப்படுவார்களாம். இவ்விதமான செயல்களால் தற்போது கொள்ளைக்கூட்டத்தார் கனடாதேசத்தில் ஒழிந்துவிட்டார்களாம.

## பதில் தேசாதிபதியும மந்திரியாரும்

கைம்பெண் அநாதைப் பிள்ளைகள் உபகாரச் சம்பளச்சட்டம் திருத்தும் விஷயமாகப பதில தேசாதிபதிக்கும அரசாங்கசபை மந்திரியாருக்குமிடையில தகராறு ஏற்பட்டிருக்கிறது. சபைத்தலைவர் திரு. எவ். வ. ஒபயசேகார அவர்கள் சட்டத்தைத திருத்துதற்குத தேசாதிபதியின் உததரவு பெறத தேவையில்லையெனக்கூறி நீண்டதோர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். ஆனால் நமது பதில்தேசாதிபதி சோ றிரல, திரு. டீ. எஸ். சேனநாயக்கா அவர்களை உடனே அழைத்துத் தனது உத்தரவுபெறாது சபையில் திருத்தத்தைக்கொண்டுவந்தால் மிகப் பாரதூரமான விஷயமாகத் தான் அதை எடுத்துக்கொள்வதாகப் பயமுறுத்தினாராம். அன்று சாயந்தரம் திரு. சேனநாயக்கா அவர்களளித்த தேனீர் விருந்துக்குப் பதில் தேசாதிபதியவர்களும் சமுகமாயிருந்தார். ஆயினும் மந்திரிமார் ஒருபோதும் தங்கள் கொள்கையை விடுவதில்லையென வற்புறுத்துகிறார்கள். நமது மந்திரிமாரை எமக்கு நன்றாய்த் தெரியுமல்லவா?

## ஆயாவாக மாறிய ஐயர்

ஓர் அரசாங்கசபைஅங்கத்தவர் ஆயாவைத தமது தபால்களைக் கொணடுவரும்படி அரசாங்கச்செலவில்செய்தியனுப்பியதாக சில நாட்களின் முன பததிரிகைகள் கூறின. இதைக்குறித்துமசொல்லுகிறேன் கேளுஙகள். ஓர் அரசாஙகசபைஅஙகத்தவா இதுவ்ஷயததை ஒருநாள் விளங்கவைத்தார். குறிக்கப்படட இந்த அங்கத்தவருககு "ஐயர்" என்னுமொருவர் அந்தரஙகக காரியதரிசியாகவிருககிறாராம. இந்த ஐயரைத் தவால்களைக் கொண்டுவருமபடி செய்தியனுப்ப, தபாற்கந்தோர் உத்தியோகஸ்தர்கள் இதைப் பிழையாகவோ (அல்லது சிரிப்புக்கிடமாகவோ) ஆயாவைத் தபால்களைக்கொண்டுவருமபடி எழுதியனுப்பிவிட்டார்களாம. ஐயர் ஆயாவாக மாறியதால் அரசாஙகசபை அங்கத்தவர் படட அவஸ்தையை எவ்வாறு சொல்லலாம.

## நீதிபதிப்பதவிக்குப போட்டி

ஊர்காவற்றுறைக்கும் மல்லாகத்துக்கும் பிறம்பான ஓர் பொலிஸ் நீதிபதி நியமனம் பெறக்கூடுமென்ற எண்ணத்தினால் அப்பதவியை அவாவி இஙகுள்ள வழக்கறிஞர்கள் அநேகர் சட்டத்தலைவருக்கு மனுச்செய்திருக்கிறார்கள். ஆயினும் நியாயவாதிகள் ஒருவராவது இப்பதவியை விரும்பினில்லாது வழக்கறிஞர்களுடன் மாத்திரம் விட்டுவிட்டது பெரிதும் விரும்பத்தக்கது. இப்பதவியை அவாவி நிற்போரில் இரண்டு அல்லது மூன்று வழக்கறிஞர்கள் உண்மையிற் றகுதிவாய்ந்தவர்கள். சிலருக்கு எண்ணம் பெரிது. மற்றது சுண்ணந்தான்.

## ஆரோக்கியமற்றவர்கள்

எல்லோரும் விவாகஞ்செய்ய முடியாது. தைரியமுடையவர்களுக்கு மாத்திரமே விவாகம். விவாகஞ்செய்ய எத்தனித்திருப்போர் வைததியரிடமிருந்து ஆரோக்கியமுடையவர்களாகவிருக்கிறார்களென்பதற்குச் சாட்சிப்பததிரம் பெறுதல்வேணடும். பெற்றதும் மணமக்கள் தங்கள் பத்திரங்களை ஒருவருடன் ஒருவர் மாறறி வைத்திருநது விவாகபபதிவு செய்யும்போது காரியஸ்தரிடம் அவற்றை ஒப்புவித்தல் வேண்டும். இவ்வித ஒழுஙகு தற்போது இங்கிலாந்திற் செயயபபட்டிருக்கிறது. ஆனால் இது அநேகரை விவாகஞ்செயயாது தடைபண்ணி விடுமெனபதற்கு ஐயமில்லை. ஆனால் ஆரோக்கியமற்றவர்கள் இவ்வித ஒழுங்கை விரும்பார்கள். இலங்கைக்கு இச்சட்டம் வருமுன்னர் ஆரோக்கிய மற்றவாகள் ஆகவேண்டிய விஷயங்களைக் கவனிப்பாராக. நிற்க, இது இன்சூரன்ஸ் சட்டம்போலிருக்கிறது. இனசூரன்ஸ் செய்வதற்கும் வைத்தியரிடம் சாட்சிப்பத்திரம பெறவேண்டுமென்பதையும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

## ஆனைக்கு 400 பூனைக்கு 17

பிரித்தானிய இயற்கை நூலாசிரியர் ஒருவர் மிருகங்கள் உயிர் வாழும் கால எல்லையைக் குறித்து வைத்திருக்கிறார். இதை உங்களுக்குச் சொலவதற்காகக் கைப்பற்றியிருககிறேன்.

முயலினம் 6–7 வருடம் வரையில் வசிக்கும்
பூனை 15—17 „ „
நாய் 16—18 „ „
காடி 18—20 „ „
குதிரை 22—25 „ „
ஒட்டகமும் பசுவும் 60—வருடம்
ஆமை—110 வருடம்
கழுகு—120 „
யானை—400 „
திமிங்கிலம்—1000 „

மனிதரை இதில் எந்த இனத்துடன் சேர்க்கவேண்டுமென்பதை உங்களுக்குச் சொல்லவேண்டுமா?


லங்கா பினான்ஸ் கம்பெனி

The
**Lanka Finance Company**
Kankesanturai Road, Grand Bazaar
JAFFNA

காரியாலயம்:
காங்கேசன்துறை ரோட்டு, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

பின்வரும் வகுப்புச்சீட்டுகள் இப்போது அமைக்கப்படுகின்றன:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A வகு. | ரூ. 1000/- | ரூ. 40/- | வீதம் | 25 | மாதத்திற்கு |
| B „ | „ 500/- | „ 20/- | „ | 25 | „ |
| C „ | „ 250/- | „ 10/- | „ | 25 | „ |
| D „ | „ 125/- | „ 5/- | „ | 25 | „ |
| E „ | „ 75/- | „ 3/- | „ | 25 | „ |
| F „ | „ 100/- | „ 10/- | „ | 10 | „ |
| FNC „ | „ 250/- | „ 10/- | „ | 12½ | „ |
| WC „ | „ 250/- | „ 5/- | „ | 50 | கிழமைக்கு |
| WD „ | „ 125/- | „ 5/- | „ | 25 | „ |
| தினசரி B1&2 „ | „ 100/- | „ 1/- | „ | | |

கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதி
வேண்டிய விபரங்கள் அறிந்துகொள்ளலாம்.

மனேஜர், லங்கா பினான்ஸ் கம்பெனி,
காங்கேசன்துறை ரோட், யாழ்ப்பாணம்.

(33) 22-9-35



## விளம்பரம்

சுன்னாகம், மனுவேல்–யோசேப்புவும் பெண் மரியைப்பிள்ளையும் ஆகிய நாங்கள இததாற் சகலருக்கும் அறிவிப்பது:— யாழ்பபாணம் டிஸ்திறிக்கோட்டில் தொடரப்படடிருக்கும 8009, A 3677-ம இலக்க வழககுகளைககொணட கீழே குறித்திருக்கும் காணியை, எநத கொததாரிசுவாவது எவர்க்கும் எவ்வித சாதனமும் எழுதவாவது, எவராவது வாஙகவாவது, கடனுககவாவது கூடாதென்று இததால உறுதிபபடுததுகிறோம்.

காணிகளின் விபரம

யாழ்ப்பாணம் வலி. வடக்கு உடுவிற் கோவிற்பற்று சுன்னாகம் இறை அடிச்சேரியும பொட்டான தோட்டமும் பா. நிலை இலா. 12¼. எல்லை, கிழக்கு–ஒழுங்கை, வடக்கு–ரோட்டு, மேறகு–கையொழுங்கையும் கநதனகாத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனமும், தெற்கு–வலலிபுரம்-முத்தையாவுக்கும் பஙகாளருக்குமுரிய ஆதனம. இதில், சுவாமி-பாவிலுவுக்குரிய காணி பா.நிலை இலா.7. போக மிகுதி பா. நிலை இலா. 5¼.

சுன்னாகம் 17-9-35. } ம. யோசேப்புவும் பெண் மரியைப்பிள்ளையும்

# சூத்திரர் யார்?

(திரு. M. S. பூர்ணலிங்கம்பிள்ளை அவர்கள் B.A, L.T.,)

சூத்திரர் ஆரியருக்கடிமைப்போரில் தோல்வியுற்று அடிமைகளாயினவர், தாசியின் பிள்ளைகள், குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டு ஊழியஞ் செய்பவர்களெனப் பலவாறு வேதங்களில் கூறப்பட்டிருப்பதாக அறிகிறோம். நால்வகைச் சாதியில் இரு பிறப்பாளர் மூவரென்றும், அவர்கள் பிராமணர், க்ஷத்திரியர், வைசியரென்றும், இம்மூவரொழிந்த ஏனையர் சூத்திரரென்றுங் கூறப்பட்டுளது. இந்நால்வரில் இடையிட்ட இருவரும் இக்கலிகாலத்தில் அற்றுப்போயினரென்றும், பிராமணர் சூத்திரர் என்றே இருவகைச் சாதியே உண்டென்றும், பிராமணரல்லாதார் அனைவரும் சூத்திரரென்றும் கூறுதல் வழக்கமாயிற்று. பிறப்பில் மேலோரென்று ஒப்புக்கொள்ளும் ஏனைய மக்களுள் வேளாளர் தம் இன வரலாறு அறியாமல் சூத்திரரென்ற பெயரை வகித்துத் தாங்கள் சற்சூத்திரரென்ற பெயரைத் தரித்துப் பெருமை பாராட்டி வருவாருமுளர். கிறிஸ்தவ மதந் தழுவியவர் இந்துக்களை அஞ்ஞானிகள் என்று கூறுவதின் பொருள் அறியாமல் தாங்கள் அஞ்ஞானிகளென்று மறுமொழி பகர்வதை யொப்ப, ஆரியர்கள் கொடுத்த சூத்திரரென்ற பெயரை இத்தமிழகத்திலுள்ள மற்றையர் ஏற்றுக்கொண்டு தாங்கள் சூத்திரர்களென்று இனமறிய விரும்புகின்றூர் வினவிற்கு விடையளித்து வருகின்றனர். அந்தோ! பாவம்.

சூத்திரன் யார்? சுருதி சூத்திரமறிந்தவன் சூத்திரன், சூத்திரம் தொழுகிற கருவியைக் கையாடுபவன் சூத்திரன், என்பன பொருளாகுமல்லவா. நாடகக் கொட்டகையில் முதன் முதலில் தோன்றுபவர் சூத்திரதார் எனப்படுவர். அவர் வாயினின்றே நாடகக் கதைச்சுருக்கம் வெளிப்படும். பதுமைகளை ஆட்டுபவனும் சூத்திரகாரனெனப்படுவான். இவற்றை யுற்றுநோக்கின், திருக்குறள் போன்ற பொய்யாமொழி பயின்றவர் எவருஞ் சூத்திரர் எனப்படலாம். பற்பல தொழிற்குரிய யந்திரங்களைக் கையாடுபவரும் சூத்திரராவர். தமிழகத்தில் மேழி பிடித்தவரும் நிலமுடையாரும் வேளாளரென்றும், கொல்லா விரதத்தைத் தலைமுறைதலைமுறையாகக்கைக்கொண்டவர் சைவ வேளாளரென்றும், வாணிபஞ் செய்யும் வேளாளர் செட்டி மக்களென்றும், அரசசபையில் முதன்மை பெற்றவர் முதலியாரென்றும், காரைக்காட்டி லுள்ளவர்களும் வெளியேறினவர்களும் காரைக்காட்டாரென்றும் (கார்காத்தார்) பல தொழில் வகைப்பட்டவரையும் சூத்திரரென்றும் ஒருசொல்லாலழைப்பது ஆணவமிகுந்த அறிவிலிகளின் செயலாகும்.

இனி, சூத்திரன் என்பதற்கு வேறு பொருள் இலையோவென்று ஆராயின், உளவென்பது தெளிவுறும். மக்களின் இன்ப நுகர்ச்சிக்குரிய அங்கம் சூத்தெனப்படும். கல்வியின்றிப் பிறந்த மேனியிலே வளர்ந்து வருபவன் சூத்திரனுவான். எங்ஙனமெனில் பிராமணப் பிள்ளைகள் மந்திரமோதிப் பூணூலணியுமுன்னர் எவரோடு முணவுகொள்ளலாம். உண்டாரெனின் பெற்றோர் அவர்களைச் சூத்திரப்பயல்தானே, அதனுல் என்ன பாதகம் என்று கூறுதலை அறியாத மக்கள் கிடையா. இக்கூற்றுற் தாய் வயிற்றிற் பிறந்தவன் எவனுகிலும் சூத்திரனென்பதும் தாய்வயிற்றிற் பிறவாத மக்களிலரென்பதும், தாய் வயிற்றுப் பிறப்பு முதற்பிறப்பென்பதும், மந்திர தந்திரங் கற்றவர் மறுபிறப்புறுகின்றன ரென்பதும், அது காரணம்பற்றியே பிராமணராகிய மூவகையாரும் இருபிறப்பாளரென்பதும் வெள்ளிடைமலைபோல்விளங்கும.

இதுவுண்மையாயின், தலைசறந்த வடமொழி தென்மொழி ஆங்கில மொழிகளின் ஒன்றையேனும் நன்கு கற்றுத் திறமைவாய்ந்த பிராமணரலலாதாரைச் சூத்திரரென்று வாய்கூசாமற் பகிரங்கமாகக்கூறும் அகங்கார ஆணவம் பொருந்திக் கூத்தாடும் பேதமையை என்னென்று கூறுவம்.

தமிழ் மக்கள் இனியாயினும் தங்களைச் சூத்திரர்களென் றழைக்குமெவரையும மிலேச்சரென்றே கூப்பிடுவார்களாயின் தலைவிரித்துத் தாண்டவமாடும் அறியாமை நீங்கும். தமிழரின் முன்னோர் அவ்வாறே நாகரிகமற்ற பிராமணரை யழைத்திருக்கின்றூர்களென்பதைத் தமிழகராதியிற் காணலாம். —"இ-கேசரி."





"ஸோப்புகளைக்கொண்டு சலவை செய்வதினுல் என் துணிகள் சீக்கிரம் கெட்டுப்போய் விடுகின்றன. அதற்கு என்ன செய்யலாம்?"

"ஸன்லைட்டைத் தவிர வேறென்றும் உபயோகிக்காதே. துணிகளை வீட்டில் வெளுக்காவிட்டால் உன் வண்ணுனிடம ஸன்லைட் ஸோபபையே உபயோகித்து வெளுக்கும்படி கண்டிப்பாய் சொல்லு. இது துணிகளை துல்யப்படுத்துவதுடன் புதிதாக்கிவிடுகிறது."

ஒரு வாரத்திற்குப் பின்:

"ஸன்லைட்டையே உபயோகித்ததற்கு நான் சந்தோஷமடைகிறேன். என் ஆடைகள் முன்னிலும் அதிகமான வெண்மையையும் பிரகாசத்தையும் அடைந்ததோடு, சாயம் போகாமல் புதிய வஸ்திரம் போலவே காணப்படுகின்றன.




ஸன்லைட் உபயோகித்தால் இதர ஸோப்புகளினுல் அடையாத பயனைப் பெறலாம். இச்சிறந்த ஸோப்பின் நுரை அழுக்கு இருக்கும் இடம் பரவி, நீடித்த அழுக்கையும் அதி சீக்கிரத்தில், கசக்கித் துவைக்கவேண்டிய சிரமம் கொடுக்காமலே, முழுவதும் எடுத்துவிடுகிறது. இன்னும் வீட்டில் துலக்கவேண்டிய எல்லாப் பொருள்களுக்கும் இதை வாங்கி உபயோகிக்கலாம் ஸன்லைட் ஸோப்பையே கைப்பிடியுங்கள். இந்த ஸோப்பு இப்பொழுது மிகவும் மலிவாகக் கிடைக்கிறது.

I-S 1110-288A

LEVER BROTHERS LIMITED, PORT SUNLIGHT, ENGLAND

TAMIL.


## வலிகாமம் வடக்கு ஆங்கில ஆசிரியர் சங்கம்

இச்சங்கத்தின் ஐந்தாவதாண்டு நிறைவுவிழா ஆவணிமீ 29-ம் திகதி (14-9-35) சனிக்கிழமை காலை $9\frac{1}{2}$ மணியளவில் சங்க அக்கிராசனர் ஸ்ரீமான. தெ. வ. செல்லப்பா அவர்களின தலைமையின கீழ் தெல்லிப்பழை அமெரிக்கன் மிஷன் ஆங்கிலவித்தியாசாலைமண்டபத்தில் கொண்டாடப்பெற்றது. காரியதரிசியும் தனுதிகாரியும் முறையே தமது ஐந்தாவதுவருட அறிக்கைகளைச் சபையோருக்கு வாசிக்க அவை சர்வசம்மதமாய் ஏறறுக்கொள்ளப்பட்டன. அதன்பின் அக்கிராசனர், மானிப்பாய் இந்துக் கல்லூரிப் பிரதம ஆசிரியர், திரு. வீரசிங்கம், B. A. அவர்களுடைய கலாபிமானம், சுயவொறுப்பு, கல்வி விருத்தியிலவர் காட்டிவரும் ஆவம், செய்துவரும் சிறந்த சேவை முதலியவைகளைப் பற்றிச் சுருக்கமாகக் கூறியபின் அவர் பேசுவதற்கெடுத்துக் கொண்ட 'ஆசிரிய தொழிலின் மான்மியம்' என்னும் பொருள் பற்றிப் பேசுமாறு வேண்டினர். சொற்பொழிவாளரவர்கள் இயல்பாயவரிலமைந்திருக்கும் ஒப்பருமுற்சாகத்துடன் சபையோர் மகிழும்படி ஓர் பொருள் பொலிந்த சிறந்த விரிவுரை நிகழ்த்தினர். அதன்பின் கூட்டத்திற்குச் சமுகமளித்த வடமாகாண ஆசிரியர் சங்கக் காரியதரிசி, திரு. லைமன் குலத்துங்கம் B. A. அவர்கள் வலிகாமம் வடக்கு ஆசிரியர்சங்கம் செய்துவரும் சேவைகளைக் குறித்தும், பிரசாரகரவர்கள் பேபேசிய சில அபிப்பிராயங்களைப் பற்றியும் குறிப்புரை கூறினர். கந்தவரோதயக் கலலூரி ஆசிரியர் திரு. சி. முருகேசு அவர்களும், அளவெட்டி ஆங்கிலவித்தியாசாலை ஆசிரியர் திரு. தி. செல்லத்துரை அவர்களும் அக்கிராசனருக்கும், பிரசாரகருக்கும், சபையோருக்கும் மனமார்ந்த நதி கூறியபின் மல்லாகம் ஆங்கில வித்தியாசாலை ஆசிரியர் பொ. கனகசபை அவர்கள் சென்ற வருடம் முழுவதும் திறமையுடன் கடமைபார்த்த சங்க உத்தியோகத்தர், நிர்வாகசபை அங்கத்தவர்கள் அனைவருக்கும் சங்கத்தின் பேரால் நதி கூறினர். பின் அடுத்த வருடத்திற்கு உத்தியோகத்தரும், நிர்வாகசபையங்கத்தவர்களும் பினவருமாறு நியமனம் பெற்றனர்.

அக்கிராசனர்: திரு. கா. சின்னப்பா, உப அக்கிராசனர்கள்: திருவாளர்கள்: த. சினனத்தம்பி, சி. முருகேசு, I. P. துரைரத்தினம், காரியதரிசி: திரு. தி. செல்லத்துரை, உபகாரியதரிசி: திரு. வே. சிற்றம்பலம், தனுதிகாரி: திரு. V. குலசேகரம்பிள்ளை, Sports காரியதரிசி: திரு. வ. சுப்பிரமணியம், Sports உபகாரியதரிசி: திரு. K. P. பொன்னம்பலம்.

நிர்வாகசபை அங்கத்தவர்கள்:— வலிகாமம் வடக்கிலுள்ள ஆங்கில வித்தியாசாலை ஒவ்வொன்றிலும் இருஆசிரியர்கள்.

கூட்டம் 12 மணியளவில நிறைவெய்தியது. —கடிதம்.

சிறுவர் பகுதி

# தெசியஸ் கதை.

சி. த.

(முற்றொடர்.)

கிறீற் தேசத்து அரசனாகிய மினேஸ் என்பானுக்கு முன்பாக தெசியசும் மற்றையோரும் விடப்பட்டனர். மினெஸ் ஒரு பெரிய பொற்சிங்காசனத்தின் மீதிருந்தான். அவனுடைய மாளிகை ஒரு பெரிய மாபிள் மலைபோலவிருந்தது. இவர்களைக்கண்டதும் அந்தக்கிடங்கில் அனைவரையும் போடும்படி கட்டளையிட்டான். ஆனால், தெசியஸ் தான் ஈஜங் என்னும் அரசனுடைய மகன் என்றும், தன்னையே முதலாவதாக அனுப்பவேண்டுமென்றுங் கூறினான். மற்றைய வாலிபரோடும் கன்னிகைகளோடும் தெசியஸ் இருட்டுக் கிடங்கில் எறியப்பட்டான். மினெஸின் மகளாகிய அறியாடின் என்பவள் தெசியசைக் கண்டாள். அவனுடைய தைரியத்துக்காகவும் தோற்றத்துக்காகவும் அவள் அவனை நேசித்தாள். இத்தகைய ஒரு வாலிபன் இறப்பது வெட்கமானகாரியம் என்று கூறிவிட்டு, இராக்காலங் கிட்டியதும், அவள் மெதுவாக அந்த இருட் கிடங்குக்குட்சென்றாள். சென்று தனது காதலை வெளியிட்டாள். "உன்னுடைய கப்பலுக்கு இப்பொழுதே ஓடிவிடு. வாயிற் காவற்காரருக்கு நான் கைக்கூலி கட்டியிருக்கிறேன். அவர்கள் உன்னை விட்டுவிடுவார்கள், நீயும் உன்னுடன்வந்தோர் யாவரும் உங்கள் தேசத்துக்குப்போய்ச் சுகமாக வாழுங்கள். என்னையும் அழைத்துக்கொண்டுபோ. ஏனெனில், என் தகப்பன் இதைப்பற்றியறிந்தால் என்னைக் கொன்றுபோடுவான்", என்றும் அவள் அவனுக்குச் சொன்னாள். தெசியஸ் கொஞ்சநேரம ஒன்றும பேசாதுநின்றான். ஏனெனில், அவன் அவளது பேரழகில் ஈடுபட்டுநின்றான. ஆனால் கடைசியாக அவன் அவளை நோக்கி, "இங்கு மனிதரைத்தின்னும் இராக்கதனைக்கொன்றல்லாது நான் எனது தாய்நாடு போகமாட்டேன்" என்று கூறினான். அரசகுமாரி, "அழகிய வாலிபனே! நீயோ மிகவும் தைரியசாலியாயிருக்கின்றாய். நானும் உனக்கு உதவிசெய்கிறேன். நான் உனக்கு ஒருவாள் தருகிறேன். அதனால், அந்த ராக்கதனை நீயொருவேளை வெல்லக்கூடும். ஒருபந்து நூல் தருவேன். அதைக்கொண்டு வெளிச்செல்லும் வழியையும் நீயறியக்கூடும். நீ தப்பி வெளியேறினால் என்னையும் அழைத்துக்கொண்டு போவதாக எனக்கு வாக்குப்பண்ணு. நான் இன்னது செய்தேன் என்பதை என் தந்தை அறிந்தால் நிச்சயமாய் என்னைக் கொன்றேதீருவான்" என்று தெசியசிடம் சொன்னாள். வாளையும் நூலையும் தெசியசிடம கொடுத்துவிட்டுப்போனாள்.

தெசியஸ் வாளை மறைத்துவைத்தான். நூலைக் கையிலேசுற்றிக்கொண்டான். பின்பு படுத்து உறங்கினான். சிறிதுநேரம சென்றபின் எழுந்து கிடங்கிலே நடந்துபோனான். வெகுதூரம் சென்றபின் அந்த ராக்கதனைக் கண்டான். அவனுடைய உடம்பு மனித உடம்பாயிருந்தது. தலை மாட்டுத்தலையாக விருந்தது. பற்கள் சிங்கத்தினுடைய பற்கள்போல இருந்தது. தெசியசைக்கண்டதும் ஆர்ப்பரித்துக்கொண்டு அவனைக்கொலலும்படி ஓடினான். தெசியஸ் அவனுடைய முழங்காலில் வெட்டினான். பின்பு அவனைத் தூரத்தித் தூரத்திப் பலமுறையும் வாளினால் குத்தினான். முன் ஒருபோதும் இப்படிக் குத்தப்பட்டிராதவனு கையால் இராக்கதன் அந்த இருட்கிடங்கெல்லாம் ஓடினான். தெசியசும் நூலைவிட்டுக்கொண்டு துரத்தினான். கடைசியாகத் தெசியஸ் அவனைப்பிடித்துவிட்டான். கொம்புகளைப் பிடித்துக்கொண்டு, தலையை யுயர்த்திவிட்டுக் கூர்மையான தன்வாளை அவனுடைய தொண்டைக்குள்ளே செலுத்தினான். இராக்கதன் உயிர்துறந்தான். தெசியஸ் தான் விட்டுக்கொண்டு சென்ற நூலின் உதவியைக்கொண்டு அந்த இருட்டறையின் வாசலையடைந்தான். அங்கே இராசகுமாரிகாத்துக்கொண்டு நிற்பதைக் கண்டான். அவளுக்கு வாளைக்காட்டி, இராககதன் இறந்ததையுங் கூறினான், உடனே, அவள் மறியற் கூடத்துக்குச் சென்று அனைவரையும் சிறை மீட்டாள். பின்பு யாவரும் கப்பலுக்கோடினார்கள். எல்லாரும், விரைவாகக் கபபலிலேறிக் கொண்டுபோய் "நக்சொஸ்" என்னுமிடத்தையடைந்தார்கள். அங்கே அறியாடின் என்பவள் தெசியசின் மனைவியானாள்.

ஆனால் அவள் தனது கணவனோடு அதென்ஸ் நகரத்துக்குப் போகவில்லை. தெசியஸ் அவளை நக்சொஸ் என்னுமிடத்திலேயே விட்டு விட்டானென்று சிலர் கூறுகின்றனர். சிலர் அவன் அவளைத் துரத்தி விட்டானென்றுங் கூறுகின்றனர். அதென்ஸ் நகரத்திலே தெசியசின் தகப்பன் மகனின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். வெகுநாளாக மகனைக் காணவில்லை. கடைசியாகத் துக்கமேலீட்டினால் கடலுக்குள்ளே விழுந்து இறந்துவிட்டான். ஈஜியன் விழுந்த இடமே, "ஈஜியன் கடல்," என்று இன்று அழைக்கப்படுகின்றது. தெசியஸ் அதெனஸ் நகரத்தை யடைந்து தந்தையின் மரணத்தைக் குறித்து மிகவுந் துக்கப்பட்டான். பினபு இராச்சியத்தை தானே ஏற்று நடாத்தினான். தேசத்தை நன்கு காத்துப் பாரிபாலித்தான்.

## இங்கிலாந்தில் பெருங்காற்று

சென்ற 17-ம௳ இங்கிலாந்தின் தென்பாகத்தில் வீசிய பெருங்காற்றினால் அதிகஞ் சேதமேற்பட்டிருப்பதாக அறிகின்றேம்.

அனேக கப்பல்களும் பெரும் அபாயததினுள் அகப்பட்டனவாம. புறமறன் மேனர் என்னுங் கப்பற்றலைவரும் வேறு 3 பேரும் கடலில் அமிழ்நதினர்களாம். வீடுகள் வீழ்ந்ததனாலும் இருவர் இறந்தனராம். அனேகர் காயமடைந்தனராம். எட்டுபட்டினங்களில் டெலிபோன் சமாசாரம் பேசமுடியாது தடைப்பட்டிருக்கின்றது. இங்கிலாந்தின் தென்பாகத்தில யுத்தம் ஏற்பட்டிருக்குந தன்மையால் சனங்கள் மிகவும திகிலடைந்திருக்கிறனரெனவும் அறிகின்றேம்.

## 7 பேரைக் கொன்ற பாம்பு

மொராதாபாத் என்னுமிடத்தைச் சேர்ந்த ரஸ்பூரா என்னுங் கிராமத்தில் ஒரு குடும்பத்தைச்சேர்ந்த ஏழுபேர் இன்னொரு கிராமத்துக்குச் செல்லும்போது வழியில் ஒரு மரத்தின் கீழ் தங்கியிருந்தனர். அன்றிரவு அவர்கள் நித்திரைசெய்துகொண்டிருக்கும்போது ஒரு பாம்பு அந்த ஏழு பேரையும் கடித்துக் கொன்றுவிட்டதாம்.

# கலம்பகம்

இலங்கை அரசாங்க புகையிரதத்தின் தற்போதைய நிர்வாகத்தைப்பற்றி ஆராய்ச்சிசெய்து, அது லாபகரமாக நடைபெறத் தக்கதான வழிகளைக் கூறும்பொருட்டுச் சமீபத்தில் ஒரு சபை நியமிக்கப்படும். அச்சபைக்கு இரு அங்கத்தினர் இங்கிலாந்திலிருந்து வரவழைக்கப்படுவார்களாம்.

o o o

சென்ற சனிக்கிழமை இரவு கொழும்பு—யூனியன் பிளேசில் ஒரு மோட்டார் வண்டி புரண்டதன்காரணமாக அதிற் பிரயாணஞ்செய்த திரு. எச். ஒனே என்பவர் காயமடைந்தாராம்.

o o o

சென்ற 4-ம௳ கொழும்பு-செக்கடித் தெருவில், ஜிந்துப்பிட்டியைச்சேர்ந்த பஸ்தியான் அப்பு என்பவர் சட்டவிரோதமாகக் கஞ்சா வைத்திருந்தாரெனக் குற்றஞ் சாட்டப்பட்டு ஒருவருடக் கடுஞ் சிறைத் தண்டனை விதிக்கப்பெற்றதாம்.

o o o

பலப்பிட்டியைச்சேர்ந்த 60 வயதுடைய பாலாஹாமி என்னும் பெண் தனது கணவனாகிய அமரசிங்கா ஹின்னி அப்புஹாமி என்பவரைக் கத்தியால் குத்திக் காயப்படுத்தியது காரணமாக வைத்தியசாலையில் உயிர்துறந்தாராம்.

o o o

காலிநகரசபையில் கலுவளைப்பகுதிப் பிரதிநிதியாகவிருந்து காலஞ்சென்ற திரு, எஸ். எச். தசநாயகா என்பவரின் ஸ்தானத்திற்கு வருகிற அக்டோர்மாதம் 7-ந்திகதியன்று உபதேர்தல் நடைபெறும்.

o o o

இரு இத்தாலியர் அனுமதிச் சீட்டின்றி ஜிப்ரால்டர் நகருக்குள் இருந்ததற்காகக் கைதுசெய்யப்பட்டுப் பிணையில் விடப்பட்டிருக்கின்றனராம்.

o o o

1936-ம் ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கைத் தந்திச்செலவு விகிதம் குறைக்கப்படுமாம். o o

மட்டக்களப்பு நகரசபையின் உபதலைவராகிய திரு. எவ். எ. செல்வநாயகம் என்பவர், தனது மனைவியுடனும், நாலு குழந்தைகளுடனும, வேறு இரு பெண்களுடனும் மோட்டர்வண்டியில் மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகையில் முறிகண்டி என்னுமிடத்தில் மோட்டார்வண்டி ஒரு மரத்துடன் மோதியது. இதன்காரணமாகச் செல்வநாயகம் என்பவரது ஒருகை முறிந்துவிட்டது. அவரது மனைவி படுகாயமடைந்தார், மற்றையோர் அற்பகாயமடைந்தனராம்.

o o o

சென்ற 14-ந்திகதி மோதரை என்னுமிடத்தைச்சேர்ந்த வெலிசாராகே ஜுவான்சில்வா என்னும் வாலிபன் சட்டவிரோதமாக ஒருகட்டுக் கஞ்சா வைத்திருந்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு 3 மாதக் கடுஞ்சிறைத் தண்டனை விதிக்கப்பெற்றாராம். o o o

கோடகிரி—லங்காவிலுள்ள இத்தாலியப் பாதிரியாரான றெவறண்ட் ஏ. ஞானலயனன் என்பவர், கோடா—லங்காவிலுள்ள ஸ்ரீ ராம பஜனைக் கோபிலுக்குள் தீண்டாச்சாதியினர் சிலர் பஜனைசெய்துகொண்டிருக்கையில் அவர்களைத் துரத்திவிட்டு அங்கு வைக்கப்பட்டிருந்த ஸ்ரீ ராமபிரானின் படத்தை எடுத்துச்சென்று அதைக் கோடகிரி—லங்காவிலுள்ள கத்தோலிக்க ஆலயத்தின்முன் எரித்துவிட்டாராம்.

o o o

அலகபாத் றெயில்வே ஸ்ரேஷனில் ஏற்பட்ட புகைரதவிபத்துக் காரணமாக 7 பெட்டிகள் நொருங்குண்டன. பிரயாணிகளில் 3 பேர் காயமடைந்தனர். பதினாயிரம் ரூபாவரையில் நட்டமேற்பட்டிருக்கிறதாம்.

o o o

இந்திய சட்டசபையால் நிராகரிக்கப்பட்ட கிறிமினல் சட்டத் திருத்தமசோதாவை, இராசப்பிரதிநிதியின் சிபார்சுக்கிணங்க மறுமுறையும் பிரேரிப்பதற்கு உள்நாட்டுமந்திரியார் செய்துகொண்ட விண்ணப்பத்தைச் சட்டசபை மறுத்துவிட்டதாம். o o o

சென்றவருடம் பிரிட்டனில் மாத்திரம் 3,41,000 விவாகங்கள் நடைபெற்றனவாம்.

பண்ணுருட்டியைச்சேர்ந்த சுந்தரம்நாயுடு என்பவர், அயல்நாட்டுப்பொருள்களைப் பகிஷ்காரஞ்செய்யும்படி தூண்டும் துண்டுப்பத்திரத்துடன் சென்றதாகக் கைதுசெய்யப்பட்டு எச்சரிக்கையின்பேரில் விடுதலைசெய்யப்பெற்றாராம்.

o o o

துருக்கி அந்நியமந்திரி காரியாலயத்தின் பரிபாஷை விளக்கப்பகுதித் தலைவராகிய திரு. ஹேருதீன் என்பவர் திடீரென மறைந்துவிட்டாராம்.

o o o

லங்காஷயரின் கட்சியை இந்தியச் சுங்கவரிச் சபையாரிடம் எடுத்துக்கூறும் நோக்கத்துடன் ஒருசபையார் இந்தியாவுக்கு வருவார்களாம்.

o o o

இத்தாலியிலுள்ள தனிப்பட்ட கம்பனிகள் மூலநிதியில் 100-க்கு 10 வீதம் புதிதாகவரி விதிக்கப்பட்டிருப்பதால், வருடமொன்றுக்கு 25கோடிலயர் (இத்தாலிய நாணயம்)வரை வருமானம் அதிகப்படுமாம்,

o o o

ருஷியாவால் ஏற்படுந் தொல்லையிலிருந்து விலகிக்கொள்வதற்காகச் சீனாவுக்கும் யப்பானுக்குமிடையில் இராணுவ ஒப்பந்தமொன்று ஏற்படப்போகிறதாம்.

o o o

ஆயிரம் குதிரைச் சக்தியுடையதும் மணி ஒன்றுக்கு 289 மைல்வீதம் செல்லக்கூடியதுமான ஆகாயவிமானமொன்றைச் செய்துகொடுத்த ஒருவருக்குப் பிரான்சு தேச மந்திரியாரால் 13,000 பவுண் வெகுமானமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதாம்.

o o o

அமெரிக்க குடியரசுத் தலைவராகிய திரு, ரூஸ்வெல்ட் அவர்களின் வருடச்சம்பளம் 10,000 பவுணாம்.

o o o

சிகாக்கோச் சர்வகலாசாலையின் ரசாயன பண்டிதரான திரு. லியார்னேடுகீலர் என்பவர் புதிதாகக் கண்டுபிடித்திருக்கும் மருந்தை ஒரு திருடனின் தேகத்தில் செலுத்திவிட்டால் அவன் பொய்சொல்ல முடியாதவனாகி விடுவானாம்.

o o o

உலகம் முழுவதிலுமுள்ள வயல்களில் விளைவாகும் தானியங்களில் பத்தில் ஒருபாகத்தைப் பூச்சிகள் தின்றுவிடுகின்றனவாம். o o o

விவாகஞ்செய்பவர்களுக்கு 60 பவுண் விகிதப்படி கடன் கொடுக்கப்படுமென்ற ஹிட்லரின் ஏற்பாட்டினால் ஜெர்மனியில் 3,60,000 மணமக்கள் கடன்பெற்று விவாகஞ் செய்துள்ளார்களாம்.

o o o

150 றூத்தல் நிறையுள்ள ஒருமனிதனின் உடலில் 1200 முட்டைகளிலடங்கியிருக்கும் சத்துப்பொருள்கள் காணப்படுமாம். o o o

அமெரிக்காவில் பஸ்கள், லொறிகள் உட்பட இரண்டரைக்கோடி மோட்டார்வண்டிகள் போக்குவரவு செய்துவருகின்றனவாம். o o o

"எந்தத் தொண்டை நிறைவேற்றும் பொருட்டுத் தேவதாசிகள் ஏற்பட்டார்களோ, அந்தத் தொண்டை நிறைவேற்றமுடியாமற்போகுமானால், அவர்கள் தம்தொழிலைவிட்டுக் கிருகஸ்தர்களாவதறகுச் சாஸ்திரங்கள் எவ்வித தடைகளையும் ஏற்படுத்தவில்லை" என டாக்டர் மூஞ்சே என்பவர் கூறினாராம்.

o o o

கொழும்பு—புறக்கோட்டையில் பத்து அபின் மாத்திரைகளை வைத்திருந்தாளெனக்குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஆர். ஜோன் நோனா என்னும் பெண்ணுக்கு 3 மாதக் கடுங்காவற்றண்டனை விதிக்கப்பெற்றதாம்.

o o o

றங்கூனில் ராணுவ பொலிஸ் உத்தியோகத்திலிருந்து இளைப்பாறியவர்களெனக் கூறப்படும் இரு கூர்க்கசாதியினரிடமிருந்து 1200 தோலா அபின் கைப்பற்றப்பட்டதாம். o o

கராச்சியைச்சேர்ந்த ஒரு முஸ்லிம் ஆடவன் தனது மனைவியின் நடத்தையில் சந்தேகங்கொண்டு அவளைக் கண்ட துண்டமாக வெட்டிச் சாக்கிலிட்டுப் பொதிந்து நீரோடையிற் போட்டுவிட்டாராம்.

வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி, மிச்சின் மிசைவான் புலம்.

நவல் பகுதி

# அருணோதயம் அல்லது சிம்மக்கொடி.

பத்தாவது அத்தியாயம்.
துன்பமும் இன்பமும்
தோழமை ஆழமும்.
(10-ம் இலக்கத் தொடர்)

பாசுரத்தை வாசித்த பாவையாந் தவமணி பரமானந்தத்தில் மூழ்கிப்போய் அக்கடிதத்தை மீண்டுமொருமுறை வாசித்தபின். அன்புததும்பிய தனதினிய குரலைத் திறந்து, எனது கண்ணின் கருமணிபோன்ற ரஞ்சிதா! உனக்கேற்பட்ட புதுமகிழ்ச்சி காரணமாய் நானடையும் ஆனந்தம் கட்டிலடங்காமலிருக்கிறது. மனம்போன வாழ்வில் நீ வைக்கப்படுவாய் என்று நான் முன்னமே உனக்குக் கூறினேனல்லவா? வேதவாக்கியம்போல் என்வாக்குப் பலிதமாய் விட்டதைப் பார்த்தாயா? என்றுகூறி ஆனந்தநிர்த்தனஞ்செய்தனள். அவர்கள் மகிழ்ச்சி அளவிட்டறியப்பெறுமுறையில் வெகு பெரிதாயிருந்தது. ஆனால் ரஞ்சிதமலருக்கு மாத்திரம் அப்போது ஒரு சிறிய விசாரம் தலைகாட்டவே அவள் தவமணியை விழித்து, "இதுகாலவரையாய் நான் உனக்கொன்றையும் ஒழித்ததேகிடையாது. இக்கடிதத்தையும் ஒரு ஆளுக்கு மாத்திரம் காட்டலாம் என்று எழுதியபடியால் உனக்கு மாத்திரமே காட்டினேன். எனது காதலரின் புகைப்படத்தையு முனக்குக்காட்டி உன்னை ஆனந்தப்படுத்துவதற்கு எனக்கிருக்கும் விருப்பம் பெரிதாயிருந்தபோதிலும், கடிதத்தில் கூறியபடி அதையுனக்குக்காட்ட முடியாததுபற்றிப் பெரிதும் வருந்துகிறேன்" என்றுள். அவள் வார்த்தைகளைக்கேட்ட தவமணி பேசத்தொடங்கி, "வீணை அற்பவிஷயங்களையெல்லாம் மனதிற்கெடுத்து, விசனப்படுவதுதான் உனது வழக்கமென்று எனக்கு நல்லாய்த் தெரியுந்தானே! இவ்வளவு காலமாய் என்னைத் துன்பப்படுத்தியதுபோதும். நீ சந்தோஷமாயிருப்பதே என் சந்தோஷமாகையால் இனி முதற்கொண்டு கடுகத்தனை விசனமும் உன்னிடமிருக்கவேபடாது. உனது காதலரைப் பார்ப்பதற்கு எனக்கு விருப்பமில்லாமலில்லை. ஆனால் உனது பத்தாவின் கட்டளையைக் காக்கவேண்டியது முக்கியமென்பதை நானறியாமலிருக்கிறனு? அவரை நான் எப்போதாவது ஒருநாளைக்குப் பார்ப்பேன்தானே. அதையிட்டு நீ எள்ளளவுஞ் சிந்திக்கவேண்டாம்" என்று அன்போடு பதிலிறுத்தாள். அவள் பேசி முடிந்ததும், "கண்மணீ! அப்புகைப்படத்தை யுன் சிநேகிதிக்குக் காட்டி உனது விருப்பத்தைப் பூர்த்திசெய்துகொள்" என்று, அவ்வறையின் ஒரு மூலையிலிருந்து சத்தம் பிறந்தது. பெண்களிருவருந் திடுக்கிட்டுத் திகைத்தவண்ணம் சத்தம்வந்த திக்கைநோக்கி மிரளமிரள விழித்தவண்ண மெழுந்துநின்றனர். அப்போது போருடையணிந்து அதன்மேல் கத்தி, துப்பாக்கி, வாள், ஈட்டி முதலியன தொங்கவிட்டபடி ஓர் போர்வீரன் அவர்கள்முன் தோன்றினன். பயமிகுதியால் நடுக்கமுற்றுநின்ற அவர்களையணுகியதும் அவன் தனது வலக்கரத்தை உயர்த்தி, தனது முகமூடியை அகற்றிவிட்டு புன்னகை தவழ்ந்த இனிய வதனத்துடன் ரஞ்சிதமலரைநோக்கி, "காதலீ! என்னை அறிவையோ?" என்றுன். பயம் ஆனந்தமாய் மாறியது. பின்சென்ற கால்கள் விரைந்து முன்னேறின. அடுத்தபடியாய் அவள் அவன்முன்பாய்ந்து அவனை ஆலிங்கனஞ்செய்தவண்ணம் "அறிவேன், அறிவேன்; தங்களை நல்லாய் அறிவேன் நாதா" என்றுள். தவமணி ஒருபுறமாய் விலகிநின்றுள். ஜெயகேசரி தன் மடமயிலாளை அரவணைத்து, கள்ளங்கபடற்ற அவள் மதிவனத்தில் ஒரு முத்தங்கொடுத்தான். ரஞ்சிதமலரும் அதேமாதிரி நடந்துகொண்டாள். அவ்விரு முத்தங்களும் அவாது ஆணையின் முத்திரைகள்போன்றிருந்தன. அந்தச்சமையத்தில் மாசிலாமணியும் மனைவியும் அங்குவந்து அவ்வாடவனைத் தெரிந்துகொண்டனர். ரஞ்சிதமலர் உடனே அவர்களுக்கு வெகு ஆனந்தத்துடன் அறிமுகப்படுத்தினள். அனுதையான அவளது ஆனந்தத்தையே பெரிதாக மதித்த அவர்கள், விஷயத்தை யூகித்துக்கொண்டு புழகாங்கிதமடைந்தனர். அங்கு நடந்தேறிய சகல விஷயங்களும் பரம இரகசியமாய் இருக்கவேண்டுமென்று அன்புடன் வற்புறுத்திக் கூறியபின் அப்போர்வீரன் வெளிச்சென்று சீழ்க்கையடித்தனன். அச்சத்தத்தைக் கேட்ட ஒருன்னத புரவி எவ்விடமிருந்தோ இமைப்பொழுதில்வந்து அவனை யணுகிநின்றது. அதன் சேணத்தில் தொடுக்கப்பட்டிருந்த ஒரு பாரிய தோற்பையை எடுத்துக்கொண்டு ஆடவன் மாசிலாமணியின் உடுப்பறைக்குச் சென்றனன். சிலநிமிஷநேரங்களால் ஒரு மகமதியப்பிரபு அவ்வறையிலிருந்து வெளிப்பட்டுத் தோற்பையுடன் குதிரைநிற்குமிடஞ் சென்றனர். ரஞ்சிதமலர் முதலியோர் அவரை மட்டிட்டுக்கொண்டு வெகு ஆச்சரியத்துடன் அவர் செல்வதை நோக்கியபடியிருக்க அவர் குதிரைமேலேறிக் குஞ்சிரிப்புடன் ஒரு லேஞ்சியை அசைத்து யாவருக்கும் வந்தனமளித்துவிட்டு அவ்விடமிருந்து புறப்பட்டனர். சிறிதுதூரம்போய் அவர் குதிரையைத் திருப்பி விமலவிலாஸ்பக்கம் நோக்கினர். ரஞ்சிதமலர் தன்னையே பார்த்தவண்ணம் வெளிவாசற்கதவோரம் நின்றுகொண்டிருப்பதைக்கண்டு, சுற்றுமுற்றும்பார்த்து அவ்விடமொருவருமில்லையென்பதைத் தெரிந்துகொண்டு அவ்விடம் வந்து குதிரையிலிருந்தபடியே ரஞ்சிதமலரைத் தூக்கித் தன்முன் வைத்து முத்தமாரிபொழிந்தபின் அவளுக்கு ஆறுதலான சிலவார்த்தைகள்சொல்லி மெதுவாய்க்குதிரையிலிருந்து அவளை இறக்கிவிட்டு விடைபெற்றுக்கொண்டு வேகமாய் அவ்விடத்தைவிட்டு மறைந்தனன். ரஞ்சிதமலர் தனதறைக்குவந்தபோது, தவமணி அக்கடிதத்தைவாசித்துக்கொண்டிருக்கக்கண்டாள். உடனே மடிக்குள்ளிருந்த புகைப்படத்தையெடுத்து அவளுக்குக் காட்டினள். இருவருமாக அப்படத்தை வெகுநேரம் வரையிலுமிருந்து பார்த்துப் பரவசமடைந்தனர். துப்பறியும் உடைபோர்த்திருந்த அவன் மேனியின் திடகாத்திரமும், அவ்வுடையை முக்காலும் மூடியிருந்த முத்திரைப்பதக்கங்களும், நவரத்தின மாலைகளும், வாள் ஈட்டி முதலியனவும் அவனது இயற்கையழகைச் சிறப்பித்துக் காட்டியவண்ண மிருந்தன. அவனது தோற்றம் அப்படத்தில் ஒரிளவரசனை நிகர்த்திருந்தது. அவன் அணிகலன்களும் ஒய்யாரநிலையும் அவனோர் சுத்தவீரன் என்பதாய்ப் பறைசாற்றியவண்ண மிருந்தன. ரஞ்சிதமலரின் ஆனந்தம் நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாய் வளர்ச்சியடைய, மெலிவுற்று நலிந்துபோயிருந்த அவள் தேகமும் புஷ்டியானது. என்றுமில்லாத வசீகரவனப்பு அவளங்க மெல்லாவற்றிலும் பாவிநின்றது. மாசிலாமணி முதலியோரும் தவமணியும் அவள் பெற்றோரும் களங்கமற்ற மனமகிழ்ச்சியால் ஆளப்பட்டுச் சிலகாலமாக ஆனந்தத்தில் அமிழ்ந்திப்போயிருந்தனர்.

(தொடரும்)

நாடகப் பகுதி.

# தருமபுத்திரர் அல்லது துரோபதி துகில்.

(மானிப்பாய். திரு. தா. சுவாமிநாதன் அவர்கள்)

[உரிமை ஆக்கியோனுக்கே உரியது.]

(முற்றொடர்.)

விதுரன் :—வ துரியோதனு!

"அறந்தரு மைந்தன் றன்னை யறனலா தியற்றி நம்பி!, திறந்தரு செல்வம் யாவும் தீமையிற் கவர்த லுற்ருய், மறந்தரு வலியு மல்ல மணந்தரு வாழ்வு மல்ல, நிறந்தரு புகழுமல்ல நெறிதரு மதியு மல்ல.

திருத்தகு மொழிந்த தெல்லாம் செய்தனை யெனினும் செல்வி, மருத்தரு தெரியன் மாலை மாசிலா மன்னர், முன்னர், உருத்தகு கற்பி னுளை யுரையலா துரைக்கு மாற்றம், கருத்தினில் நினையல் கண்டாய்; கடவுளர் கற்பம் வாழ்வர்ய்!"

நீதியற்ற செயல்களைப் புரிந்து தருமபுத்திரனுடைய செல்வங்களைக் கவர்ந்தாய். இங்ஙனம் செய்தது உனக்கு வலிமையுமல்ல, வாழ்வுமல்ல, புகழுமல்ல, நற்புத்தியுமல்ல. நீ நினைத்த காரியம் முடித்தாயாயினும், அவ்வளவோடமையாது, வடமீனுக்கே ஒப்பான அரசகன்னியைக்குறித்தும் வசைமொழி கூறுகின்ருய். இதனுற் பின் நடக்கவிருக்கும் நிகழ்ச்சியாக யான் பிறர்வாயினின்றும் கேட்ட வார்த்தைகளை உண்மையாக்குவதற்குத் துணிகின்ருய்போலும். இதோ யான் கூறுவதொன்று கேட்பாயாக.

"தானவ ராகி யும்மைத் தனித்தனி யிறந்தோர் யாரும், மானவ ராகி யிம்மை வந்தன ரிம்ப ரென்றே, தானவர் பொறை பொருமற் றாதல மென்னுஞ் செங்கண், மானவ ராக வேத மலர்முனி தனக்குச் சொன்னுன்.

நான்முகன் ருனு மேனை நாகரும் நாகர் கோனும், பான்முகந் தெறியும் வேலைப் பாம்பணைப் பள்ளி கொள்ளும், தேன்முகங் களிக்கும் பச்சைச் செவ்விவண் டுளப மாலை, மான்முகங் கண்டு கூற வந்தமா மாலுங் கேட்டான்.

மின்னிடை விளங்கு மேக மேனியானவனி மானை, நின்னிடை வந்து தோன்றும் நிருபா னவரை யெல்லாம், முன்னிடை கடையொன் றின்றி முற்றும்வெம் முரண்கொள் காலன், தன்னிடை விடுது மென்று சாற்றியே தளர்வு தீர்த்தான்.

அந்தவன் றிகிரி யானும் நம்மிலோராச ஞகி, வந்தவ தரித்தா னென்று மண்ணெலாம் வார்த்தை யான, எந்தவல் வினையா லெவ்வா றெய்துமென் றிதற்கே சால, நொந்துகண் டுயில்பெ றுதே நோதகப் புரிந் தேன் மன்னே.

ஒருதிறத் தவனி முற்று மொருமை யாற் புரக்கு நீவிர், இருதிறத் தவரு நும்மி லிகலுறு மனத்தி ராஞல், வருதிறத் தானை வேந்தர் வகைப்படக் குழுஉக்கொண் டோடிப், பொருதிறப் பதறகே சற்றும் பரிவிலீர்! புரிகின றீரே."

ஓர் காலத்திற் றிருமாலுக்கும் அசுரருக்குமிடையில் நடந்த யுத்தத்திற் றிருமால் தனது சக்கரப்படையை யேவி அசுரரையெல்லாம் கொன்றனர். அவ்வசுரர்கள் பின்பு பூமியில அரசர் முதலான மனிதராய்ப பிறந்தனர். இதையறிந்த பூமாதேவி பாரஞ்சுமக்க முடியாதவளாய்ப் பிரமதேவருக்குச் சென்று முறையிட, அவர் திருமாலைக் கண்டு பணிந்து முறையிட்டனர். திருமால் பூமிபாரந் தீர்ப்பதாக வாக்களித்தனா. பின்பு தனது வாக்கை நிறைவேற்றுவதற்காய்க் கிருஷ்ணராய் அவதரித்திருக்கின்றனரென்று இப்பூமியெஙகும பேசிகொள்ளுகின்ருர்கள். எனவாய் முடியுமோவென்று மனமிக வாடி யான கண்டுயிலாது காலங்கழிக்கின்றேன். இந்நிலையில் நீ பஞ்சபாண்டவரோடு பகைத்து, யுத்தம்புரிந்து, இறப்பதற்கே துணிகின்ருய். உனது புத்தி நாசகால விபரீத புத்தியாயிருக்கின்றதே!

துரி :—(கைகொட்டி நகைத்து) நரைதலைக் கிழவரின் உளறுபடையையா யான்கேட்கின்றவன்! (அங்கு நின்ற பிரதிகாமியனை விளித்து) வ பிரதிகாமியனே! அதிவிரைவாக ஓடித் துரோபதியை இச்சபைக்கு இழுத்துவருவாய்.

பிரதி :—இதோ இழுத்துவந்துவிட்டேன், அரசே. (ஓடிச்சென்ற பிரதிகாமியன் துரோபதியிடம் போவதற்கு அஞ்சி இடைவழியிற்றிரும்பி ஓடிவந்து) அரசே! அந்த அம்மாளையடைந்து விரைவாக வேநதர்சபைககு வரும்படி கட்டளையெனறேன. அதறகவள "என்னைத் தோற்றபின் ஐயரும் தம்மைத் தோற்ருரா, அலலது தமமைத் தோற்றபின் என்னைத தோற்ருரா? முன்னமே தோறற பொருளைக் கவருவதன்றிப் பின்னே தோற்ற பொருளைக் கவருவதற்கு உரிததலலவே" என்றனள. யான் மீண்டும் ஓடிவந்துவிட்டேன்.

துரி :—(வெகுண்டு) துச்சாதனு! இங்கேயிருக்கின்ற மன்னர் முதலாயினோர் யாவரும் பார்க்கும்படி அம்பாபதிப்பெண்ணை இங்கே யிழுத்துக் கொண்டுவருவாய்.

துச்சா :—அங்ஙனமே. இதோ இழுதது வந்துவிட்டேன் அண்ணு.

(விரைந்தோடுகிறுன்)

(காட்சி முடிகிறது.)

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!

கூடிய சீக்கரம் வெளிவரும்

"நாட்டுச்சீவன சாஸ்திர பாடபுத்தகம்"

ஆக்கியோன் : திரு. இ. தர்மலிங்கம்
ஆசிரியர், சுன்னுகம சைவவித்தியாசாலை

இந்நூல், தமிழ் J. S. C., S. S. C. வகுப்புகளுக்கென வித்தியாபகுதியாரால் சமீபத்தில் வெளியிடப்பட்ட பாட அட்டவணையை முற்ருக அனுசரித்து எழுதப்பட்டது

வடஇலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்
சுன்னுகம், யாழ்ப்பாணம்.

# மறுப்புறுப்பு முரண் மறுப்பாராய்ச்சி.

(மீசாலைதெற்கு, அ. மி. பாடசாலை இயற்றமிழ்ப் போதகாசிரியன்
திரு. வீ. நடராசன் அவர்கள்.)

யுவஞு ஆடிமீ ௧௮-ந் திகதி வெளிவந்த "ஈழகேசரி"யில் நம் பாடசாலைச் சிரேட்ட வகுப்பு மாணவன் ந. பரமானந்தன் என்பவரால் எழுதி வெளியிடப்பெற்ற "மறுப்புறுப்பு முரண்" என்னும் வியாசத்திற்கு மறுப்பாகப் புலவர் கானநகர்த் திரு. க. முருகேசபிள்ளை என்பவரால் ஆவணி மாசம் 2-ந் திகதி வெளிவந்த ௸ பத்திரிகையில் வெளியிடப் பெற்ற "மறுப்புறுப்பு முரண்மறுப்பு" என்னும் வியாசத்தைக் கண்ணுற்றேன். "மறுப்புறுப்புமுரண்" என்னும் வியாசம் "மறுப்புறுப்புமுரண்மறுப்பு" என்னும் வியாசத்தால் மறுக்கப்பட்டொழிந்ததா என்பதை ஆராய்ச்சி செய்வதே இவ்வியாசத்தின் நோக்கமாகும்.

(க) எவராயினும் ஒரு விஷயத்தையெடுத்து மறுக்கப்புகும்பொழுது விஷயத்தைப் பிரமாணசகிதமாய் மறுத்துச்செல்லுதலேயன்றி விஷயகாரர்மீது தாவுதலும், அவர்மீதடாப் பழி கூறுதலும், வீண் ஆரவாரவுரைகளை வரைதலும் அறிஞரால் விரும்பப்படும் பான்மையுடைத் தாகாது. நம் திரு. க. முருகேசபிள்ளையவர்கள் தாமெழுதிய மறுப்பில், "அவ்வியாசத்தின்கணுள்ள தோஷங்களை விசாரித்தல் மணற்சோற்றில் கல் ஆய்தல் போலும். ஆதலின் அதனை லக்ஷியத்தின் பாற்படுத்துக் கண்டித்தல் மகா பாணப்பிரயோகத்திற்கு முயலை லக்ஷியப்படுத்தல்போல வடுச்சொற்கேதுவாம் "வலிந்துகொண்ட இயைபில் பொருள் .......... ஏதோ தெரிந்தவர் போலப் பிதற்றி ............கற்றபுராண வசனநூலையேனும் படித்தறியாது" "இந்நூலாராய்ச்சியுடையார்க்கேயன்றிப் புறச்சமயச் சார்புடையார்க்குப் புலனாகாதென்க" என்பதாதிய ஆரவாரமொழிகளையும் பழிப்புரைகளையும் எல்லையின்றிப் பிரயோகிக்கின்றார். நான் அவருரை யொவ்வொன்றையும் தனித்தனி யெடுத்து மறுப்பெழுதப்புகின் அது வம்பளத்தலாய் முடியும்; அன்றியும் பத்திரிகையினிடத்தைப் பிரயோசனமற்ற வழியில் நிரப்புதலாயும் முடியும். ஆதலால் அதை விடுத்து விஷயத்தின்மேற் செல்கிறேன். எனினும் அவசியம் குறிப்பிடவேண்டிய இரண்டொரு விஷயங்களை மாத்திரம் குறிப்பிட்டப்பாற் செல்வேன்.

(உ) திரு. முருகேசபிள்ளையவர்கள் தம் வியாசத்திலோரிடத்து "அறியுமாற்றலில்லாதவரென்று குறிப்பிட்டவரில் தாமுமொருவராகுமென்றெண்ணி, எவ்வாறாயினுங் குற்றங் கூறினோமெனப் பெயரிடுதுமென்னுஞ் செருக்கால், மாணவரில் மறைந்துநின்று ஏதேதோ தெரிந்தவர்போலப் பிதற்றி" என்கின்றார். அவ்வியாசத்தை ந. பரமானந்தன் என்னும் மாணவரில் மறைந்துநின்று இன்னொருவரே யெழுதினாரென விவர்க்குத் தெரிவித்தார் யாரோ? ஞானவுணர்ச்சியாற் கண்டாரா? ஆரூடத்தாலறிந்தாரா? அன்றிக் கனவில் இவர் உபாசனா தெய்வங் கூறிற்றா? இவற்றுளெது வாயிருப்பினும் அதை நாம் ஒத்துக்கொள்ள முடியவில்லை. அவ்வியாசம் குறித்த மாணவராலேயே எழுதப்பட்டது. ஆதலின் நம் பிள்ளையவர்கள் ஏமாற்றப்பட்டு விட்டாரென்பதொருதலை. ஆயின் இடையிலிவரேன் இதிற் சம்பந்தப்படுகின்றார்? இதிற் சம்பந்தப்படுமிவரே முன்னுமெழுதியிருத்தல் வேண்டுமென்ப தநுமானத்தாலுணரக்கிடக்கின்றதென ஒரு சமாதானஞ் சொல்லவுங் கூடும். முன் குறித்த மாணவர்க்கதுவிஷயத்தை விளக்கினேன் யானே யாதலினாலும், அவ்விளக்கத்தையனுசரித்தே குறித்த மாணவரால் அவ்வியாசம் வரையப்பட்ட தாதலினாலும், அதனைச் சாதித்தல் எனக்குங்கடனா மாதலினாலும் நான் இதிற் றலையிடுகின்றேன் என்பதைப் பிள்ளையவர்களுணர்வாராக.

(ங) மேலும் நம் பிள்ளையவர்கள் "இந்நூலாராய்ச்சி யுடையார்க்கேயன்றிப் புறச்சமயச் சார்புடையார்க்குப் புலனாகாதென்க" என்றும் எழுதுகின்றார். முன் வியாசத்தை யெழுதிய மாணவரையாவது அன்றி யவரின் மறைந்துநின்றதாகக் குறித்த மற்றையரையாவது புறச்சமயச் சார்புடையாரென இவர்க்குக்கூறியவர் யாரோ? இவர் எவ்வாற்றானாயினும் அதைத் தாபிக்க வல்லரோ? வல்லரேல் அதைத்தாபித்துக் காட்டுவாராயின் உடனே பத்து ரூபா அவர்க்குப் பரிசாகக்கொடுக்கத் தயாராயிருக்கிறேனென்பதை இதனால் நம் பிள்ளையவர்கட்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ௸ மாணவரையாவது மற்றையரையாவது இவர்க்குப் புறமதச் சார்புடையரென ஒருவர் தெரிவித்திருப்பாராயின் அவர் கிறீஸ்தவ கலாசாலையிற் றருமச்சோறு தின்று கற்று உபாத்தியாயிருக்கும் ஒருவரேயன்றிப் பிறராயிருக்கமாட்டாரென்பதென் நம்பிக்கை.

(ச) அவாய்நிலை, அண்மை, தகுதிமுதலிய பலகாரணங்கொண்டு பொருளகொள்ளப்படலாமென்பதை யறியாமையாலோ, அன்றி அறிந்துவைத்தும் எவ்வாற்றானாயினும் அவர் வசனத்தில் ஒரு பிழை கற்பித்துவிடல் வேண்டுமென்னுங் கருத்துக்கொண்டோ நம் பிள்ளையவர்கள் தெய்வயானையம்மையாரின் சரித்திரத்தைச் சுருக்கிக்காட்டுவான் எடுத்துக்கொண்டு "மேல் சுப்பிரமணியப்பெருமான் சூரபன்மனாதியோரைச் சங்கரித்த பின் அவ்வம்மையாரை மேருவினின்றுமழைத்துத் திருப்பரங் குன்றத்திற் சுப்பிரமணியப்பெருமானுக்குத் திருமணஞ்செய்துகொடுத்தான், என்பது சரித்திரம்" என்னும் மாணவரின் வசனத்திற்கு முற்றொடர்புகொண்டு இந்திரனே அங்ஙனஞ்செய்தானென்கை புலப்படக்கூடியதா யிருக்கவும் பின் என்பதன்பின் இந்திரன் எனனுஞ் சொல்லில்லாமையொன்றையே காரணமாகக்கொண்டு அடாப் பொருளுமொன்று கற்பித்துக் காட்டுகின்றார். அவர்காட்டியதைப் பிழையென்றே வைத்துக்கொள்ளுவோம். ஒருவர் தாம் மற்றவரில் ஒரு குற்றங் கற்பிக்கும்பொழுது அவ்வாறாய குற்றத்திற்குத் தாமாளாகாமற் காத்துக் கொள்ளுதல் கடமையாமன்றோ? பிள்ளையவர்கள் மாணவனிற் குற்றங் கற்பித்துவிட்டுத் தாமும் அப்படியான குற்றத்திற் காளாகின்றாரே. எப்படியெனிற் காட்டுவல். அவரோரிடத்து "அதுவன்றி நன்றியறிதலாகக் கொடுக்கத் துணிந்தனன் என்று கூறுவதாலும் மேருமலையிற் சுப்பிரமணியப் பெருமானை நினைந்து தவஞ்செய்தார் என்பதற்குத்தக்க உதாரணம் எடுத்துக் காட்டாமையானும்" என்கின்றார். இவ்வசனத்தை யெடுத்துக்கொண்டு நம் மாணவர் இவருக்குப் பதிலெழுதும்பொழுது "நான் மேருமலையிற் சுப்பிரமணியப் பெருமானையல்லச் சிவகுமாரராய சுப்பிரமணியப் பெருமானையே நினைந்து தவஞ்செய்தார் எனக் கூறினேன்" என்று கூறில் இவர் யாதுசெய்வாரோ? இன்னும் பத்திரிகைகளில் வெளியாகும் விஷயங்களில் எழுத்துப் பிழைகளும் சொற்பிழைகளும் பல காரணங்களாலுளதாதல் கூடுமென்பதையும், அவற்றையெடுத் தாளுதல் ஆற்றார்போக்கேயா மென்பதனையும் பிள்ளையவர்களுணர்வாராக. மேலும் இவர் மறுப்பு வியாசத்தில் 1-ம் வசனத்தில் தெய்வயானைஅம்மை திருமணப்படலமென்றிருப்பதால் அது கந்தபுராணத்தில் எங்கிருக்கிறது? என மாணவர் கேட்பின் அது நீதியான கேள்வியாகாதோ என்பதையும் பிள்ளையவர்கள் ஆலோசித்துப் பார்ப்பாராக. இனி விஷயத்திற் செல்வேன்.

(ரு) மாணவரால் தெய்வயானையம்மை திருமணப்படலத்துப் "பொன்னகமதனிடை" என்னும் முதலையுடைய செய்யுளில் பொன்னகம் என்னுஞ் சொற்றொடருக்கு மேருமலையெனப பொருள்கொள்ள வேண்டுமென்பது பிரமாணத்துடன் காட்டப்பட்டது. அது மறுக்கப்படவில்லையென்பதை யீண்டுக்காட்டுவல், "பொன்னகமதனிடை" என்னுஞ் செய்யுளிற் சொல்லும்படி யெடுத்துக்கொண்ட விஷயம் தெய்வயானையம்மையாரின் கூந்தலிலுள்ள பின்னலை (சிக்கை) ஒப்பனைசெய்வான் சென்ற வணங்கினர் நீக்கியமையே யாகும். அஃது "பின்னகமயிர் முடிப்பிணையற்சூழலை, மென்னகவிரல்களால் மெல்லநீக்கினார்" என்னும் பன்னிரண்டடிகளாலும் கூறப்பட்டது. தெய்வயானையம்மையாரின் கூந்தலிற் பின்னல் எப்போதுண்டாயது என்றோராசங்கை நிகழுமன்றே! அவ்வாசங்கை நீக்கற்பொருட்டே முன்னிரண்டடிகளிலும் அப்பின்ன லுண்டாய தன்காரணங் கூறப்பட்டது, எப்படி? "பொன்னகமதனிடைப் புராரிசேயினைத், தன்னகமிசைகொடு தவத்தையாற்றினார்" என்று. எனவே பொன்னகமதனிடைப் புராரிசேயினைத் தன்னகமிசைகொடு தவத்தையாற்றியதனாலேயே பின்னலுண்டாயிற்றென்பதும், அப்பின்னலையே அணங்கினர் நீக்கினரென்பதுந் தொனித்தல் காண்க. ஆசிரியர் தெய்வயானையம்மையார் "நொவ்வுறாது வீற்றிருந்தனர் குமரனை நுவன்றே" எனக் கூறிய கூற்றையும், "தன்னகமிசைகொடு தவத்தையாற்றினள் எனக் கூறியகூற்றையும் கூர்ந்துநோக்குமிடத்துத் தெய்வயானையம்மையார் மேருமலையில் சுப்பிரமணியப்பெருமானை இடையீடின்றித் தியானித் தவர் திருநாமங்களைச் செபித்தலாகிய தவத்தை மேற்கொண்டிருந்தனர் என்பது எவர்க்கும் புலனாகும். என்னை? ஈரிடத்துங் கூறப்பட்டது செபதியானங்களே யாயினமையின் என்க. மற்று நம் பிள்ளையவர்கள் "பெருமைகொண்டிடு.......... வரிசைதன்னுடனிருந்தன டெய்வதமடந்தை" என்னுஞ் செய்யுளைக்காட்டித் தெய்வயானையம்மையார் வரிசையோடும் இருந்தார் என ஆசிரியர் கூறுவதால் அவர் மேருவிற் றவஞ்செய்யவில்லையென்பது அவர் கருத்தாகுமென்கின்றார். மேருமலையில் அம்மையார் ஒப்பனைமுதலிய வரிசைகளுடனிருந்தனரேயாயின் அவர் கூந்தலிற் பின்னலுண்டாயதெப்படியோ? இதற்கு நம் பிள்ளையவர்கள் என்ன சமாதானஞ் சொன்னார், பின்னல் முற்பிறப்பிற் றவஞ்செய்தபோழ்துண்டாயதெனவே இன்னுஞ் சொல்வார்போலும். மாணவரும் அம்மையார் சரவணதடாகத்துத் தவஞ்செய்தமையை யொத்துக்கொண்டு, பின்னலுண்டாயதை மேருமலையிற் றவஞ்செய்ததா லுண்டாயதெனவே சாதித்தார். அதை நேரே மறுக்க ஆற்றலில்லாது விட்டுவிட்டு அக்கம் பக்கமெல்லா மளாவிக் கச்சியப்ப சிவாசாரியர் அங்கேயப்படிச்சொன்னார்; இங்கேயிப்படிச்சொன்னார்; என்றெல்லாங் காட்டுவதனாலாம்பயன் யாது? எடுத்துக்கொண்ட சந்தர்ப்பத்திற் கேது பொருத்தமுடைத் தென்பதனையன்றோ வாராய்தல்வேண்டும். மேலும் பொன்னகம் என்னுஞ் சொற்றொடர் காரணங் கருதியபொழுது பொன்னையுடைய மலைகள் பலவற்றிற்குஞ் செல்லலாலும், காரணங்கருதாதபொழுது இடுகுறியளவாய் மேருமலைக்கே செல்லுதலாலுங் காரண விடுகுறிப் பெயராகும். ஆசையால் அப்பெயரும் விசேடமாய் மேருவையே குறிக்கும் என்பதையும், சந்தர்ப்பத்து விததியாசமுறுந் தருணத்தேயே இமய முதலிய மற்றைய மலைகளைக் குறிக்கும் என்பதையும் பிள்ளையவர்களுணர்வாராக. மேலும் பிள்ளையவர்கள், வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர் ஸ்ரீ வைத்தியலிங்கபிள்ளையவர்கள் பொன்னகமென்பதற்கு இமயமலை எனப் பொருளெழுதியிருக்கின்றனர் எனவுங் கூறுகின்றார். இயற்றமிழ்ப் போதகாசியரின் உரை எவ்வவையில் எவ்வித்துவான்களின்முன் அரங்கேற்றப்பட்டது? அரங்கேறித் தடைவிடைகளாற் சுத்தப்படாத வாக்கியம் எப்படிப் பிரமாணமாகும்? இயற்றமிழ்ப் போதகாசிரியர் முக்குணவசங் கடந்த முற்றறிவாளரா? இல்லையே. "நூலுரை போதகாசிரியர் மூவரும், முக்குணவசத்தான் முறைமறந்தறைவரே" என்றன்றோ ஆன்றமைந் தறிவிற் சான்றோர் கூறினர். இவர்போற் பிரமாணங் காட்டுவதாயின் நாமும் அச்செய்யுளுள்ள "தமிழ் மணிமாலை"க் குரையெழுதிய பண்டிதர் ஸ்ரீ நல்லதம்பியவர்கள் உரையிலும் மேருமலையினிடத் தென்றெழுதபபட்டிருக்கிறதெனக் கூறலாநதானே. இவைகளெல்லாம் பிரமாணமாகுமா? நான்குறித்த செய்யுளுக்குக் குறித்த பொருளே இயைபுடைத்தென்பதை என்றுந் தாபிக்கத் தயாராயிருக்கிறேனென்பதைப் பிள்ளையவர்கட்குத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஆனால் மறுப்பெழுதுபவர் யாராயிருப்பினும் தாம் வமபளந்து மற்றையவரையும் வம்பளக்கப்பண்ணாது குறித்த விஷயத்துடனிற்றலே முறையாகும்.

(வரின் வரும்.)

இந்திய வங்கி லிமிற்றெட்
THE INDIAN BANK Ltd.
[Incorperated in British India in 1907]
௸ வங்கியின் கிளை ஸ்தாபனம் ஒன்று சென்ற யூன்மீ 13உ வியாழக்கிழமைதொடக்கம் யாழ்ப்பாணம் பெரியகடையில் எஸ். கே. கந்தையாச் செட்டியார் கட்டட மேல்மாடியில் ஸ்தாபிக்கப்பட்டுச் செவ்வனே நடைபெற்று வருகிறதென்பதை யாவருக்குந் தெரிவித்துக்கொள்ளுகின்றேம்.
(2) 2-6-35.

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா, னல்விருந்து வானத் தவர்க்கு.

## என்காலம் - - - - போய்விட்டது.

(முருகரம்மான் எழுதியது.)

**ஆங்கிலக்கட்டுரைகள்**

கேம்பிரிட்ச் சர்வகலாசாலைப் பரீட்சகர்கள் சென்றவருடச் சோதனையைப்பற்றி வெளியிட்ட அறிக்கையில் பெண்பிள்ளைகள் ஆண்பிள்ளைகளிலும்பார்க்கச் சிறந்த கட்டுரைகள் எழுதியிருக்கிறார்களெனத் தெரிகிறது. அது எல்லோருக்கும் மிகவும் சந்தோஷமே.

o o o

**தையல்வேலை**

ஆனால் அடுத்தாற்போல அவர்களுக்குத் தெறிஓட்டை தைப்பது சுத்தசூனியமெனக் கூறியிருக்கிறார்கள். இத்தகைய பெண்களையடைந்து இல்லறம் நடாத்தப்புகும் கணவர்பாடும் திண்டாட்டமாய்த்தான் முடியும். சமையற்பாகங்களைப்பற்றியும் சோதனைசெய்வார்களேயானால் கறிக்கு உப்புப் புளி பற்றாது என்று சொல்லுவார்கள் என்பதற்குத் தடையில்லை.

o o o

**தன்தொழில்விட்டவன் சாதியில்கெட்டவன்**

தாங்கள் எவ்விதமான கல்விகற்பது நலம் என்பது நம் பெண்பிள்ளைகளுக்குத் தெரியாதுபோலும். இக்காலத்தில் பெண்பிள்ளைகள் நன்றாகக் கல்விகற்கவேண்டிய துண்மைதான், ஆனால் சமையல் தையல் முதலியவற்றினும் கல்வியாற்பெற்ற அறிவைச் செலுத்தித் திறமையாக இல்லறம் நடத்தலே அதிக சிறப்பாகும். அம்மாவும் ஐயாவும மேசைக்குவந்த பிற்பாடுதான் என்ன கறி வேலைக்காறன் சமைத்திருக்கிறன் என அம்மா பார்க்கிறவாடிக்கை வந்துவிட்டது.

“மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை, யெனைமாட்சித் தாயினு மில்”

o o o

**“ழ”கரமும் ‘ள”கரமும்**

நம் தமிழ்மாணவர்களுக்கு “ழ”கரத்துக்கும் “ள”காரத்துக்கும் வித்தியாசம் தெரியவில்லையெனவும் இன்னோன்ன பிறகுறைகளுங் கூறியிருக்கின்றனர். இலக்கணமென்றால் என்னவென்று தெரியாத தற்போதைய மாணவர்கள் இப்படிப் பிழைவிடுவது ஆச்சரியமல்ல. இதற்கு ஆதிகாரணம் யாதெனின், பிறந்தவுடன பிள்ளைகளுக்கு பப்பா, மம்மா, என்று சொல்லிக்கொடுத்து தமிழைக்கற்றல் அநாகரிகமெனக்கருதி ஆங்கிலப் பள்ளிக்கூடங்களுக்கனுப்பும பெற்றோரின் அறிவில் செயலேயாகும். ஆங்கிலத்தைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது ஆங்கிலச் சொற்களையே திருப்பியும் தமிழில் எழுதி விடுகிறார்களெனத் தெரிகிறது. இதன் காரணம் அவர்களது மத்திமத் தமிழறிவேயாம். “கண்நுதற்பெருங் கடவுளும் கழகமோடமர்ந்து பண்ணுறத்தெரிந்தாய்ந்த இப்பசுந்தமிழினை”ப் பலரும் எள்ளிநகையாடற்குரிய விதமாகப் பயில்வது முறையோ என்பது சிந்திக்கற்பாலது.

o o o

**முத்தமிடல்**

முத்தமிடல் என்ற சொற்கேட்ட மாத்திரத்தே, எங்கே? எப்பொழுது? யார் யார்க்கிடையில் என்றவினுக்கள் கிளம்பிவிடுகின்றன. கீழைத்தேசத்தார் முற்காலத்தில் பாலர்களை முத்தமிடுவதேயல்லாது ஆண் பெண் முத்தமிடும் வழக்கத்தைக் கையாளவில்லை. ஆனால் மேலைத்தேசவாசிகளோ நெடுங்காலமாக இவ்வழக்கத்தை அநுசரித்துவந்தார்கள். தற்கால நாகரிகத்தில் ஈடுபட்டிருக்கும் நம் வாலிபப் பெண்களும் “பன்றியோடு கூடிய கன்றும் .....................” என்னும் பழமொழிக்கிணங்க இதில் ஈடுபடுவதை நாம் கண்முன்னுகக் காண்கிறோம். இவர்கள் எல்லோரும் நப்புராதன சுகாதார விதிகளைக் கைவிட்டதன் மடமைத்தனத்தை உணருமாறு அரசினர் சுகாதார வைத்தியர் திரு. கொஸ்ரா (Costa) அவர்கள் சென்ற வாரம் கத்தோலிக்க கழகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவில் முத்தமிடல் நெருப்புக்காய்ச்சல் முதலிய தொற்றுநோய்களுக்குக் காரணமென்று கூறினர். மேனாட்டுக் கல்வியறிவுடைய டாக்டர் சொன்னபின்பாயினும் தமிழர்கள் உணர்வார்களா?

## மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டித பரீட்சை

1935-ம்வுரு நடந்த மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டித பரீட்சையில் சித்தியடைந்த இலங்கைவாசிகளின் நாமாவலிகை:—

(1) ஸ்ரீமதி வேதநாயகி, வேலணை மேற்கு, வேலணை. (2) பிரமஸ்ரீ ப. சிவானந்தையர், பன்னலை, தெல்லிப்பழை. (3) ஸ்ரீமான் சி. கந்தவனம் உபாத்தியாயர், கந்தவனலயம், பொலிகண்டி, வல்லுவெட்டித்துறை. (4) ஸ்ரீமான் க. தம்பாபிள்ளை, தலைமையாசிரியர், ஸ்ரீஞானபண்டித வித்தியாசாலை, கொக்குவில் மேற்கு.

### சத்சோதிடசபை

யாழ்ப்பாணம் வண் வீரமாகாளி அம்மன் கோவிலில் 15-9-35 காலை சுமார் 9 மணியளவில் நியாயவாதி ஸ்ரீமான வே. ச. கந்தையா அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிய கூட்டத்தில் பன்னிருவர் அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்பெற்றனர்.

சபைத்தலைவராக ஸ்ரீமான் S. சிவசம்பு அவர்களும், காரியதரிசிகளாக ஸ்ரீமான் A. C. இராசையா, ஸ்ரீமான C குமாரசுவாமி அவர்களும், சத்சோதிடசபைப் பகிரங்கக்கூட்டத்தலைவராக ஸ்ரீமான் சு. நடேசன் M. S. C. அவர்களும் ஏகமனதாய் நியமனஞ்செய்யப்பெற்றனர்.

கூட்டம் நிறைவேறியபின் சிலர் தங்களையும் அங்கத்தவர்களாகச் சேர்க்கவேண்டுமென்று விரும்பினமையால் அவர்களை நிர்வாகசபையாரது அனுமதியின்பேரில் சேர்க்கப்பெறும்.

29-9-35 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் கந்தர்மடம் சைவ வித்தியாசாலையில் சத்சோதிடசபைக் கமிட்டியாரது பரிசீலனைக் கூட்டம் ஆரம்பமாகி நடைபெறும். (சடி.)

## நீதிபதிக்கும் வழக்கறிஞருக்குமிடையில் வாக்குவாதம்

### “கோட்டைவிட்டு வெளியேபோ”

மத்துகமாக்கோட்டில் சென்ற வியாழக்கிழமை (19-9-35) பொலிஸ் நீதிபதி திரு. ஸ்பென்சர் இராசரத்தினமவர்கட்கும் ஜே. ஈ. ஹோர் என்னும் வழக்கறிஞர்குமிடையில் வாக்குவாதமேற்பட்டது. எதிரிசார்பாக ஹோர் என்பவர் தகுந்தமுறையில் குறுக்குவிசாரணை செய்யவில்லையென நீதிபதி குறிப்புரை கூறினர். திரு. ஹோர், நீதிபதி கூறிய குறிப்பைக் குற்றமென ஒப்புக்கொள்ளவேண்டுமென வேண்டினர். நீதிபதி சாட்சியைக் கூட்டைவிட்டு வெளியேறும்படி கட்டளையிட்டார். ஹோர் தான் இன்னும் குறுக்கு விசாரணைசெய்து முடியவில்லையெனவும் சாட்சிபோகக்கூடாதெனவுங் கூறினர்.

**நீதிபதி:**—மிஸ்றர் ஹோர், நீர் அமைதியாயிருக்கப்போகிறீரா? அல்லது கோட்டைவிட்டு வெளியே போகப் போகிறீரா?

**திரு. ஹோர்:**—நீர் அப்படிக்கூறுவதற்கு உமக்கு அதிகாரமில்லை; என்னை வெளியே போகும்படி கூறுவதிலும் பார்க்க நீரே இறங்கிப் போவது சுலபம்.

இவ்வளவில் நீதிபதி சார்ஜண்டை நோக்கி ஹோரைப்பிடித்து வெளியேகொண்டுபோகும்படி சப்தமிட்டார். “நீர் அதைத் தெண்டிக்க வேண்டாம், நானும் என்னுடைய உரிமையுடன் நிற்கிறேன். நானும் உம்மைப்போல் திறமைவாய்ந்த சட்டநூல்அறிஞர்தான் என திரு. ஹோர் பதில்சொன்னர்.

**நீதிபதி:**- (திரும்பவும் ஜார்ஜண்டை நோக்கி) “நீ மிஸ்றர் ஹோரை கோட்டினின்றும் வெளியே கொண்டுபோகப்போகிறாயா? இல்லையா?”

இவ்வளவில் சார்ஜன்ட் திரு. ஹோரின் மேற்சட்டையில் பிடித்திழுத்து வெளியே போகும்படிசொன்னர். திரு. ஹோர் தன்மீது தீண்டினல் சார்ஜண்டை வேலையினின்றும் நீக்கத் தன்னல் இயலுமெனப் பயமுறுத்தினர்,

இதன்பின் திரு. ஹோர் அந்தவழக்கில் ஏற்படமுடியாதெனக்கூறிக் கோட்டைவிட்டேகினர்.

## இந்தியாவில் எண்ணெய்ஊற்று

இந்தியாவின் 700 வருஷத் தேவைக்குக் காணக்கூடிய எண்ணெய் ஊற்று ஒன்று இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம். இந்த ஊற்றில் கிடைக்கும் எண்ணெய்மூலம் வருடமொன்றுக்கு 5 கோடி ரூபாய் லாபங்கிடைக்குமென்றும், 3000 லட்சம் கலன் எண்ணெய் எடுக்கமுடியுமென்றும் கூறப்படுகிறது.

## ஆனைக்கோட்டையில் வாள்வீச்சு

### இருவர் காயமடைந்தனர்

ஆனைக்கோட்டையிலுள்ள சுப்பர்-முருகேசு என்பவர், அவ்வூரிலுள்ள சின்னத்தம்பி-சின்னையா, இளையதம்பி-தம்பிப்பிள்ளை என்னும் இருவரையும் சென்ற ஆகஸ்டு மாதம் 15-ந்திகதி யன்று வாளால்வெட்டிப் படுகாயப்படுத்தினரெனக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்குச் சென்ற செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் விசாரணைசெய்யப்பட்டது. வழக்காளிகள் சார்பாக நியாயதுரந்தரர் திரு. ஆர். ஆர். நல்லையா அவர்களும், எதிரி சார்பாக திரு. சாம் ஏ. சபாபதி அவர்களும் விவாதித்தனர். காயமடைந்த இருவரும் சாட்சியங் கூறியபின், இளையதம்பி, சுப்பர், சுப்பையா, விதானை முதலியோர் சாட்சியங் கூறினர். நீதிபதி விசாரணையை வருகிற அக்டோபர் மாதம் 1-ந் திகதிக்கெனத் தவணையிட்டார்.

### தல்லாலையில் கத்திக்குத்து

தல்லாலை என்னுமிடத்தில் நளுவ வகுப்பைச்சேர்ந்த கைலாசபிள்ளை, தம்பிப்பிள்ளை, நடராசா, மனேன் மணி என்னும் நால்வர், அவ்வூரைச் சேர்ந்த விஜபரத்தினம் என்பவரைக் கத்தியால் குத்தியும், அடித்தும் படுகாயப்படுத்தினர்களென யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் சென்ற திங்கட்கிழமை குற்றஞ்சாட்டப்பட்டுப் பிணையில் விடப்பட்டிருக்கின்றனர். வழக்கு வருகிற 24-ந் தேதிக்கெனத் தவணையிடப்பட்டிருக்கிறது.

### துப்பாக்கிக்கு இரையாகிய இளம்பெண்.

பாணந்துறையிலுள்ள சித்தி உம்மா என்னும் இளம்வயதினையுடைய முஸ்லிம் பெண், தனது கணவனுடன் கோபித்துக்கொண்டு, தலங்காமத்திற்குச் சமீபமாகவுள்ள தோட்டமொன்றில் காவலாளாகவிருக்கும் சிறியதகப்பன் முறைபூண்ட ஒருவரின் வீட்டுக்குச் சென்றாள். அவள் சென்ற திங்கட்கிழமை இரவு தனது சிறிய தகப்பன் நித்திரைசெய்வதற்கென வீட்டு விறாந்தையில் பாயை விரித்துவிட்டுச் சற்றுத் தூரத்தில் நின்று தலையணையைப் பாயிற்போட்டாள். தலையணை அங்கிருந்த துப்பாக்கியின்மேல் விழுந்து வெடித்ததால், அவள் காலில் காயமுண்டாகி வைத்தியசாலையில் உயிர்துறந்தாள்.

### சங்கீதங் கேட்பவர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம் பெரியகடை வீதியிலுள்ள ஒரு கடையின் முன் கிராம்போன் சங்கீதத்தைக் கேட்டுக் கொண்டு நின்ற ஒரு கூட்டத்தினர், பொலிஸ் உத்தியோகஸ்தர் கூறியும் அப்புறஞ் செல்லாமல் நின்றார்களெனக் குற்றஞ்சாட்டப்பட்டுத் தனித்தனி 1 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பெற்றனர்.

### ஆகாயவசனியில் தடை.

அபிசீனிய மகாராணியார் அடிஸ் அபாவில் ஒலிபரப்பும் கருவியில் செய்த பிரசங்கம் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் கேளாமலிருக்கும் பொருட்டு இடையில் யாரோ தடை வேலை செய்துவிட்டனராம்.

### மசூதியில் ஓர்பகுதி இடிக்கப்பட்டது.

கொழும்பு நகர சபையாரின் அனுமதிபெறாது கொச்சிக்கடையிலுள்ள ஒரு பள்ளிவாசலின் அதிகாரிகள் பள்ளிவாசற் கட்டிடத்துடன் சேர்த்துப் புதிதாகச் சில கட்டிடங்களைக் கட்டிவிட்டனர். அக்கட்டிடங்களை நகரசபையார் இடித்துவிட்டு கட்டியவர்கள்மீது வழக்குத்தொடர்ந் திருக்கின்றனராம்.

திருநெல்வேலி ஒற்றுமைநிதி
(வரைவுளது)
அதிகாரம்பெற்ற மூலதனம் ரூ. 500,000
ஒரு பங்கு 25 சதமாக எண்பது மாதங்கள் செலுத்தி
ரூ. 25ம் ஆதாயமும் பெறலாம்.
தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றது.
வேண்டிய இடங்களில்
கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.
தேசீயகருமங்களை வளர்ப்பதால்மாத்திரம் சுயேச்சை பெறமுடியும்
ஆதலால்
முதலைவளர்த்து, வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
நோக்கமுடைய இந்நிதியை ஆதரியுங்கள்.
இலகுவானமுறையில் இறுக்கக்கூடிய கடன்கள்கொடுக்கிறோம்
உயர்ந்த வட்டிவிகிதத்தில், தவணைக்கும் நிபந்தமாயும்
சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்
கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருட்களும்
சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.
வ. சோமசுந்தரம், காரியாதிகாரி.
(203) 18-11-34—11-35

**வந்த விருந்தாளிகளைக் காப்பாற்றி வரும் விருந்தாளிகளுக் கெதிர்பார்த்திருப்பவன் தேவர்களுக்கு விருந்தாளியாவான்.**

Registered as a Newspaper. 16 Pages

# "The EELAKESARI"

THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON

LARGEST CIRCULATION GUARANTEED BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol. 6 } Chunnakam, Jaffna, 22nd September 1935, Sunday. { No: 12

## சாலாமிசிரி லேகியம்

இந்த லேகியத்தை நான் அனேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பிரபுக்கள் மாத்திர மல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுநலத்தைக் கருதியே இப்போது இதைப்பற்றி விளம்பரப் படுத்தினோம்.

இது சாலாமிசிரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாக, பீதானுசாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாணி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம் அப்ரக் பஸ்பம், பவள பஸ்பம், வெள்ளி பஸ்பம், அயக்காந்த செந்தூரம், சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒரு வருஷத்துள் உண்டாயிருக்கும் பக்க வாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அனேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டு வந்தால் மேற் சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இதன் விலை ராத்தல் ஒன்றுக்கு ரூபா. 20. அரை ராத்தல் ரூபா 10. கால் ராத்தல் ரூபா 5. தாபற்செலவு வேறு.

சிங்கப்பூர், பினாங்கு, முதலிய தொடுவாய் ராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணியார்டர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்ட், மட்டக்களப்பு, சிலோன்.
Kattankudi P. O. Batticaloa, Ceylon

(25) 21-1-34.

அகில இலங்கை

## ஆதாய எலச்சீட்டுக் கம்பனி

THE LANKA BENEFIT CO.,
GRAND BAZAAR, VANNARPONNAI, JAFFNA.

தலைமைக் காரியாலயம் :
பெரியகடைத்தெரு, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

கிளைக் காரியாலயங்கள்:
சங்கானை, காங்கேசன்துறை, சுன்னாகம்

பின்வரும் வகுப்புகள் இப்போ அமைக்கப்படுகின்றன

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | 5-ம் | வகு. | 1000/- | ரூபா | 40/- | ரூபா | வீதம் | 25 | மாதத்திற்கு |
| B | 8-ம் | ,, | 500/- | ,, | 20/- | ,, | ,, | 25 | ,, |
| C | 14-ம் | ,, | 250/- | ,, | 10/- | ,, | ,, | 25 | ,, |
| D | 7-ம் | ,, | 125/- | ,, | 5/- | ,, | ,, | 25 | ,, |
| BMC | 2-ம் | ,, | 250/- | ,, | 10/- | ,, | ,, | 12½ | ,, |
| WC | 3-ம் | ,, | 250/- | ,, | 5/- | ,, | ,, | 50 | கிழமைகட்கு |
| WD | 4 | ,, | 125/ | ,, | 5/- | ,, | ,, | 25 | ,, |
| தினசரி | 6&7ம் | ,, | 100/- | ,, | 1/- | ,, | ,, | | |

வேண்டிய விபரங்கட்குக் கீழ்க்காணும்விலாசத்திற்கு எழுதி அறிக.

மனேஜர், அகில இலங்கை ஆதாய எலச்சீட்டுக் கம்பனி
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(175) 5-8-34

சிட்டுக்குருவி சத்தினால் செய்யப்பெற்ற

## மின்சார லேகியம்

சாப்பிடுங்கள்

ஒரேவேளையில் குணந்தரும்

48 நாள் டின் 1க்கு ரூபா 5-0-0. வி. பி. வேறு

இனம்! — வியாபாரிகள் பரீட்சிக்க சாம்பிள் டின் இனம்!


எம். முகம்மது யூசுபு வைத்தியசாலை,
பரங்கிப்பேட்டை, (Porto Novo.)

கொழும்பு ஏசண்டு :
ச. இ. காதர் மெய்தீன், 39, ஓல்ட் பிட்சர்ஸ்ஸ்ரீட், கொழும்பு.

[(10) 14-7-35—12.]

## பவுண்மார்க் ஓடுகள்

இப்பொழுதும் விசேடமாக மதிப்புப்பெறும் பவுண்மார்க் ஓடுகள் இவைகளே.



எப்பொழுதும் நன்கு மதிப்புடன் அழகு மிளிரும் உன்னத மாளிகைகளில் வேயப்பெற்றவை.

இலங்கை இந்தியா முதலிய கீழைத்தேசங்களில் அனலுக்கும் குளிருக்கும் நலனுக்கும் பேலனுக்கும் பாவனைக்கும் மாதிரிக்கும் ஏற்புடைத்தாய், அழகும் அழுத்தமும் படிவும் மலிவும் மிருதுவும் மேன்மையுமுள்ளதேனப் பரீட்சித்த பலர் கண்ட சிறப்பும் தீர்க்கமுமுள்ள ஓடுகள் இவைகளே.

பவுண்மார்க் ஓடுகளெனச் சொல்லி மற்றைய ஓடுகளைக் காட்டும் போதும் சில பவுண்மார்க் ஓடுகளை இடையிடையே குறிப்பாக வைத்திருந்து எடுத்துக் காட்டித் தமது ஓடுகளை விற்பவரிடமும் கவனமாயிருங்கள். பவுண்மார்க் ஓடுகளின் ஏசண்டுகள் நாங்களே.

இங்ஙனம்

### சி. வீரகத்திப்பிள்ளை அன்டு சன்ஸ்

(இவை விற்குமிடங்கள்)

யாழ்ப்பாணம் { பெரியகடை, பறங்கித்தெரு }
பருத்தித்துறை ....
வல்வெட்டித்துறை
காங்கேயன்துறை
} சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்

காரைநகர் .... .... சி. க. ஆறுமுகம்பிள்ளை
ஊர்காவற்றுறை .... பி. ம. தம்பிஐயா அன் சன்ஸ்

(103) 23-9-34.

விலை நிதானம்! நயம் சரக்கு!

## எங்கே?

யாழ்ப்பாணம் பெரியகடை
கெங்காசத்திரத்திற்கு மேற்குப்பக்கமாய் இருக்கும்

### மூ. குமாரசாமிப்பிள்ளை கடையில்

நெல், அரிசி முதலிய தானியவகைகளும்,
கயிற்றுவகைகளும், நூல், வாளியும்
பலவிதமான சாய்ப்புச்சாமான்களும்

விலை நிதானமாயும் நயம் சரக்காயும் கிடைக்கும்.

திறம் இங்கிலீஷ்மேக்குடைகளும், யப்பான்குடைகளும் குறைந்த விலையில் ஏராளமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கம் தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மூ. குமாரசாமிப்பிள்ளை,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

(22) 19-2-24

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்—மயிலிட்டி தெற்கு "திருமகள் நிலைய" த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் "தலையாட்டி" யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1935-ம் ஆண்டு செப்டெம்பர் மீ 22-ந் உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.